பாரதியாரின்
நகைச்சுவையும் நையாண்டியும்

தொகுத்து எழுதியவர் :

செந்தமிழ்ச் செல்வர்

ம. ப. பெரியசாமித் தூரன்

வானதி பதிப்பகம்

தி.நகர் · சென்னை-17

முதற் பதிப்பு : நவம்பர், 1980

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 6 - 50

மாருதி பிரஸ் 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-600 014.

அணிந்துரை

'கவியின் இதயம் கவிக்குத்தான் புரியும்' என்ற தமிழ் முதுரைக்கு அத்தாட்சி ஏதாவது வேண்டுமென்றால் பெரியசாமித் தூரன் அவர்கள் எழுதியுள்ள "பாரதியாரின் நகைச்சுவையும் நையாண்டியும்" என்ற கட்டுரைத் தொகுதியைப் படிக்கலாம்.

பெரியசாமித் தூரன் அவர்கள் உரைநடையில் மட்டுமல்ல, சிறந்த சாகித்யங்களைப் புனைவதிலும் சிறந்தவர் என்பது அனைவரும் அறிந்த விஷயம். அவர் பாடல்கள் இன்றும் பல வித்வான்களால் பெரிய கச்சேரிகளில் பாடப்பெற்று வருகின்றன. இத்தனைக்கும், தூரன் அவர்கள் எளிய மனமும் அடக்கமும் படைத்தவர். 'வித்தைச் செருக்கு அவருக்கு அணுவளவும் கிடையாது. தான் எழுதியதுதான் சரி என்ற எண்ணமும் இருந்ததில்லை.

பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு சிறு சம்பவம் இப்பொழுது எனது நினைவுக்கு வருகிறது. என்னை எப்பொழுது பார்க்கலாம் என்று தூரன் அவர்கள் கேட்டனுப்பினார். ஒரு குறிப்பிட்ட தினத்தில் அவர் இன்னொருவருடன் என் இல்லம் வந்தார். கூட வந்தவர் ஒரு சங்கீத வித்வான். "என் பாட்டுகளை நீங்கள் கேட்கவேண்டும்" என்று தூரன் அவர்கள் கேட்டார். அந்த வித்வான் பாட, தூரன் அவர்கள் இயற்றிய பாடல்களைக் கேட்டேன். சொற்செறிவும் கருத்துச் செறிவும் நிறைந்த பாடல்கள் அவை.

அவற்றைத் தூரன் அவர்களே பாடிக் காட்டியிருக்கலாம். ஆனால், தனக்கு பூர்ணமாகத் தெரியாத எதிலும் காலடி வைக்காத குணத்தால் அவர் வித்வானை விட்டுப் பாடச் சொன்னார். இந்த அடக்கம் அநேகருக்குக் கிடையாது. தங்கள் சாகித்யங்களைத் தாங்களே பாடிக்காட்டி என்னை இம்சை செய்தவர்கள் உண்டு. ஆனால் கவிஞரான தூரன் அவர்கள் தமது எல்லையைவிட்டுத் தாண்டியதில்லை. அந்த எல்லை பெரிது; ஆழமுடையது. அத்தகைய சாகித்யங்கள் தமிழுக்குப் பெரிதும் மணமூட்டுகின்றன.

சங்கீதத்தில் கானரஸம், சாகித்யரஸம் என இரண்டு உண்டு. அவை இரண்டில் சாகித்யத்தைப் பெரிதாக சமஸ்கிருத சாடு சுலோகம் ஒன்று சொல்லுகிறது.

"சிசுர் வேத்தி பசுர் வேத்தி வேத்தி கானரஸம் பணீ
ஸாகித்ய ரஸமாதுர்யம் ஸர்வக்ஞோ வேத்திவா நவா"

"கானரஸத்தைச் சிறு குழவியறியும், விலங்கு அறியும், பாம்பறியும். ஆனால் ஸாகித்ய ரஸத்தின் மதுரத்தை ஸர்வக்ஞனான ஈசுவரனும் அறிவானோ மாட்டானோ" என்று சாகித்யத்தின் மேன்மையை மேற்படி சுலோகம் சொல்கிறது. சிறந்த சாகித்யமும் கவிதைதான். அதை இயற்றுபவர் கவிதான். அப்பேர்ப்பட்ட கவிகளில் சிறந்த ஒருவரான தூரன் அவர்கள் மஹாகவி பாரதியாரின் கவிதைகளின் உட்பொருள் களை விளக்க வந்தது மிகவும் பொருத்தம்.

இந்த நூலில் பெரியசாமித் தூரன் அவர்கள் பாரதியாரின் கவிதைகளில் மட்டுமின்றி உரைநடைக் காப்பியத்திலுள்ள நகைச்சுவையையும் நையாண்டியையும் மிகத் தெளிவாக எடுத்து விளக்குகிறார். பல இடங்களில் 'அவசியத்தை முன்னிட்டு தமது விளக்கத்துடன் பாரதியாரின் கவிதைகளை யும், உரைநடைப் பகுதிகளையும் நீளநீளமாக அப்படியே போட்டு பாரதியாரின் நகைச்சுவையையும் நையாண்டியையும் நம்மை அனுபவிக்கச் செய்கிறார். உதாரணமாக "நடிப்புச்

சுதேசிகள்" (பக்கம் 15), பாரத ஜனங்களின் தற்கால நிலைமை (பக்கம் 22), உல்லாஸசபை (பக்கம் 54) இவற்றை கவனிக்கவும்.

இந்த நூலில் நாம் சிறந்த கருத்துக்களை ரசிக்கிறோம். எலிக்குஞ்சு செட்டியார், ஜிங்காமியா சேட், குண்டுராயர் போன்ற விநோதப் பிருகிருதிகளையும் சந்திக்கிறோம்.

இந்த நூலில் நையாண்டி, நகைச்சுவை, இவை மட்டுமல்லாமல் பாரதியாரின் சிறந்த சில 'கோட்பாடுகளையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார் ஆசிரியர். "ஸ்திரீகள் பதிவிரதைகளாக இருக்கவேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறார்கள். அதிலே கஷ்டம் என்னவென்றால், ஆண்பிள்ளைகள் யோக்கியர்கள் இல்லை" என்று பாரதி திட்டவட்டமாக அறிவிக்கும் கட்டுரைப்பகுதிகளை எடுத்துக் காட்டுகிறார் நூலாசிரியர்.

பெரியசாமித் தூரன் அவர்கள் நூலைப்பற்றி இன்னும் எத்தனையோ எழுதலாம். அப்படி எழுதினால் இந்த முன்னுரை தனி நூலாகும் என்ற அச்சத்தால் இதை இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

நையாண்டிக்கு ஆங்கிலத்தில் இரு சொற்கள் உண்டு. ஒன்று Satire. இன்னொன்று Irony. Irony is the humour of Satire என்று Irony—க்கு ஆங்கிலத்தில் பொருள் கூறப்படுகிறது. இந்த நூலில் இரண்டுமே கலந்திருப்பதால் நூலின் சுவை அதிகமாயிருக்கிறது.

பெரியசாமித் தூரன் என்ற வண்டு பாரதியாகிய மலர்களிலிருந்து தேனைத்திரட்டி இக்கட்டுரைத் தொகுதியாகத் தந்திருக்கிறது. அந்த இன்பத்தேன் காதில் மட்டுமின்றி மனத்துள்ளும் பாயும் வகையில் அனுபவிக்க வேண்டியது தமிழர் கடமை.

தமிழில் நாவல்கள், சிறு கதைகள் நிரம்ப இருக்கின்றன. கட்டுரைகள் குறைவு. அந்தக் குறையை நிறைவு செய்கிறது பெரியசாமித் தூரன் அவர்களின் "பாரதியின் நகைச்சுவையும்

நையாண்டியும்.'' அவர் நீடூழி வாழ்ந்து இம்மாதிரி மேலும் நூல்களைக் கொணர்தல் வேண்டும்.

நல்ல நூல்களை வெளியிடுவதையே வாழ்க்கை நோக்க மாகக் கொண்ட வானதி திருநாவுக்கரசுதான் இந்த நூலையும் பதிப்பித்திருக்கிறார். இம்மாதிரி இன்னும் பல நூல்களை அவர் தொடர்ச்சியாகப் பதிப்பித்துத் தமிழ் மொழிக்குச் சிறப்புச் செய்ய வேண்டும் என்பது எனது அவா.

28-10-80
சென்னை—17

சாண்டில்யன்

முன்னுரை

புதுச்சேரியிலே பாரதியார் வாழ்ந்திருந்த நாளிலே 1916ம் ஆண்டு நவம்பர் 'மாதம் 22ம் தேதியன்று ஓர் பயங்கர மான புயல் வீசிற்று.

பாரதியார் எழுதுவதுபோல ஊழிக்காற்று;—படீல், படீல், படீல்.

வீடுகள் இடிந்து விழுகின்றன, மரங்கள் சாய்கின்றன. இது மருத்துக்களின் களியாட்டம் என்கிருர் நமது கவிஞர்.

பூமியே நடுங்குவதுபோல இருந்ததாம். இத்தனை அழிவுக்கு இடையிலும் பாரதியாரின் சிரிப்பும், தமாஷூம் குறையவில்லை. திக்குகள் 'எட்டும் சிதறி' என்று தொடங்கும் புகழ்பெற்ற கவிதை உருவாகின்றது. அந்தக் கவிதை வரிகளை உணர்ச்சி யோடு பாடினுல் புயல் காற்று வீசுவதும்,

"கூகூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா—என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்."

என்கின்ற பெரும் புயலையும், மழையையும் நேரே கண்முன்பு காணலாம்.

பாரதியாருக்கு இரண்டு இடங்களிலே கோபம் பொங்கி எழுந்து வரும். தமிழை இழிவாகப் பேசிவிட்டால் எரிமலை போல வெடித்து விடுவார் நம் கவிஞர். தமிழ் என்ற கட்டுரையிலே, இந்துக் கல்லூரி பேராசிரியராக விளங்கும் நீலகண்ட ஐயரை அதல பாதாளத்திற்கு இறக்கி விடுகின்ற

நிலையைப் பார்க்கிறோம். பெண்களை இழிவு படுத்தினாலும் பாரதியார் நெருப்பாக மாறிவிடுவார். அதைப் பாஞ்சாலி சபதத்திலே திரௌபதியின் கூந்தலைப் பிடித்து இழுத்துக் கொண்டு செல்கிற அவல நிலையிலே பார்க்கிறோம்.

பாரதியார் தமது இலக்கியப் படைப்புகளிலே வீரம், பக்தி, சிருங்காரம் முதலிய நவரசங்களையும் கையாள்கின்றார். பெரும்பாலும் இந்தச் சுவைகளே மிக அழுத்தமாக வருகின்றன. ஆனால் இதைத்தவிர நகைச்சுவை, கிண்டல், நையாண்டி, வஞ்சப் புகழ்ச்சி, எள்ளித் திருத்துதல் ஆகியவற்றையும் ஏற்ற இடங்களில் மிகப் பொருத்தமாகக் கையாள்வதை நாம் பார்க்கிறோம்.

இடிப்பள்ளிகூடத்து பிரம்மராய ஐயர் பிராயச்சித்தம், கடற்பாலத்திலே வர்ணாச்ரம சபை முதலிய கட்டுரைகளிலே தம் கருத்துக்களை பிறர்மேல் ஏற்றிச் சொல்வதும் உண்டு. பிராயச்சித்தம் என்ற கட்டுரையிலே, "தள்ளுங்காணும்! பிராயச்சித்தமாவது, வெங்காயமாவது! நான் ஏதோ உதர நிமித்தமாக இந்த வைதிகத்தை விடமுடியாமல் கட்டுப்பட்டு கிடக்கிறேன். இதில் மற்றவர் வந்து சேர்வதிலே எனக்கு ஸம்மதமில்லை" என்று வெளிப்படையாகச் சொல்லுகிறார். இவ்வாறு வெளிப்படையாக 1920ம் ஆண்டுக்கு முன்னாலே சொல்லுவதற்கு எவ்வளவு துணிச்சல் வேண்டும்! எவ்வளவு தீர்க்கதரிசனமும் வேண்டும்! இப்பொழுதெல்லாம் வெளிநாடு சென்று திரும்புகின்றவர் பிராய சித்தத்தை நினைப்பது கிடையாது.

பாரதியார் ஆசார திருத்த மஹாசபையின்மேல் மிகவும் நம்பிக்கை வைத்திருந்தார். ஏனென்றால் அரசியல் சீர்திருத்தங்கள் என்றால் அதற்கு அன்னிய அரசாங்கத்தின் ஒப்புதல் வேண்டும். சமூக சீர்திருத்தம் செய்து கொள்ளுவதற்கு அவ்வாறு வேண்டியதில்லை. ஆனால் இங்கும் மேடையிலே சண்டப் பிரசண்டமாகப் பொழிந்து விட்டு, தமது வாழ்க்கையில் யாதொன்றையும் கடைப்பிடிக்காமல் இருப்பவர்களுக்கு ஓர்

எச்சரிக்கை விடுகின்ருர். "உன்னுல் செய்யக்கூடியது என்ன அதை முதலில் சொல். அடுத்த ஆண்டு கூடுவதற்குள் என்ன சீர்திருத்தங்கள் நடைமுறையில் கொண்டு வந்திருக்கிருய்" என்று கண்டிப்பாக ஆராய வேண்டும் என்கிருர் பாரதியார். வானத்தை வில்லாக வளைக்கலாம் என்று பேசிவிட்டு ஒன்றும் செய்யாமல் இருப்பவரை இவ்வாறு கிண்டல் செய்கிருர்.

பொதுவாகக் கூறுவோமாளுல் பாரதியாரிடம் உண்மையான நகைச்சுவை மலிந்திருக்கிறது. இத்தனை துன்பங்களை அனுபவித்துக்கொண்டும் அவை நன்ருக யாவரும் என்றும் சுவைக்கும்படியாக வெளிப்படுகின்றன என்று சொல்லவே தோன்றுகின்றது. நகைச்சுவை அற்றவர் இந்தியர்கள் என்ற அவச் சொல்லையும் நீக்குவதிலும் முன்னேடியாக விளங்குகின்ருர் நமது மகாகவி பாரதியார்.

ம. ப. பெரியசாமித் தூரன்

பொருளடக்கம்

		பக்கம்
பாரதியாரின் நகைச்சுவையும் நையாண்டியும்	...	9
பாரத ஜனங்களின் தற்கால நிலைமை	...	22
சாஸ்திரியார் மகன்	...	38
வெனிஜிலாஸின் கதி	...	47
பாரதியாரும் அரசியலும்	...	50
உல்லாஸ சபை	...	54
பொழுது போக்கு	...	60
வேடிக்கைப் பெயர்கள்	...	64
மாதர்	...	66
ருதுவானபிறகு கலியாணம்	...	72
பெண்ணுக்கு மரியாதை	...	72
பதிவிரதை	...	74
மானங்கெட்ட தோல்வி	...	75
பெண் விடுதலை (1)	...	77
பெண் விடுதலை (2)	...	83
தமிழ்	...	87
காந்தாமணி	...	90
பிராயச்சித்தம்	...	99
பாரதியாரும் பாட்டும்	...	106
ஊரே யஜமானன்	...	108
உங்கள் சிவன் வழியே வருவதில்லை	...	109

தீயர்களுடைய சிவன் ... 109
பாரதியாரும் ஆசாரதிருத்த மஹாசபையும் ... 110
உண்மையான பிராமணன் யார் ... 115
போலிப் பெரிய மனுஷத்தன்மை ... 120
எதிர் ஜாமீன் அல்லது மாப்பிள்ளை விலை ... 121
பாரதியாரும் சின்னச் சங்கரன் கதையும் ... 123
வஞ்சனை செய்து ஜீவிப்பவன் நரி ... 124
இந்தியாவில் விதவைகளின் பரிதாபகரமான நிலைமை ... 126
ஸ்ரீமான் காந்தி சொல்லும் உபாயம் ... 129
அன்மொழித் தொகை ஹாஸ்யம் ... 133
பாரதியாரும் தமிழும் மாதரும் ... 132

பாரதியாரின்
நகைச்சுவையும் நையாண்டியும்

பாரதியார் ஓர் அற்புதமான மனிதர்; அவரை மேதை என்றும் சொல்லலாம்; மஹாகவி என்றும் சொல்லலாம்; வாராது போல வந்த மாமணி என்றும் சொல்லலாம்.

நெடுநாள் உறங்கிக்கொண்டிருந்த தமிழகத்தைத் தட்டி எழுப்பியவர் பாரதியார். தமிழிலே ஒரு புதிய மலர்ச்சி, ஒரு புதிய வேகம் உண்டாக்கியவர் பாரதியார். அதனால்தான் மஹாகவியென்றும், வாராது போல வந்த மாமணியென்றும் சொல்லுகிறோம். 1904 வாக்கில் சுதேசமித்திரனில் ஓர் உதவி ஆசிரியராக சொற்பச் சம்பளம் பெற்றுக்கொண்டு அமர்ந்தார் நமது கவிஞர். 1921லே மறைந்துவிட்டார். ஆகவே, 17 ஆண்டுகளே அவர் தமிழ்ப் பணி புரிந்திருக்கிறார். அதிலும் சுமார் பததாண்டுகளுக்கு மேலாகப் புதுவையிலே தஞ்சம்புகுந்து எத்தனையோ துன்பங்கள் அனுபவித்தார். இந்தக் குறுகிய காலத்திற் குள்ளாகவே அவர் தமிழ்நாட்டைத் தட்டியெழுப்பி விட்டார், தமிழிலே ஒரு புதிய மறுமலர்ச்சி உண்டாக் கினார் என்று சொன்னால், பாரதியாரை மஹாகவியென்று ஏன் சொல்லக்கூடாது ?

சி. சுப்பிரமணியபாரதியார் பெரிய தனவந்தர் அல்ல இருந்தாலும், இந்தியா போன்ற வார இதழுக்கும் இன்னும் பல இதழ்களுக்கும் அவர் ஆசிரியராகப் பொறுப் பேற்று உற்சாகத்துடன் நடத்திவந்திருக்கிறார். அவருடைய உற்சாகத்திற்கு அளவேயில்லை. இந்தியா வாரஇதழ் மூலமும், கவிதைகளாலும், கட்டுரைகளாலும், கதை களாலும் ஒரு பெரிய வலிமைவாய்ந்த பிரிட்டிஷ் சாம்ராஜ் யத்தையே எதிர்த்துப் போரிடத் துணிந்திருக்கிறார். திரு. எஸ். ஜி. ராமனுஜலு நாயுடு அவர்கள், தமது "சென்றுபோன நாட்கள்" என்ற பாரதியாரது நினைவுக் குறிப்பிலே, "இந்தியா வாரஇதழ் நெருப்புமழை பொழிய லாயிற்று" என்று எழுதியுள்ளார். ஒரு வலிமைவாய்ந்ததும் "எங்களுடைய பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலே சூரியன் அஸ்தமிப்பதேயில்லை" என்று மார்தட்டிப் பெருமைபேசிக் கொள்ளும்படியாகவும் இருந்த அந்நிய ஆதிக்கம் சும்மா பார்த்துக் கொண்டிருக்குமா? உடனே அதன் முழு அடக்கு முறையும் கையாளலாயிற்று. இந்தியா வார இதழ் ஆசிரியரான திரு. ஸ்ரீனிவாசன் கைதி செய்யப்பட்டார். பாரதியார் உண்மையில் இந்தியா வாரஇதழின் ஆசிரியராக இருக்கவில்லை. ஆகவே தப்பினார். ஆனால், ஸ்ரீசுப்பிரமணிய பாரதியாரையும் கைது செய்ய முயற்சிகள் நடந்தன. இதை அறிந்த பாரதியாரின் நண்பர்கள்ஒன்று கூடி ஆலோசனை செய்தார்கள். பாரதியார் பிரன்ஞ்சு ராஜ்யமான பாண்டிச்சேரிக்குத் தப்பிச் செல்வது நல்லது என்றும், அங்கிருந்துகொண்டு தமிழ்ப்பணி செய்யலா மென்றும் தீர்மானம் ஆயிற்று.

பாரதியார் இவ்வாறு பாண்டிச்சேரிக்கு 1908-ஆம் ஆண்டில் தப்பிச் சென்றார். இந்தியா வாரஇதழ் மீண்டும் வெளிவரலாயிற்று. அதன், வேகமோ தாக்குதலோ குறையவில்லை.

ஆகவே, பிரிட்டிஷ் அரசாங்கம் மீண்டும் தன் கவரிசையைக் காண்பிக்கலாயிற்று. இந்திய வாரஇதழ் மிழகத்திற்கு வரக்கூடாதென்று சட்டம் செய்தது. தனுல் பாரதியார் நடத்திய இந்தியா வார இதழ் ர்மயோகி, சூரியோதயம், விஜயா, பால பாரதம் மதலிய எல்லாப் பத்திரிக்கைகளும் ஆதரவு குறைந்த நால் நின்று போய்விட்டன. ஆனுல், பாரதியாருடைய ழுத்துப்பணி நின்றுபோகவில்லை. கண்ணன் பாட்டு, யிற்பாட்டு, பாஞ்சாலி சபதம், ஞானரதம் முதலிய பற்றை அவர் எழுதத் தொடங்கினுர்.

சுமார் பத்து ஆண்டுக்காலம் பாரதியாரும் அவர் டும்பமும் வறுமையால்பீடிக்கப்பட்டுப் பலதுன்பங்களுக்கு ஆளாகினர். 1915-ஆம் ஆண்டு ஜூலைமாதம் 2ஆம் தேதி சித்தக்கடல்' என்ற பாரதியார் குறிப்பிலே இது நன்கு தெரிகின்றது. இவர் எழுதுகின்ருர்:

"மண்ணையும், காற்றையும், கடலையும் எத்தனை யுகங்கள் ஒரே வடிவத்தில் வைத்துக் காப்பாற்றுகிருய்! பராசக்தீ, எனது கருவி கரணங்களிலே நீ பரிபூர்ணமாக ஸந்நிதி கொண்டு என்னையும் அங்ஙனமே காக்க வேண்டும்.

இன்பமில்லையா?

பராசக்தீ, இந்த உலகத்தின் ஆத்மா நீ.

உனக்கு அறிவில்லையா? உனக்குக் காது கேட்காதா? நாள்தோறும் உன்மீது பாட்டுப் பாடுகிறேன். நான் கேட்கும் வரங்களையெல்லாம் கொடுத்துவிடக் கூடாதா?

முதலாவது, எனக்கு என்மீது வெற்றிதர வேண்டும். குழந்தைக்கு ஜ்வரம் வந்தது. நினது திருவருளால் குணமாய்விட்டது. இரண்டு மாதகாலம் இரவும் பகலு

மாக நானும் செல்லம்மாளும் புழுத் துடிப்பதுபோல துடித்தோம். ஊண் நேரே செல்லவில்லை; இருவருக்கும் உறக்கம் நேரே வரவில்லை—இருவருக்கும் எப்போது சஞ்சலம், பயம், பயம், பயம்! சக்தீ, உன்னை நம்பி தானிருந்தோம். நீ கடைசியாகக் காப்பாற்றினாய் உன்னை வாழ்த்துகிறேன்.

கடன்காரர் தொல்லையும் அத்துடன் வந்து கலந்தது வைத்தியனுக்குக் கொடுக்கப் பணமில்லை. குழப்பம் குழப்பம்—தீராத குழப்பம்! எத்தனை நாட்கள்! எத்தனை மாதங்கள்! எத்தனை வருஷங்கள்!

பராசக்தீ, ஓயாமல் கவிதை எழுதிக்கொண்டிருக்கும் படி திருவருள் செய்யமாட்டாயா? கடன்களெல்லாம் தீர்த்து, தொல்லையில்லாதபடி என் குடும்பத்தாரும் என்னைச் சார்ந்த பிறரும் வாழ்ந்திருக்க, நான் உன் புகழை ஆயிரவிதமான புதியபுதிய பாட்டுக்களில் அமைக்க விரும்பு கிறேன். உலகத்தில் இதுவரை எங்குமில்லாதபடி அற்புத மான ஒளிச் சிறப்பும், பொருட் பெருமையும் உடைய பாட்டொன்று என் வாயிலே தோன்றும்படி செய்ய வேண்டும்.

தாயே, என்னைக் கடன்காரர் ஓயாமல் வேதனைப் படுத்திக்கொண்டிருந்தால், நான் அரிசிக்கும், உப்புக்கும் யோசனை செய்து கொண்டிருந்தால்—உன்னை எப்படிப் பாடுவேன்?

மனைவியைப் பிரிந்து செல்லும்படி சொல்வதில் பயனில்லை. அவளும் உனது சரணையே நம்பி, என்னுடன் எப்போதும் வாழ்ந்துகொண்டு, உனது தொழும்பிலே கிடைக்கும் புகழில் பங்குபெற்று மேன்மையுற விரும்பு கிறாள். இயன்றவரை உண்மையோடு தானிருக்கிறாள். அவளையும் நீ ஸம்ரக்ஷணை செய்யவேண்டும்.

அவளுக்கு நோயின்மை, கல்வி, கவலையின்மை, பக்தி, ஞானம் முதலிய சோபனங்களெல்லாம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

குழந்தையை உனது குழந்தையாகக் கருதி, இவ்வுலகத்தில் நீடித்துப் புகழுடன் வாழும்படி திருவருள் செய்ய வேண்டும். காசியிலிருக்கும் குழந்தையையும் நீதான் காப்பாற்ற வேண்டும்.

எனது குடும்ப பாரமெல்லாம் உன்னைச் சேர்ந்தது. உன்னைப் புகழ்ச்சி புரியும் தொழில் என்னைச் சேர்த்தது. தாயே, ஸம்மதந்தானா?

மஹா சக்தீ! என்னுள்ளத்தில் எப்போதும் வற்றாத கவிதையூற்று ஏற்படுத்திக் கொடு.

ஓயாமல் வியாதிபயம் கொண்டு உளைகின்ற நெஞ்சமே! தூ! தூ! கோழை.

புகையிலை வழக்கம் தொலைந்து விட்டது. பராசக்தியின் அருளால். இனிக்'கஸரத்' வழக்கம் ஏற்பட வேணும், பராசக்தியின் அருளால், தோள் விம்மி வயிரம் போலாக வேணும். நெஞ்சு விரிந்து, திரண்டு வலிமையுடையதாக வேணும். இரத்தம் மாசு தீர்ந்து, நோயின்றி நன்றாக ஓடி உடலை நன்கு காத்துக் கொண்டிருக்க வேணும்—பராசக்தியின் அருளால்.

செட்டி பணத்துக்கு எத்தனை நாள் பொய் சொல்லுவது? பொய் வாயிதா, பொய் வாயிதா, பொய் வாயிதா—தினம் இந்தக் கொடுமைதானா? சீச்சீ!

பராசக்தி— உன்னை நான் நம்புவதை முற்றிலும் விட்டு, நிச்சயமாக நாஸ்திகனாய் விடுவேன், நீ என்னை இப்படித் தொல்லைகளுக்கு உட்படுத்திக் கொண்டேயிருந்தால்.

மஹாசக்தி— நீயிருப்பதை எவன் கண்டான்? உன அறிவுண்டென்பதை எவன் கண்டான்? இந்த உலகம்— சரி, இப்போது உன்னை வையமாட்டேன், என்னை காப்பாற்று. உன்னைப் போற்றுகின்றேன்.

பிறருக்கு நான் தீங்கு நினையாதபடி நீ அருள் புரிந்து நல்லது. துஷ்டர்களைக்கூட நீ தண்டனை செய கொள். எனக்கு அதிலே ஸந்தோஷமில்லை. எனக் பிறர் செய்யும் தீங்குகளை நீ தவிர்க்க வேண்டும். நா உன்னையே சரணடைந்திருக்கிறேன்.

சொல்லு! மனமே, சொல்லு, பராசக்தி வெல் பராசக்தி வெல்க.''

இந்தக் குறிப்பு கவிஞர் பாரதியாரின் வறுமை பிணியை ஒரளவு நன்கு காட்டுகின்றது.

உண்மையான கவிஞரின் உள்ளம் மிக மிக மென்ன யானது. அதாவது ஒரு துன்பத்தைப் பூதக்கண்ணுடிபோ நூறு மடங்கு ஆயிரம் மடங்கு பெருக்கிக்காட்டும் இய புடையது. ஆகவே இதிலிருந்து பாண்டிச்சேரி வாழ்க்கை எவ்வளவு துன்பமானது என்று ஊகித் அறியலாம். வறுமைத் துன்பத்தை எவ்வாறு பொறுத்த கொண்டாரோ அறியோம். காந்தியடிகள் ஒருசமயத்தி சொன்னார்: "நான் நகைச்சுவை ஒன்றுமட்டும் இல்லா போனால், எப்பொழுதோ தூக்கிட்டுக் கொண்டிருப்பேன் என்று. ஒருவேளை பாரதியாரையும் நகைச்சுவையு நையாண்டியும் கிண்டலும் இல்லாது போனால் அ உயிர் தரித்திருக்கவே மாட்டார் என்று ஊகித்து அறி லாம். அவருடைய இயல்பான இந்த நகைச்சுவைதா அவரைக் காப்பாற்றிக் கொண்டிருந்திருக்க வேண்டு என்றும் உணரலாம்.

பாரதியாருடைய கட்டுரைகளிலும், கவிதைகளிலும் இந்த நகைச்சுவை மிக அழகாகப் பளிச்சிடுவதை உணர்ந்து என்றும் அனுபவிக்கலாம்.

நகைச்சுவை என்றால் சாதாரணமானது அல்ல; அவை என்றும் இன்பமளிக்கக் கூடியவை. பழித்து அறிவுறுத்த வேண்டும் என்று நினைத்தால் ஒரே அடியாகப் பழித்து விடுவார். நையாண்டி செய்வதென்றால் அதள பாதாளத்தில் ஒரே அடியாக அமிழ்த்து விடுவார்.

இத்தனைக்கும் அவர் சூதுவாது தெரியாதவர். கோபம் வந்துவிட்டால் இடி இடித்துவிடும். தப்பவே முடியாது. மறுகணம் அதை மறந்து விடுவார். மீண்டும் உற்சாகம் கொடுப்பார். எப்படியாவது தூங்கிக் கொண்டிருந்த தமிழகத்தைத் தட்டி எழுப்ப வேண்டும் என்று ஆசை கொள்கின்றார் கவிஞர்.

"நெஞ்சில் உரமுமின்றி' என்ற கிளிக் கண்ணியைப் பாருங்கள். பழித்து அறிவுறுத்துவதாக இக் கவிதை எழுதப்பட்டுள்ளது.

நடிப்புச் சுதேசிகள்
(பழித்தறி வுறுத்தல்)
கிளிக் கண்ணிகள்.

1. நெஞ்சில் உரமு மின்றி
நேர்மைத் திரமு மின்றி,
வஞ்சனை சொல்வாரடீ! —கிளியே!
வாய்ச் சொல்லில் வீரரடீ!

2. கூட்டத்திற் கூடி நின்று
கூவிப் பிதற்ற லன்றி,
நாட்டத்திற் கொள்ளாரடீ! —கிளியே!
நாளில் மறப்பாரடீ!

3. சொந்த அரசும் புவிச்
சுகங்களும் மாண்பு களும்
அந்தகர்க் குண்டாகுமோ!—கிளியே!
அலிகளுக் கின்ப முண்டோ?

4. கண்கள் இரண்டிருந்தும்
காணுந் திறமை யற்ற
பெண்களின் கூட்டமடீ! —கிளியே!
பேசிப் பயனென்னடீ!

5. யந்திர சாலை யென்பர்
எங்கள் துணிகளென்பர்
மந்திரத் தாலே யெங்கும் —கிளியே!
மாங்கனி வீழ்வ துண்டோ?

6. உப்பென்றும் சீனி என்றும்
உள் நாட்டுச் சேலை என்றும்
செப்பித் திரிவாரடீ!—கிளியே!
செய்வ தறியாரடீ!

7. தேவியர் மானம் என்றும்
தெய்வத்தின் பக்தி என்றும்
நாவினாற் சொல்வ தல்லால்!—கிளியே!
நம்புத லற்றாரடீ!

8. மாதரைக் கற்பழித்து
வன்கண்மை பிறர் செய்யப்
பேதைகள் போலுயிரைக்!—கிளியே!
பேணி யிருந்தாரடீ!

9. தேவி கோயிலிற் சென்று
தீமை பிறர்கள் செய்ய
ஆவி பெரிதென் றெண்ணிக்!—கிளியே!
அஞ்சிக் கிடந்தாரடீ!

10. அச்சமும் பேடிமையும்
அடிமைச் சிறுமதியும்
உச்சத்திற் கொண்டாரடீ!—கிளியே!
ஊமைச் சனங்களடீ!

11. ஊக்கமும் உள்வலியும்
உண்மையிற் பற்றுமில்லா
மாக்களுக்கோர் கணமும்—கிளியே!
வாழத் தகுதி யுண்டோ?

12. மானம் சிறிதென் றெண்ணி
வாழ்வு பெரிதென் றெண்ணும்
ஈனர்க் குலகந் தனில்!—கிளியே!
இருக்க நிலைமை யுண்டோ!

13. சிந்தையிற் கள்விரும்பிச்
சிவசிவ வென்பது போல்,
வந்தே மாதர மென்பார்!—கிளியே!
மனதிலதனைக் கொள்ளார்.

14. பழமை பழமை யென்று
பாவனை பேசலன்றிப்
பழமை இருந்த நிலை!—கிளியே
பாமர ரேதறிவார்!

15. நாட்டில் அவ மதிப்பும்
நாணின்றி இழி செல்வத்
தேட்டில் விருப்புங் கொண்டே!—கிளியே!
சிறுமை யடைவாரடீ!

16. சொந்தச் சகோதரர்கள்
துன்பத்திற் சாதல் கண்டும்,
சிந்தை இரங்காரடீ!—கிளியே!
செம்மை மறந்தாரடீ!

17\. பஞ்சத்தும் நோய்களிலும்
பாரதர் புழுக்கள் போல்
துஞ்சத்தம் கண்ணுற் கண்டும்!—கிளியே!
சோம்பிக் கிடப்பா ரடீ!

18\. தாயைக் கொல்லும் பஞ்சத்தைத்
தடுக்க முயற்சி யுறார்
வாயைத் திறந்து சும்மா!—கிளியே!
வந்தே மாதர மென்பார்.

காதல் என்றும் உள்ளது. அது மனிதனுக்கும் விலங்குகளுக்கும் அதனதன் இயல்புகளுக்கேற்ப அமைந்திருப்பது.

இங்கே குயிலுக்கும், குரங்குக்கும், மாட்டுக்கும் காதல் நடைபெறுகின்றது. அதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால், குரங்கு, மாடு இவைகளிடம் எதைக் கண்டு காதல் கொள்கிறேன் என்று குயில் சொல்லுவது அழியாத நகைச்சுவை யூட்டுவதாக இருக்கின்றது. கவிஞன் ஒரு காலையிலே மாஞ்சோலை தேடிச் செல்கின்றான். குயில் இனிமையாகப் பாடிக் கொண்டிருக்கிறது. அதனாலே, காதல் கொண்ட கவிஞன் மறுநாளும் அதே நினைவாகக் குயிலைத் தேடித் திரிகின்றான். கவிஞனிடத்திலே காதல் பேசுகின்ற குயில், குரங்கினிடத்திலே அதே காதல் மொழி பேசுகின்றது. கவிஞன் சற்று நின்று நிதானித்து என்ன பேசுகிறதென்று கேட்க விரும்புகின்றார்.

குயில் காதல் வர்ணனை நகைச்சுவை கொப்பளிப்பதாக அழியா அழகுடன் அமைந்திருப்பதை பாரதியாருடைய இனிமையான கவிதை வரிகளிலேயே கேட்போம்:

"வானரரே!
ஈடறியா மேன்மையழ கேய்ந்தவரே! பெண்மைதான்
எப்பிறப்புக் கொண்டாலும், ஏந்தலே! நின்னழகைத்

தப்புமோ? மையல் தடுக்குந் தரமாமோ?
மண்ணிலுயிர்க் கெல்லாந் தலைவரென மானிடரே,
எண்ணிநின்றார் தம்மை; எனிலொருகால் ஊர்வகுத்தல்,
கோயில், அரசு, குடிவகுப்புப் போன்ற சில
வாயிலிலே, அந்த மனிதர் உயர்வெனலாம்
மேனி யழகினிலும், விண்டுரைக்கும் வார்த்தையிலும்
கூனி யிருக்கும் கொலுநேர்த்தி தன்னிலுமே
வானரர்தஞ் சாதிக்கு மாந்தர் நிகராவாரோ?
ஆனவரையும் அவர் முயன்று பார்த்தாலும்,
பட்டுமயிர் மூடப் படாத தமதுடலை
எட்டுடையால் மூடி எதிருமக்கு வந்தாலும்,
மீசையையும் தாடியையும் விந்தைசெய்து வானரர்தம்
ஆசை முகத்தினைப் போலாக்க முயன்றிடினும்,
ஆடிக் குதிக்கும் அழகிலுமை நேர்வதற்கே
கூடிக் குடித்துக் குதித்தாலும், கோபுரத்தில்
ஏறத் தெரியாமல் ஏணிவைத்துச் சென்றாலும்,
வேறெத்தைச் செய்தாலும், வேகமுறப் பாய்வதிலே
வானரர்போ லாவரோ? வாலுக்குப் போவதெங்கே?
ஈனமுறுங் கச்சை இதற்கு நிகராமோ?
பாகையிலே வாலிருக்கப் பார்த்ததுண்டு, கந்தைபோல்;
வேகமுறத் தாவுகையில் வீசி எழுவதற்கே
தெய்வங் கொடுத்த திருவாலைப் போலாமோ?
சைவசுத்த போசனமும் சாதுரியப் பார்வைகளும்
வானரர்போற் சாதியொன்று மண்ணுலகின் மீதுளதோ?
வானரர் தம்முள்ளே மணிபோல உமையடைந்தேன்,
பிச்சைப் பறவைப் பிறப்பிலே தோன்றிடினும்
நிச்சயமா முன்புரிந்த நேமத் தவங்களினால்
தேவரீர் காதல்பெறுஞ் சீர்த்தி கொண்டேன்;
தம்மிடத்தே,
ஆவலினாற் பாடுகின்றேன், ஆரியரே கேட்டருள்வீர்!"

குயிலும் குரங்கும் செய்யும் நாடகம் பார்த்தோம். மறுநாள் காட்சி மாறுகின்றது. குயில் குரங்கை மறந்து விட்டது. அதற்குப் பதிலாக மாட்டின்மேல் காதல் கொள்கின்றது. எதனுல் காதல் கொண்டேன் என்பதையும் நகைச்சுவையோடு தெரிவிக்கின்றது! பாரதியார் வரிகளிலேயே அந்த மறக்கமுடியாத பாடலைக் கேட்போம்:

நந்தியே,
பெண்டிர் மனத்தைப் பிடித்திழுக்கும் காந்தமே!
காமனே! மாடாகக் காட்சி தரும் மூர்த்தியே!
பூமியிலே மாடுபோற் பொற்புடைய சாதியுண்டோ?
மானிடருந் தம்முள் வலிமிருந்த மைந்தர் தமை
மேனியுறுங் காளையென்று மேம்பா டுறப் புகழ்வார்.
காளையர்தம் முள்ளே கனமிகுந்தீர், ஆரியரே!
நீளமுகமும், நிமிர்ந்திருக்குங் கொம்புகளும்!
பஞ்சுப் பொதிபோல் படர்ந்த திருவடிவும்!
மிஞ்சுப் புறச்சுமையும், வீரத் திருவாலும்!
வானத் திடிபோல 'மா' வென் றுருமுவதும்,
ஈனப் பறவை முதுகின்மிசை ஏறிவிட்டால்
வாலைக் குழைத்து வளைத்தடிக்கும் நேர்மையும், பல்
காலம்நான் கண்டு கடுமோக மெய்திவிட்டேன்
பார வடிவும் பயிலுமுடல் வலியுள்
தீர நடையும் சிறப்புமே இல்லாத
சல்லித் துளிப்பறவைச் சாதியிலே நான் பிறந்தேன்.
அல்லும் பகலுநிதம் அற்ப வயிற்றினுக்கே
காடெல்லாஞ் சுற்றிவந்து காற்றிலே எற்றுண்டு.
மூட மனிதர் முடைவயிற்றுக் கோருணவாம்,
சின்னக் குயிலின் சிறு குலத்திலே தோன்றி
என்ன பயன் பெற்றேன்? எனைப்போலோர் பாவியுண்டோ?
சேற்றிலே தாமரையும் சீழுடைய மீன் வயிற்றில்
போற்று மொளிமுத்தும் புறப்படுதல் கேட்டிலிரோ?

நீசப் பிறப்பொருவர் நெஞ்சிலே தோன்றிவரும்
ஆசை தடுக்கவல்ல தாகுமோ? காமனுக்கே
சாதிப் பிறப்புத் தராதரங்கள் தோன்றிடுமோ?
வாதித்துப் பேச்சை வளர்த்தோர் பயனுமில்லை.
மூட மதியாலோ, முன்னைத் தவத்தாலோ
ஆடவர்தம் முள்ளே அடியாளுமைத் தெரிந்தேன்,
மானுடராம் பேய்கள் வயிற்றுக்குச் சோறிடவும்
கூனர்தமை ஊர்களிலே கொண்டு விடுவதற்கும்
தெய்வமென நீருருவி செய்த பின்னர், மேனிவிடாய்
எய்தி யிருக்கு மிடையினிலே, பாவியேன்
வந்துமது காதில் மதுரவிசை பாடுவேன்;
வந்து முதுகில் ஒதுங்கிப் படுத்திருப்பேன்;
வாலிலடிபட்டு மன மகிழ்வேன்' 'மா' வென்றே
ஓலிடுநும் பேரொலியோ டொன்றுபடக் கத்துவேன்:
மேனியிலே உண்ணிகளை மேவாது கொன்றிடுவேன்
கானிடையே சுற்றிக் கழனியெல்லாம் மேய்ந்து, நீர்
மிக்கவுண வுண்டுவாய் மென்றசைதான் போடுகையில்
பக்கத் திருந்து பல கதைகள் சொல்லிடுவேன்;
காளை யெருதரே! காட்டிலுயர் வீரரே!
தாளைச் சரணடைந்தேன், தையலெனைக் காத்தருள்வீர்,
காதலுற்று வாடுகின்றேன் காதலுற்ற செய்தியினை
மாத ருரைத்தல் வழக்கமில்லை என்றறிவேன்,
ஆனாலும் என்போல் அபூர்வமாங் காதல் கொண்டால்,
தானா வுரைத்தலின்றிச் சாரும் வழியுளதோ?
ஒத்த குலத்தவர்பால் உண்டாகும் வெட்கமெலாம்,
இத்தரையில் மேலோர்முன் ஏழையர்க்கு நாணமுண்டோ?
தேவர் முன்னே அன்புரைக்கச் சிந்தை வெட்கங்
கொள்வதுண்டோ?
காவலர்க்குத் தங்குறைகள் காட்டாரோ கீழடியார்?
ஆசை தான் வெட்கம் அறியுமோ?''

சுதந்திர வாழ்வு பெருத பாரத மக்களின் அன்றைய நிலைமையை எப்படியெல்லாம் கேலி செய்கின்றார் பாருங்கள்! உண்மையில் பாரதியாருக்குக் கேலி செய்வது நோக்கமல்ல. இடித்துரைத்து ரோஷம் கொள்ளச்செய்ய வேண்டுமென்பதே அவருடைய ஆவல். சிப்பாய்களைக் கண்டால் பயம், துப்பாக்கி வைத்துக்கொண்டு சென்றால் அதைவிட பயம் என்றிருந்த நிலைமை இன்று மாறி விட்டது, இருந்தாலும் பழைய நிலைமையை எண்ணி வயிறு வெடிக்கச் சிரிக்கலாம். அந்த முறையிலே இக்கவிதை பெரிதும் வரவேற்கத் தகுந்ததாகும். பாரதியார் கவிதை யையே நோக்குவோம். நெஞ்சு பொறுக்குதில்லையே, நெஞ்சு பொறுக்குதில்லையே என்று பாரதியார் திருப்பித் திருப்பிச் சொல்லும்பொழுது நமது நெஞ்சமும் பொறுக்க முடியாத அளவுக்கு அவமானத்தால் வேதனை அடை கின்றது.

பாரத ஜனங்களின் தற்கால நிலைமை (நொண்டிச்சிந்து)

1\. நெஞ்சு பொறுக்கு திலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்,
அஞ்சி யஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே;
வஞ்சனைப் பேய்கள் என்பார்—இந்த
மரத்தில் என்பார்; அந்தக் குளத்தில் என்பார்;
துஞ்சுது முகட்டில் என்பார்—மிகத்
துயர் படுவார் எண்ணிப் பயப்படுவார். (நெஞ்சு)

2\. மந்திரவாதி என்பார்—சொன்ன
மாத்திரத்தி லேமனக் கிலிபிடிப்பார்;
யந்திர சூனி யங்கள்—இன்னும்
எத்தனை ஆயிரம் இவர்துயர்கள்!

தந்த பொருளைக் கொண்டே—ஜனம்
தாங்குவர் உலகத்தில் அரசரெல்லாம்;
அந்த அரசியலை—இவர்
அஞ்சுதரு பேயென்றெண்ணி நெஞ்சம்
அயர்வார். (நெஞ்சு)

3. சிப்பாயைக் கண்டு அஞ்சுவார்—ஊர்ச்
சேவகன் வருதல்கண்டு மனம்பதைப்பார்;
துப்பாக்கி கொண்டு ஒருவன்—வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டிலொளிப்பார்;
அப்பால் எவனோ செல்வான்—அவன்
ஆடையைக் கண்டுபயந் தெழுந்து நிற்பார்;
எப்போதும் கைகட்டுவார்—இவர்
யாரிடத்தும் பூனைகள்போல் ஏங்கி நடப்பார்.
(நெஞ்சு)

4. நெஞ்சு பொறுக்குதிலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்,
கொஞ்ச மோபிரி வினைகள்?—ஒரு
கோடி என்றால் அது பெரிதாமோ?
ஐந்துதலைப் பாம்பென்பான்—அப்பன்
ஆறுதலை யென்றுமகன் சொல்லிவிட்டால்,
நெஞ்சு பிரிந்திடுவார்—பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார். (நெஞ்சு)

5. சாத்திரங்கள் ஒன்றும் காணார்—பொய்ச்
சாத்திரப் பேய்கள்சொல்லும் வார்த்தைநம்பியே
கோத்திரம் ஒன்றா யிருந்தாலும்—ஒரு
கொள்கையிற் பிரிந்தவனைக் குலைத்திகழ்வார்;
தோத்திரங்கள் சொல்லி அவர்தாம்—தமைச்
சூதுசெய்யும் நீசர்களைப் பணிந்திடுவார்;
ஆத்திரங் கொண்டே இவன்சைவன்—இவன்
அரிபக்தன் என்று பெருஞ் சண்டையிடுவார்.
(நெஞ்சு)

6. நெஞ்சு பொறுக்கு திலையே — இதை
நினைந்து நினைந்தின்னும் வெறுக்குதிலையே;
கஞ்சி குடிப்பதற் கிலார் — அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சம் என்றே —நிதம்
பரிதவித்தே உயிர் துடிதுடித்து,
துஞ்சி மடிகின்றாரே — இவர்
துயர்களைத் தீர்க்கவோர் வழியிலையே. (நெஞ்சு)

7. எண்ணிலா நோயுடையார் — இவர்
எழுந்து நடப்பதற்கும் வலிமை யிலார்;
கண்ணில்லாக் குழந்தை கள்போல் — பிறர்
காட்டிய வழியிற்சென்று மாட்டிக்கொள்வார்;
நண்ணிய பெருங்கலைகள் — பத்து
நாலாயிரங்கோடி நயந்து நின்று,
புண்ணிய நாட்டினிலே இவர்
பொறியற்ற விலங்குகள் போல வாழ்வார்.
(நெஞ்சு)

பணியாள் இல்லாவிட்டால் வீட்டிலே வேலை ஓடாது. அந்தப் பணியாளோ, பாவம் எத்தனையோ வகைகளில் ஏமாற்றுகிறான். பாரதியார் இதை நன்றாக அனுபவித்திருக்கிறார் - பணியாள் எத்தனை வகைகளில் ஏமாற்றுகிறான் என்பதை நகைச்சுவையோடு கண்ணன் 'என் சேவகன்' என்னும் கவிதையிலே தெரிவிக்கிறார். பணியாளைக் கண்டனம் புரியவில்லை என்பதை இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டும். அந்தப் பணியாளுக்கு என்றுமே பாரதியார் உள்ளத்திலே இரக்கம் உண்டு. தொழிலாளருக்கு உரிய நியாயம் வழங்கவேண்டும் எனப் பரிந்து பேசி ஒரு நீண்ட கட்டுரையே வரைந்திருக்கிறார். அதனால் பணியாளர் பலவித சாக்குப் போக்குச் சொல்லும்போது அவரிடம் கோபம் வருவதில்லை. அதற்கு மாறாக நகைச்சுவை மிகுந்து வெளிவருகின்றது. கவிதையைப் பார்ப்போம்:

"கூலிமிகக் கேட்பார் கொடுத்ததெலாம் தாம்மறப்பார்;
வேலைமிக வைத்திருந்தால் வீட்டிலே தங்கிடுவார்;
'ஏனடா நீ நேற்றைக் கிங்குவர வில்லை' யென்றால்
பானையிலே தேளிருந்து பல்லால் கடித்த தென்பார்;
வீட்டிலே பெண்டாட்டி மேற் பூதம் வந்ததென்பார்;
பாட்டியார் செத்துவிட்ட பன்னிரண்டாம் நாளென்பார்;
ஓயாமல் பொய்யுரைப்பார்; ஒன்றுரைக்க வேறு செய்வார்;
தாயாதி யோடு தனியிடத்தே பேசிடுவார்;
உள்வீட்டுச் செய்தியெலாம் ஊரம்பலத் துரைப்பார்;
எள் வீட்டில் இல்லையென்றால் எங்கும் முரசறைவார்
சேவகரால் பட்ட சிரமமிக உண்டு கண்டீர்.
சேவகரில் லாவிடிலோ, செய்கை நடக்கவில்லை.

பாஞ்சாலி சபதத்திலே தருமரும் சகுனியும் சூதாடுகின்றனர். பொருள்களை ஒவ்வொன்றாக இழக்கிறான் தருமன். இறுதியில் நாட்டையே வைத்துச் சூதாடுகின்றனர்.

இந்த இடத்திலே பாரதியாருக்கு அடங்காத கோபம் வந்து விடுகின்றது. நாட்டை வைத்து இழப்பது என்ன நியாயம் என்று சீறுகின்றார் கவிஞர். ஆயிரம் நீதிகள் தருமன் உணர்ந்திருந்தாலும் தேசம் வைத்திழப்பதற்கு என்ன நியாயம் என்று அதட்டிக் கேட்கின்றார் பாரதியார். சிச்சீ சிறிய செய்கை செய்தான். அற்பத்தனமான செய்கை செய்துவிட்டான் என்று முழங்குகின்றார். கோயில் பூசை செய்கின்றவன் சிலையையே விற்றிடலாமா? அதற்கு என்ன நியாயம்? நாட்டு மாந்தரெல்லாம் தம்மைப்போல் மனிதர்கள் என்று அவர் நினைத்தாரா? ஆட்டு மந்தை என்று நினைத்தாரா? என்று கேட்கிறார் கவிஞர்.

இந்த இடத்திலே ஒன்று நினைவுக்கு வருகின்றது. பண்டைக் காலத்திலெல்லாம் மன்னனே உயிரென்றும் மக்கள் உடலென்றும் எண்ணிவந்தனர். ஆனால் கம்பர் ஓர் அற்புதமான கற்பனையை வெளியிடுகின்றார். தமது இராமாயணத்திலே மன்னனே உடலென்றும், மக்களெல்லாம் உயிரென்றும் அவர் ஒரு புரட்சிகரமான சிந்தனையைத் தோற்றுவிக்கின்றார்.

அதேபோல அரசனுக்குரிய சில கடமைகள் உண்டென்றும், நாட்டைப் பாதுகாத்தலே அவன்கடமை என்றும், தனது விருப்பம்போல் நாட்டை என்ன வேண்டுமானாலும் செய்யக் கூடாதென்றும், ஒரு புதிய சிந்தனையை எழுப்புகின்றார் நம் கவிஞர். அரசனுக்குரியதெல்லாம் நாட்டைச் சிறந்த முறையில் ஆட்சி புரிவதுதான். தன் விருப்பப்படி அதைத் தன் சொத்தாக எண்ணிவிடக் கூடாதென்றும் கீழ்க்கண்ட வரிகளிலே தெளிவாகக் கூறுகின்றார் பாரதியார். அந்த அழகிய வரிகளை இனி நோக்குவோம்:

கோயிற் பூசை செய்வோர்—சிலையைக் கொண்டு விற்றல்
போலும்
வாயில் காத்து நிற்போன்—வீட்டை வைத்திழத்தல்
போலும்
ஆயிரங்களான—நீதி யவை உணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான்—சிச்சீ! சிறியர் செய்கை
செய்தான்
'நாட்டு மாந்த ரெல்லாம்—தம்போல் நரர்களென்று
கருதார்
ஆட்டு மந்தை யாமென்' றுலகை, அரசரெண்ணிவிட்டார்
காட்டு முண்மை நூல்கள் பலதாங் காட்டினார்களேனும்
நாட்டு ராஜநீதி—மனிதர் நன்கு செய்யவில்லை.
ஓரஞ் செய்திடாமே—தருமத்துறுதி கொன்றிடாமே,

சாரஞ் செய்திடாமே பிறரைத் துயரில் வீழ்த் திடாமே, வரை யாளு முறைமை—உலகில் ஓர் புறத்துமில்லை.''

பாரதியார் இவ்வாறு நகைச்சுவையையும், நையாண்டியையும், கிண்டல்களையும், எள்ளித்திருத்தல்களையும், வஞ்சப் புகழ்ச்சிகளையும், பழித்து அறிவுறுத்தல்களையும் நிறையப் பெய்து வைத்திருக்கிறார். இவையெல்லாம் இன்றும் என்றும் இன்பம் தரக்கூடியவை; மணி மணியானவை!

ஆனால், பாரதியாருடைய உரைநடைக் கட்டுரைகளிலும், கதைகளிலும் இந்த நகைச்சுவை ஏராளமாகக் காணப்படுகின்றன. எடுத்த எடுப்பிலேயே ஞானரதம் என்ற நூல்தான் நினைவுக்கு வருகின்றது.

ஞானரதம் ஒரு கற்பனைக் களஞ்சியம். அதை ஒரு கவிதையாகவே கொள்ளலாம். அவ்வாறு இனிமை வாய்ந்த உரைநடையினைக் கொண்டது ஞானரதம்.

பாரதியார் தமது மனம் என்கிற தேரில் ஏறிக் கொண்டு பல உலகங்களுக்குச் சென்று தமது அரிய அனுபவத்தைத் தெரிவிப்பது ஞானரதம். முதலில் துன்பக்கலப்பற்ற இன்பங்கள் நிறைந்திருக்கும் உலகத்திற்குப்போய் வருவோம் என்று தமது ஞானரதத்திற்கு ஆணையிடுகிறார். அங்கே பர்வதகுமாரி என்ற ஒரு அழகிய கன்னியைச் சந்திக்கிறதும் எங்குமே இசைமயமாக இருப்பதுமான தமது இன்ப அனுபவங்களை மிக அழகாகக் கவிதை நயத்தோடு தெரிவிக்கின்றார். பிறகு ஸத்ய லோகத்திற்குச் சென்று வருகின்றார்.

கந்தர்வ லோகத்தையும், ஸத்ய லோகத்தையும் பருணித்து விட்டு மண்ணுலகத்தை விட்டுவிடலாமா? பாரதியாருக்கு மண்ணுலகந்தானே முக்கியம்! ஆகவே,

நாலாம் அத்தியாயத்தில் மண்ணுலகத்தைப்பற்றி நகைச் சுவையோடு எழுதியிருப்பதை இனிக் கவனிப்போம்:

"எனக்குத் தலைநோவு பலமாயிருந்தது. படுக்கையை விட்டிறங்கிக் கிழக்கே இரண்டு மூன்று சந்துகளுக்கப்பால் ஏதோ பெயர் மறந்துபோன தெருவில், நான் கூலி கொடுத்து வாஸம் செய்து கொண்டிருந்த வீட்டிற்கு வந்து சேர்ந்தேன். அந்த வீட்டைக் கொஞ்சம் வர்ணிக்கலாமா? காந்தர்வ நாட்டைப்பற்றிக் கேட்டீர்களே! இந்த மண்ணுலகத்தில் நமக்குள்ள ஸௌகரியங்களைப் பற்றிச் சிறிது கேளுங்கள்.

நானிருந்த வீட்டிற்கு முன் பக்கத்திலே ஓர் கூடமும் அதைச்சுற்றி இரண்டு மூன்று அறைகளும் உண்டு. மேற்கே பார்த்த வீடு. அந்த கூடத்திற்குத் தென்புறத்திலே ஒரு முற்றம். இது முன்பகுதி. பின் பகுதியிலே சில அறைகள் ஒரு முற்றம். மேல் மெத்தை; அதில் இரண்டறைகள் இவ்விரண்டு பகுதிகளுக்குக்கும் பொதுவாகத் தென் பக்கத்திலே கொல்லைப்புறத்தில் ஓர் கிணறும் தண்ணீர்க் குழாயும் உண்டு. பின் பகுதியில் நான், என் சிறிய தாயார், மனைவி, மைத்துனிப் பெண், தம்பி, என் குழந்தை ஆகிய அறுவரும் வசிப்பது. முன் பகுதியில் ஓ ராயர் பெரிய குடும்பத்தோடிருந்தார். அவருக்குப் பகல் முழுதும் உழைத்துக்கொண்டிருக்கும்படியாகத் தபால் கச்சேரியிலோ, எங்கேயோ ஓர் உத்தியோகம். உடம்பில் கோபி மண் முத்திரைகள் எத்தனையோ, அத்தனை குழந்தைகள். அவர் மனைவி மறுபடியும் கர்ப்பம். அந்த முற்றத்திலேயே ஒரு பசுமாடு. இத்துடன் ஒட்டுக்குடியாக அவருடைய பந்துக்கள் சிலர் வஸித்தார்கள்.

நான் இருந்த பகுதியிலேனும் மேன்மாடமென ஒன்றிருந்தபடியால், கொஞ்சம் காற்று வரும்.

கூட்டத்தாருக்கு அது கூடக் கிடையாது. இரவிலே கொசுக்களின் தொல்லை பொறுக்க முடியாது. எனக்குத் தூக்கமே வராது. ராயருக்குக் காச நோயாதலால் அவர் இருமிக்கொண்டே இருக்கிற சப்தம் ஓயாமல் கேட்கும். அவருடைய குழந்தைகள் ஒன்று மாற்றி மற்றொன்று அழுதுகொண்டயிருக்கும். கர்ப்பிணியாகிய அவர் மனைவி இடையிடையே விழித்துக் குழந்தைகளையோ, அல்லது கடவுளையோ, அல்லது ராயரைத்தானோ, ரைரையோ கன்னட பாஷையிலே திட்டிவிட்டு மறுபடியும் றங்கிவிடுவாள்.

ராயர் வீட்டு விஷயங்கள் இவ்வாறிருக்க, நமது ட்டுச் சம்பிரமங்கள் இதைக் காட்டிலும் விசேஷம்.

கதையை இடையிலே விட்டு விட்டேன். வீரராகவ தலி தெருவிலிருந்து வீட்டிற்கு வந்தேனா? வரும் வழியிலே ட்கா வண்டிகள், துரைகள் போகும் கோச்சுகள், புழுதி, ரைச்சல், துர்நாற்றம், இவற்றை யெல்லாம் கடந்து, ன் பகுதியிலே பசுமாடு, ராயர் வீட்டம்மாள், குழந்தைக் ட்டங்கள் முதலிய விபத்துகளுக்கெல்லாம் தப்பிப் பின் த்திலே மெத்தைக்கு வந்து சேர்ந்தேன். அங்கே, எனது க்கை, படிப்பு, எழுத்து, பகலில் ஸ்நேஹிதர்கள் ந்தால் அவர்களுடன் ஸல்லாபம் முதலிய நாலா பிற ஷயங்களுக்கு உபயோகப்படுத்தப்பட்ட அறையின் வெளிப்புறத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு என் மனைவி க் கூப்பிட்டேன். அவள் வந்து ஏனென்றாள். 'தலை ரவு பொறுக்க முடியவில்லை. கொஞ்சம் மிளகு ரைத்துக் கொண்டு வா' என்றேன். 'ஆமாம்; இரண்டு ளைக்கொருமுறை இதொரு பொய்த் தலைவலி வந்து டும், என்னை வேலை யேவுகிறதற்காக. அதெல்லாம் நான். பால்காரி வந்து மத்தியானம் பணம் கேட்டுவிட்டுப்

போனாள். ராயர் வீட்டு அம்மாள் குடக்கூலிக்கு ஞாபகப் படுத்தச் சொன்னாள் ராயர் நேற்றே சொன்னாராம், இந்த மாதம் குழந்தைக்குக் காப்பு வாங்க ரூபாய் தருவதாகச் சொல்லியிருந்தீர்கள். என்னைத்தான் ஏமாற்றுகிறது வழக்கமாகவே போய்விட்டது'; இன்னும், அது இது என்று ஆயிரம் கணக்கு சொன்னாள். அன்று மாலை அவள் சொல்லிய கணக்குகளை எல்லாம் தீர்க்க வேண்டுமானால் குறைந்த பக்ஷம் மூன்று லக்ஷம் ரூபாய் வேண்டும் என்று என் புத்திக்குப் புலப்பட்டது. கடைசியாக, 'தெருவிலே போகிற நாய்களுக்கெல்லாம் பணத்தை வாரியிறைக்கிறது; வீட்டுச் செலவைப் பற்றிக் கேட்டால் முகத்தைச் சுளிக்கிறது; இப்படிச் செய்துகொண்டே வந்தால், அப்புறம் என்ன கிடைக்கும்? மண்தான் கிடைக்கும்.' என்று ஆசீர்வாதம் பண்ணிப் பிரசங்கத்தை முடித்தாள்.

'தலைநோவு தீர்ந்து போய்விட்டது. நீ தயவு செய்து கீழே போகலாம்' என்று வணக்கத்துடன் தெரியப்படுத்திக் கொண்டேன்.

'ஆமாம்! ஊர்க்காரர் கூடவெல்லாம் ஓயாமல் பேசித் தொண்டைத் தண்ணீரை வற்ற வைத்துக் கொண்டிருக்கலாம். நான் ஒரு வார்த்தை பேசவந்தால் உடனே கோபம் வந்துவிடும்' என்றாள். அவள் மனதில் என்னை ஸமாதானப் படுத்துவதாக எண்ணம். அப்பால், பல தினங்கள் கழிந்த பின்புதான், நான் தர்மலோக யாத்திரை செய்வதாகத் தீர்மானம் செய்து வைத்திருந்தேன். இடையே நிகழ்ந்த சிற்சில ஸம்பவங்களும் காலக்ஷேப வர்ணனைகளுமே இங்கே எழுதப்படும். மண்ணுலகம் மிகப்பெரிது. அதில் என் அனுபவம் முழுவதையும் எழுத வேண்டுமானால் மஹா பாரதத்தைப்போலப் பதினெட்டு மடங்கு புஸ்தகமாகும்' இங்கு ஓரிரண்டு 'மாதிரி ஸீன்'களே குறிப்பிடப்படும்.

20 ஆம் தேதி—குழந்தைக்குக் காய்ச்சல். மனைவிக்குக் காதுவலி. எனக்குப் பித்தக் கிறுகிறுப்பு.

21—ஆம் தேதி-தம்பிக்குப் பாடசாலைச் சம்பளம் கொடுக்க வேண்டிய கடைசி நாள். நான் காரியஸ்தலத்திலிருந்து பணம் கொண்டுவந்து வைக்க மறந்துவிட்டேன். அவன் அதுபற்றிப் பாடசாலைக்குப் போவதையே நிறுத்திவிட்டான். நான் சுதேசிய விஷயத்தில் ஊக்கத்துடன் பாடுபடுவதன் பொருட்டாக, என்னை எப்போதும் கவனித்து வரும்படியாக ராஜாங்கத்தாரால் அனுப்பப்பட்ட ஒற்றர்கள் எனது தம்பியிடம் செய்த ஸம்பாஷணையில் 'உம்முடைய அண்ணனது சிநேகிதரான இன்னாரை ராஜாங்கத்தார் பிடிக்கப் போகிறார்கள்' என்ற மங்கள ஸமாச்சாரம் சொல்லிவிட்டுப் போனதாகத் தம்பி வந்து சொன்னான்.

22-ஆம் தேதி—மனைவிக்கும் சிறிய தாயாருக்கும் மனஸ்தாபம் வந்துவிட்டது. ஒருவரை யொருவர் மாற்றி என்னிடம் பிழைகூறத் தலைப்பட்டார்கள். என் ஜீவ தர்மமாகிய 'சுதேசியம்' தப்பு முயற்சியென்றும், வீணென்றும், அதில் நான் தலையிட்டதிலிருந்து குடும்பத்துக்குப் பற்பல கேடுகளுண்டாகுமென்றும் சிறிய தாயார் ஸன்மார்க்க போதனை செய்தாள். என் மூக்கில் அடிக்கடி ஒருவித ஊறுதல் உண்டாவது போலத் தோன்றிற்று. அது ஓர் பொல்லாத நோயாயிருக்குமோ வென்ற மூடத்தனமான கவலை கொண்டேன். அக் கவலையிலிருந்து மனதை அடிக்கடி திருப்பியும், மனம் மீட்டும் மீட்டும் அதில் போய் விழுந்தது.

23-ஆம் தேதி—வெற்றிலையில் சுண்ணாம்பு அதிகமாகச் சேர்ந்து விட்டபடியால், வாயெல்லாம் புண்ணாய்ப் போய் விட்டது. வாய்க்குள் ஜலம் விடுவதற்குக் கூடத் தகுதி

யில்லை. எனக்கு ஸாதாரணமாகவே உழைப்பு அதிக மாதலால், அத்துடன் சோறும் விழுங்க முடியாமற் போகவே, சோர்வும் முகக் கடுகடுப்பும் அதிகப்பட்டன. இத்யாதி, இத்யாதி.

நாள் தவறினாலும், இந்தக் கணக்குத் தவறுவதில்லை. சீச்சீ! இந்த மண்ணுலகம் ஓரிடமா? இதில் மனிதன் வசிக்க லாமா? ஆமைகளும் ஓநாய்களும் வாழலாம். இது துன்பக் களம். இது சிறுமைக் களஞ்சியம். இது நரகம். இதில் வெறுப்படையாத மனிதர்களின் முகத்திலேகூட விழிக்க லாகாது.

வீட்டு வியாபாரங்களையும் எனது சொந்த வர்த்த மானங்களையும் குறித்துச் சில திருஷ்டாந்தங்கள் காண்பித் தேன். இனி, வெளி வியாபாரங்கள், எனது மித்திரர், அயலார் முதலியவர்களின் செய்திகள் ஸம்பந்தமாகச் சில திருஷ்டாந்தங்கள் காண்பிக்கிறேன். திருவல்லிக்கேணி யிலே 'செ......ஸங்கம்' என்பதாக ஓர் தேசபக்தர் ஸபை உண்டு. அதில் தேசபக்தர்கள்தான் கிடையாது. நானும் சிற்சில ஐயங்கார்களுமே சேர்ந்து, 'காரியங்கள்'—ஒரு காரியமும் நடக்கவில்லை — நடத்தினோம். நாங்கள் தேச பக்தர்கள் இல்லையென்று, அந்தச்சபை ஒன்றுமில்லாமற் போனதிலிருந்தே நன்கு விளங்கும்.

நான் சோம்பருக்குத் தொண்டன். எனது நண்பர் களெல்லாம் புளியஞ்சோற்றுக்குத் தொண்டர்கள். சிலர் மட்டிலும் பணத்தொண்டர்; காலனுவின் அடியார்க்கும் அடியார்.

ஆனால், எங்களிலே ஒவ்வொருவனும் பேசுவதைக் கேட்டால் கைகால் நடுங்கும்படியாக இருக்கும். பணத் தொண்டரடிப் பொடியாழ்வார் எங்களெல்லோரை

காட்டிலும் வாய்ப்பேச்சில் வீரர். ஒருவன் வானத்தை வில்லாக வளைக்கலா மென்பான். மற்றொருவன் மணலைக் கயிறாகத் திரிக்கலா மென்பான். ஒருவன் 'நாம் இந்த ரேட்டில்—இந்தவிதமாகவே—வேலை செய்து கொண்டு வந்தால் ஆங்கிலேயரின் வர்த்தகப் பெருமை ஆறு மாதத்தில் காற்றாய்ப் போய்விடும்' என்பான். மற்றொருவன், 'சியாம்ஜி கிருஷ்ணவர்மா ஸ்வராஜ்யம் கிடைக்கப் பத்து வருஷமாகுமென்று கணக்குப் போட்டிருக்கிறார். ஆறு வருஷத்தில் கிடைத்து விடுமென்று எனக்குத் தோன்றுகிறது' என்பான். தவளை யுருவங்கொண்ட மூன்றாமொருவன்:—'ஆறு மாதமென்று சொல்லடா' என்று திருத்திக் கொடுப்பான்.

ப...... ஆழ்வார் எங்களிலே முக்கியஸ்தர். அவர் இதை எல்லாம் கேட்டுப் பரமானந்தமடைந்து கொண்டிருப்பார். ஆனால், ஒரு தேவதை அவரிடம் வந்து, 'உங்களுக்கு நான் ஸ்வராஜ்யம் நாளை ஸூர்யோதயத்திற்கு முன்பு ஸம்பாதித்துக் கொடுக்கிறேன். நீ உன் வீட்டிலிருந்து அதற்காக ஒரு வராகன் எடுத்துக்கொண்டு வா' என்று சொல்லுமாயின், அந்த ஆழ்வார், 'தேவதையே, உனக்கு வந்தனம் செய்கிறேன். ஓம் சக்தியை நம, ஓம் பராயை நம; இத்யாதி; அம்பிகே, இந்த உபகாரத்திற்கு நாங்கள் உனக்கு எவ்வாறு நன்றி செலுத்தப் போகிறோம்? எங்கள் உடல், பொருள், ஆவி மூன்றும் உன்னுடையதேயாகும். ஆனால், ஒரு வராகன் கேட்ட விஷயத்தைப்பற்றி நான் ஒரு வார்த்தை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதைக் கேள். நீ சொல்லுகிற காரியமோ பொதுக்காரியம். அதற்குப் பொது ஜனங்கள் பணம் சேர்த்துக் கொடுப்பதே பொருத்தமுடையதாகும். நான் ஒருவன் மட்டிலும் கையிலிருந்து பணம் செலவிடுதல் பொருத்தமன்று - இவ்விஷயத்தைப் பற்றி நாங்கள்

அடுத்தவாரம் கூடப்போகிற மீட்டிங்கில் பேசித் தீர்மானம் செய்கிறோம். அதன் பிறகு நீ பெருங்கருணையுடன் எழுந்தருள வேண்டும். இப்போது போய் வருக. வந்தேமாதரம்' என்று மறுமொழி சொல்லியனுப்பி விடுவார்.

ஐயோ! என்ன உலகமடா, இந்த மண்ணுலகம். ஒழியாத ஏமாற்று; ஒழியாத வஞ்சனை; ஒழியாத கவலை. ஸாரமில்லை, ஸத்துக் கிடையாது; உள்ளூரப் பூச்சியரித்துக் குழலாயிருக்கும் வாழ்க்கை. ஒவ்வொருவனும், மற்றவன் மீது பழி கூறுகின்றான். ஒவ்வொருவனும் தன்னிஷ்டப்படி விட்டுவிட்டால் எல்லாம் நேராக நடக்குமென்ற நம்பிக்கையுடனேதான் இருக்கிறான். ஆனால், நான் ஒருவன் சரியாக இருந்தால் போதுமா? மற்றவர்களை நம்புவதற்கிடமில்லையே' என்று நினைக்கிறான். பிறரை நம்புவதற்கிடமில்லை யென்றெண்ணி ஏமாற்றுகிறான். ஐயோ மூடா! நீ ஏமாற்றுவதனால், முன்னைக் காட்டிலும் பரஸ்பர நம்பிக்கை அதிகரித்து விடுமென்றா நினைக்கிறாய்? மனித ஜாதிக்குத் தீராத நோய் ஒன்று பிடித்திருக்கிறது. மாறாத சாபம். இறங்காத விஷம். இதன் பெயர் பணம்.

இப்பேய்க்கு வணங்கும்படி அவனைத் தூண்டிவிடுவது விருப்பம். அதாவது ருசி நீங்கிய விருப்பம்; அறிவற்ற விருப்பம். ருசி ஸஹிதமான விருப்பமுடையோர் கந்தவர்கள். அறிவு ஸத்யலோகக் கருவி.

இன்னும் எத்தனையோ காட்சிகள் மண்ணுலகத்திலிருந்து எடுத்துக்காட்ட வேண்டுமென்ற எண்ணம் எனக்கு இருந்தது. ஆனால், 'பயனற்ற இவ்வுலகத்தைப்பற்றி அதிகமாக விஸ்தரிப்பது பயனுடைய 'காரியமாகாது என்பது கருதி இத்துடன் நிறுத்தி விடுகிறேன்.

வஞ்சப் புகழ்ச்சியிலே பலவகையுண்டு. இடிபோலத் தாக்குவது ஒருவகை. வில்லம்பு, சொல்லம்பு மேதினியில்

இரண்டுண்டு வில்லம்பிற் சொல்லம்பே மேலதிகம் என்ற வகையைச் சார்ந்தது. அதுவே, கடுங்கோபம் வந்து விட்டால் கவிஞருடைய சொல்லம்பினுல் தாக்கப்படுவ துண்டு. தமிழ் என்ற கட்டுரையில் வந்த கடுங்கோபம் அத்தன்மை வாய்ந்தது. தமிழை இழிவு செய்துவிட்டார் என்பதனுல் விளைந்த கோபம் அது. ஆனுல் எப்பொழுதுமே இந்தக் கடுங்கோபம் பாரதியாருக்கு வருவதில்லை. வாழைப் பழத்திலே ஊசி ஏற்றினுற்போல மெதுவாக வரும் வஞ்சப் புகழ்ச்சியும் இவற்றில் பலவகைகளில் அடங்கும். இதற்கு நேரான ஆங்கில மொழிபெயர்ப்பு சொல்வது கஷ்டம். வேண்டுமானுல் மென்மையான வஞ்சப்புகழ்ச்சி என்பதை (*Gentle irony*) என்று சொல்லலாம்.

இவ்வாறு வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதைப் பாரதியார் கையாண்டிருக்கிருர். இதோ ஓர் எடுத்துக் காட்டு. தமிழ்நாட்டின் விழிப்பு என்ற கட்டுரையிலே அவர் கூறுகின்ருர். "கும்பகர்ணன் தூங்கினுனும். இலங்கையில் சண்டை நடக்கிறது. மூன்று லோகமும் நடுங்குகிறது. 'ராம ராவண யுத்தத்துக்கு ராம ராவண யுத்தமே நிகர்' என்று முன்னேர் சொல்லியிருக்கிருர்கள். அப்படிப்பட்ட சண்டையின் அதிர்ச்சியிலே கூட, கும்ப கர்ணனுடைய தூக்கம் கலையவில்லை. ஆயிரக்கணக்கான ஆடுமாடு குதிரைகளின் காலில் கூர்மையான கத்திகளைக் கட்டி அவன் மேலே நடக்கச்சொன்னுர்கள்; தூக்கம் கலைய வில்லை. ஏழெட்டு மேகங்களை அவன் காதுக்குள்ளே போய் இடியிடிக்கச் சொல்லி ராவணன் கட்டளையிட்டானும். மேகங்கள் போய் இடித்தனவாம்; கும்பகர்ணன் குரட்டை நிற்கவேயில்லை.

மேற்படி கும்பகர்ணனைப் போலவே சில தேசங்கள் உண்டு. அண்டங்களத்தனையும் இடிந்து விழுந்தாலும்

காது கேட்காத செவிடர் வாழும் தேசங்கள் சிலவுண்டு, அந்த தேசங்களிலே வாஸம் செய்வோர் மஹாபாவிகள். மாதுர் துரோகம், பிதுர் துரோகம், சகோதரத் துரோகம், தெய்வத்துரோகம், சுதேசத் துரோகம் முதலிய பெரிய பாதகங்கள் செய்து சீரழிந்த மானுடர் அப்படிப்பட்ட தேசங்களில் வாழ்கிறார்கள்.

ஆனால், ஹிந்து சேதம் அப்படி......யில்லை! இங்கு தமிழ் நாட்டைப்பற்றி முக்யமாகப் பேசவந்தோம். தமிழ் நாடு மேற்படி மஹா பாதக ஜாப்தாவைச் சேர்ந்ததன்று, அன்று!"

பாரதியார் தம்மைத்தாமே கேலி பண்ணிக் கொள்ளுவதிலும் திறமைவாய்ந்தவர். "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே, உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" "ஜெயமுண்டு பயமில்லை மனமே" ,"பயமெனும் பேய்தனை அடித்தோம்" என்று பாடியவரல்லவா பாரதியார்!

பேய்க்கூட்டம் என்ற கதையிலே இவர் தம்மையே கேலி செய்து கொள்வதைப் பார்ப்போம்.

"வாப்பா! காளிதாஸா, பயப்படாதே. தரையின் மேல் உட்கார்ந்து கொள். மனதைக் கட்டு. மூச்சை நேராக்கு. ஒன்றும் குடி முழுகிப் போய்விடவில்லை. நீ செய்த நூல்கள் சில நாம் பார்த்திருக்கிறோம். 'கடலெதிர்த்து வந்தால் கலங்க மாட்டோம்; தலைமேல் இடி விழுந்தால் தளர மாட்டோம்; எங்கும் அஞ்சோம்; யார்க்குமஞ்சோம்; எதற்குமஞ்சோம்; எப்போதும் அஞ்சோம்' என்று நீ பாடினதை நான் நேற்று ஒரு புஸ்கதத்தில் பார்த்தேன். நீ உண்மையான அனுபவத்தைச் சொன்னாயா, அல்லது வெறுங் கற்பனைதானா என்பதை அறியும்பொருட்டாக

நான் உன்னை இங்கே கொணர்வித்தேன். நீ பயப்படுகிற அளவு ஆற்காட் நவாப்கூடப் பயந்தது கிடையாது. ஆற்காட் நவாப் ஸங்கதி தெரியுமா? கிளைவ் ஒரு வாயில் வழியே கோட்டைக்குள் புகுந்து பார்த்தபோது, நவாப் மற்றொரு வாயில் வழியே வெளியேறி விட்டாராம். உள்ளே போனால் க்ளைவ் யாருடன் சண்டை போடுவார்? அவர் பாட்டிலே போய் ஷோக்காகக் கோட்டைக்குள் பீரங்கி ஸஹிதமாக இருந்துகொண்டு, கோட்டை கொத்தளங்களைச் சீராக்கித் தான் அதை வைத்துக் கொண்டாரென்று கேள்வியுற்றதுண்டு. நீ அந்த ஆற்காடு நவாபினிட மிருந்த பிராமணச் சோதிடரின் வம்சத்தில் பிறந்தாயோ? ஆற்காட்டு பயம் பயப்படுகிறாயே? மூடா, ஆறுதலடை."

அந்தப் பரதேசி பின்னும் சொல்லுகிறான் :— "மனுஷ்ய வாழ்க்கை சதமில்லை. பிறப்பை உடனே ஒழி. மண்ணில் பிறக்காதே. வானத்தில் ஏறு. சந்திர கலைகளில் உண்டாகும் அமிர்தத்தைப் பானஞ்செய்யும் யோகி ஒருவன்தான் உன் பாட்டில் கண்டபடி பயப்படாமலிருக்க முடியும். அதைவிட்டு நமக்குத்தான் அகல வெழுதத் தெரியுமென்று நீ கிறுக்கித் தள்ளிவிட்டாய். குண்டலினி அக்கினியைத் தலைக்குக் கொண்டு போ. அப்போது அமிர்த கலசமொழுகும். அந்த அக்கினியும் அமிர்தமும் ஒன்றாய் இன்ப வெள்ளத்திலே நீந்தலாம். இன்ப மிருந்தால் பயமில்லை. இன்பமில்லாத போது பயம் இயற்கையிலே வரும். இருவினைக் கட்டை அறு. நன்மை தீமை யென்ற குப்பையைத் தொலையிலே தள்ளு. எல்லாம் சிவம் என்றறி. உன்னை வெட்ட வரும் வாளும் சிவன்; அதைக் கும்பிடு. உன்னை அது வெட்டாது. சரணாகதி தான் வழி. பொய் பேசாதே. தீங்கு கருதாதே. பேய்க்குந் தீங்கு செய்யாதே. பகைவனுக்குத் தீமை நினைக்காதே. பகைவனையும் சிவனென்றே கும்பிடு. பாம்பின் வாய்க்

குள்ளே போய் விரலை விட்டு ஓம் சிவாய நம என்று சொல் அது உன்னைக் கடிக்காது.''

தலைமைப் பண்டாரம் பொன்னுஸனத்தினின்றுப் எழுந்து நின்முன். அப்போது அங்கே ஒரு சங்கொலிட் பண்டாரம் 'பம்' 'பம்' 'பம்' என்று சங்கெடுத்து ஊதினுன் மற்ருெரு சடைப்பண்டாரம் கண, கண, கணவென்று மணி யடித்தான். பிறகு பண்டாரங்கள் அத்தனை பேருப் சேர்ந்து பின்வரும் பாட்டைப் பாடினுர்கள்.

''வையகத்தே சடவஸ்து வில்லை.
மண்ணுங் கல்லும் சடமில்லை,
மெய்யுரைப் பேன் பேய் மனமே
மேலும் கீழும் பயமில்லை :—''

எத்தனை படித்தாலும் உலக அனுபவம் இல்லா விட்டால் அது நிறைவான கல்வியாக மாட்டாது என்று இக்கதை மூலம் விளக்குகிருர்.

மேலும், வெறும் பாண்டித்யம் மட்டும் இருந்தால் பயனில்லை. உலக அனுபவம் வேண்டும் என்பதை நகைச் சுவையோடு ஒரு கதையிலே விளக்குகிருர் பாரதியார். கதையைக் கேட்போமா?

சாஸ்தியார் மகன்

ஒரு பிராமணப் பையன் தனது விளையாட்டு வண்டி தெருவிலே ஒடிந்துபோன படியால், அதைப் பார்த்து அழுது கொண்டு நின்முன். அதைக் கண்ட ஒரு சிப்பாய்— ''குழந்தாய், ஏன் அழுகிருய்?'' என்று கேட்டான்.

பையன் : ''வண்டி ஒடிஞ்சு போச்சு.''

சிப்பாய் : ''இதற்காக அழாதே. வீட்டிற்குப் போ. உன்னுடைய தகப்பனுர் அதைச் செப்பனிட்டுக் கொடுத்து விடுவார்''.

பையன் : "எங்கப்பா சாஸ்திரியார். அவராலே வண்டியை நேர்ப்படுத்திக் கொடுக்க முடியாது. அவருக்கு ஒரு தொழிலும் தெரியாது. யார் வீட்டிலாவது அரிசி கொடுத்தால் வாங்கிக்கொண்டு வருவார். வேறே ஒரு இழவுந் தெரியாது" என்று விம்மி விம்மி யழுதான். சிப்பாய் சிரித்துக் கொண்டே போய் விட்டான்.

பாரதியார் நம் நாட்டிலே மலிந்து மலிந்து கிடக்கும் மூட பக்தியை மிகவும் கண்டிக்கிறார். இதில் இன்னும் ஒரு ஆச்சரியம் என்னவென்றால், இங்கிலீஷ் படிப்புப் படித்து விட்டால் மூட நம்பிக்கைகள் தாமாகவே மறைந்து போகும் என்பதாகும். பாரதியார் இங்கிலீஷ் படிப்புக்கு அதிகம் மதிப்பே கொடுக்கவில்லை. "செலவு தந்தைக்கோர் ஆயிரம் சென்றது, தீதெனக்குப் பல்லாயிரம் நேர்ந்தன, நலமோர் எட்டுணையும் கண்டிலேன்—இதை நாற்பதாயிரம் கோயிலில் சொல்லுவேன்" என்று பாடியவரல்லவா பாரதியார்! உண்மையில் ஆங்கிலப் படிப்பு படித்தவர்களிடம்தான் மூடபக்தி அதிகம் இருக்கின்றது என்று மூடபக்தி என்ற கட்டுரையில் விளக்குகிறார்.

"நம்முடைய ஜனங்களுக்கிடையே இந்த நிமிஷம் வரை நடைபெறும் மூட பக்திகளுக்கு கணக்கு வழக்கே கிடையாது. இதனால் நம்மவர்களின் காரியங்களுக்கும் விவஹாரங்களுக்கும் ஏற்படும் விக்கினங்களுக்கு எல்லையில்லை.

இந்த மூட பக்திகளிலே மிகவும் தொல்லையான அம்சம் யாதெனில், எல்லாச் செய்கைகளுக்கும் நாள், நக்ஷத்திரம், லக்னம் முதலியன பார்த்தல். க்ஷவரம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்றால், அதற்குக்கூட நம்மவர் மாஸப் பொருத்தம், பக்ஷப் பொருத்தம், திதிப் பொருத்தம், நாட் பொருத்தம், நக்ஷத்திரப் பொருத்தம் இத்தனையும் பார்த

தாக வேண்டியிருக்கிறது. க்ஷவரத்துக்குக்கூட இப்படி யென்ருல், இனிக் கல்யாணங்கள், சடங்குகள், வியாபாரங் கள், யாத்திரைகள், விவசாய ஆரம்பங்கள் முதலிய முக்கிய காரியங்கள் பல்லாயிரத்தின் விஷயத்திலே நம்மவர் மேற் படி பொருத்தங்கள் பார்ப்பதில் செலவிடும் கால விரயத் துக்கும் பொருள் விரயத்துக்கும் வரம்பே கிடையாது. சகுனம் பார்க்கும் வழக்கமும் கார்யங்களுக்குப் பெருந் தடையாக வந்து மூண்டிருக்கிறது. இதில் நேரும் அழிவு களும், அவற்ருல் பொருள் அழிவுகளும் எவ்வளவு உண்டா கின்றன என்பதை நம்மவர் கணிப்பதே கிடையாது. சகுனம் பார்ப்பதிஞல் கார்ய நஷ்டம் மாத்திரம் உண்டா கிறது. நாட்பொருத்தம், லக்னப் பொருத்தம் முதலியன பார்க்குமிடத்தே கார்ய நஷ்டம் மட்டுமின்றி, மேற்படி லக்னம் முதலியன பார்த்துச் சொல்லும் சோதிடருக்கு வேறு பணம் செலவாகிறது.

"காலம் பணவிலை யுடையது" என்ற குறிப்புடைய இங்கிலீஷ் பழமொழி ஒன்றிருக்கிறது. இந்த சமாசாரம் நம்மவருக்குத் தெரிவதே கிடையாது. பொழுது வீணே கழிக்கப்படுமாயின், அதஞல் பணலாபம் கிடையாமற் போகும். இன்று செய்யக்கூடிய கார்யத்தை நாளைக்குச் செய்யலாமென்று தாமஸப் படுத்தி வைப்பதஞல், அந்தக் கார்யம் பலமான சேதமடைந்து போகும். எதையும் தோன்றிய மாத்திரத்திலே சூட்டோடு செய்யும்போது அதில் வெற்றி பெரும்பாலும் நிச்சயமாகக் கிடைக்கும் அதைத் தூங்கப் போட்டு விட்டபிறகு செய்யப்போஞல் அதில் ஆரம்பத்தில் இருந்த ரஸம் குறைந்து போகும். அதற்குத் தக்கபடி பயனும் குறை வெய்தும்.

"இத்தகைய மூட பக்திகளெல்லாம் படிப்பில்லாமை யால் ஏற்பட்டிருக்கின்றன' என்றும், 'ஜனங்களுக்குப்

படிப்புக் கற்றுக் கொடுத்தால் இவை அழிந்துபோய் விடும்' என்றும், இங்கிலீஷ் படிப்பாளிகள் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேன். நானும் ஒருவாறு அது மெய்யென்றே நம்புகிறேன். ஆனால் அதற்குத் தற்காலத்தில் நமது தேசத்துப் பாடசாலைகளில் பயிற்றுவிக்கப்படும் இங்கிலீஷ் படிப்பு சுத்தமாகப் பிரயோஜன மில்லையென்று ஸ்பஷ்டமாக விளங்குகிறது. சென்ற நூறு வருஷங்களாக இந் நாட்டில் இங்கிலீஷ் படிப்பு நடந்து வருகிறது. ஆயிரக் கணக்கான பாடசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றுள் லக்ஷக்கணக்கான கோடிக்கணக்கான ஜனங்கள் படித்துத் தேறியிருக்கிறார்கள். இவர்கள் மூட பக்திகளை எல்லாம் விட்டு விலகி நிற்கிறார்களா? இல்லை. நமது தேசத்தில் முப்பத்து மூன்று கோடி ஜனங்கள் இருக்கிறார்கள். இத்தனை ஜனங்களுக்கும் ஒருவர் மிச்சமில்லாமல் உயர்தரக் கல்வி கற்றுக் கொடுத்த பின்புதான் மேற்கூறிய ஸாமான்ய மூடபக்திகள் விலக வேண்டுமென்பது அவசியமில்லை. ஏற்கெனவே, இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் படித்துத் தேறியவர்கள் இந்த விஷயத்தில் தமது மனச்சாக்ஷிப்படி யோக்யமாக நடந்து வந்திருப்பார்களானால், மற்றவர்களிலும் பெரும்பாலர் நடை திருந்தியிருப்பார்கள். இன்னும் எத்தனையோ விஷயங்களில் நம்மவர் இங்கிலீஷ் படித்தவரின் நடையைப் பின்பற்றித் தங்கள் புராதன வழக்கங்களை மாற்றிக் கொண்டிருக்கக் காண்கிறோம். அது போலவே இந்த விஷயத்திலும் நடந்திருக்கும்.

ஆனால், இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களுக்குப் போய் தேறினவர்களிடம் மனச்சாக்ஷிப்படியும் தன் அறிவுப் பயிற்சியின் விலாசத்திற்குத் தகுந்தபடியும் நடக்கும் யோக்யதை மிகமிகக் குறைவாக இருக்கிறது. இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் எத்தனையோ சாஸ்திரங்கள், நிஜ சாஸ்

திரங்கள், பொய் சாஸ்திரங்கள், இரண்டுங் கலந்தன— எத்தனையோ வித சாஸ்திரங்கள் பயிற்றுகிறார்கள்.

ஆனால் ஸ்வதந்திரம், ஆண்மை, நேர்மை, உண்மை, வீர்யம்—இவை அத்தனை ஜாக்கிரதையாக கற்றுக் கொடுப்பதில்லை. அதிலும் ஒருவன் தன் மனமறிந்த உண்மையின் படி ஒழுகவேண்டுமென்றும் அங்ஙனம் ஒழுகாதிருத்தல் மிகவும் அவமானமும் பாவமுமாகு மென்றும் கற்றுக் கொடுக்கும் வழக்கமேயில்லை. இந்த விஷயத்தைக்கூட வாய்ப்பாடமாய்ப் படிப்பித்துக் கொடுக்கிறார்கள். ஆனால் ஒழுக்கப் பயிற்சியில்லை. புஸ்தகத்துக்கும் வாய்ப்பேச்சுக்கும் செய்கைக்கும் இடையே லக்ஷம் யோசனை தூரமாக நடப்பவர்களுக்கு த்ருஷ்டாந்தம் காட்டப் புகுமிடத்தே, நமது நாட்டில் இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் தேறிவரும் மனிதரைப்போல் இத்தனை சிறந்த த்ருஷ்டாந்தம் வேறெங்கும் கிடைப்பது மிகவும் துர்லபமென்று தோன்றுகிறது.

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல் வேறுடையார் தொடர்பு

என்று திருவள்ளுவர் பாடியிருக்கிறார்.

இதன் பொருள்—வாய்ப்பேச்சு ஒரு மாதிரியாகவும் செய்கை வேறொரு மாதிரியாகவும் உடையோரின் உறவு கனவிலும் கொள்ளுதல் தீது என்பதேயாம். பி. ஏ., எம். ஏ. பரீக்ஷைகள் தேறி வக்கீல்களாகவும், உபாத்தியாயராகவும், என்ஜினீர்களாகவும், பிற உத்தியோகஸ்தராகவும் வாழும் கணக்கில்லாத ஐயர், அய்யங்கார், பிள்ளை முதலியவர்களில் எவராவது ஒருவர் தன் வீட்டுக் கல்யாணத்துக்கு லக்னம் பார்க்கவேண்டிய அவசியமில்லை என்று நிறுத்தியிருப்பாரா? "பெண் பிள்ளைகளின் உபத்திரவத்தால்

இவ்விதமான மூட பக்திகளுக்குக் கட்டுப்பட்டு வாழும்படி நேரிடுகிறது" என்று சிலர் முறையிடுகிறார்கள். பெண் பிள்ளைகளுக்கு மரியாதை கொடுக்க வேண்டிய இடத்தில் கொடுக்க வேண்டும். மூடத்தனமான, புத்திமான்கள் கண்டு நகைக்கும்படியான செய்கைகள் செய்ய வேண்டு மென்று ஸ்திரீகள் பலனின்றிப் பிதற்றுமிடத்தே, அவர் களுடைய சொற்படி நடப்பது முற்றிலுந் தவறு. மேலும் அது உண்மையான காரணமன்று. போலிக் காரணம். நம்மவர் இத்தகைய ஸாதாரண மூட பக்திகளை விட்டு விலகத் துணியாமலிருப்பதின் உண்மையான காரணம் வைதிகரும் பாமரரும் நம்மை ஒரு வேளை பந்தி போஜனத்துக்கு அழைக்காமல் விலக்கி விடுவார்கள்' என்பதுதான். இங்கிலீஷ் படித்த மேற்குலத்து ஹிந்துக் கள் கணக்கில்லாத மூட பக்திகளைக் கைவிலங்குகளாகவும், கால் விலங்குகளாகவும், கழுத்து விலங்குகளாகவும் பூட்டிக் கொண்டு தத்தளிப்பதின் தலைமைக் காரணம் — பந்தி போஜனத்தைப் பற்றிய பயந்தான். அதைத் தவிர வேறொன்றுமில்லை. அந்த மெய்யான காரணத்தை மறைத்துவிட்டு ஸ்திரீகளின்மீது வீண்பழி சுமத்தும் இந்த வீரர்கள் மற்றும் எத்தனையோ வியவகாரங்களில் தம் மினத்து மாதரை விலையடிமைகள் போலவும், விலங்குகள் போலவும் நடத்தும் விஷயம் நாம் அறியாததன்று. எண்ணில்லாத பொருள் நஷ்டமும் கால நஷ்டமும் அந்தக் காரணத்தின் இகழ்ச்சியும் உலகத்து அறிஞரின் நகை பாடலும் ஸத்ய தெய்வத்தின் பகைமையும் சிறிதென்று கொண்டீர்! பந்திபோஜன ஸ்வதந்திரம் பெரிதென்று கொண்டீர்! தைர்யமாக நீங்கள் உண்மையென்று உணர்ந்தபடி நடவுங்கள். பந்தி போஜனம் சிறிது காலத் துக்குத்தான் உங்களுக்குக் கிடைக்காதிருக்கும். பிறகு உங்கள் கூட்டத் தொகை அதிகமாகும். ஸத்ய பலம்

முதலிய பல பல காரணங்களால் மேற்படி பந் போஜனமும் உங்களுக்கு ஸித்தியாய் விடும். தைர்யமா வேலை செய்யுங்கள்."

பாரதியார் தமது அரசியல் கட்டுரைகளிலே கிண்ட செய்தும் குத்தியும் பழித்தும் காரசாரமாக எவ்வா எழுதினுர் என்பதற்கு ஓர் அரிய எடுத்துக்காட்டா விளங்குகின்றது அவர் 1907ஆம் ஆண்டு மே மாத 18 ஆம் தேதி எழுதிய கட்டுரை. சென்னைவாசிகளி நிதானமும், விபின சந்திர பாலரின் சந்நிதானமும் என்ப அதன் தலைப்பாகும். விபின சந்திரபாலர் வங்காளத் தேசீய வீரர்களில் ஒருவர். சிறந்த பேச்சாளர். இந்தி வின் ஒரு கோடியிலிருந்து மற்ருெரு கோடி வரையி அந்தக்காலத்தில் அவரது பேச்சு ஒலித்தது. மக்க அக்தைகேட்டுப் புது உணர்ச்சி பெற்றனர். 1907 அவர் சென்னையில் பேசிய பேச்சு மக்கள் மனத்தி தேசீய நெருப்பை ஓங்கி வளர்த்தது. அதனுல் சென் மாகாணத்தை விட்டு வெளியேறும்படி சர்க்கார் அவ வலுக்கட்டாயப்படுத்தியது.

அவருடைய பேச்சும், நியூ இந்தியா, வந்தே மாதர என்ற பத்திரிகைகளில் அவர் எழுதிய கட்டுரைகளும் இளைஞர்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன இதையே பாரதியார் இக்கட்டுரையில் குறிப்பாக எடுத்து கூறுகிருர்.

இச் சிறிய குறிப்புடன் இனிப் பாரதியாரது கட்டுர யைப் பார்ப்போம்.

சென்னை வாசிகளின் நிதானமும்
விபின சந்திரபாலரின் சந்நிதானமும்

18 மே 19

சென்னை வாசிகளின் நிதானமெல்லாம் சந்திரபாலரி சந்நிதானத்திலே பறந்து காற்ருய்ப் போய்விட்ட

நேற்று மாலை விக்டோரியா நகர மண்டபத்தில், லாலா ஜபதிராய் தீபாந்தரத்திற்கேற்றி அனுப்பப்பட்ட விஷய மாக, மஹாஜன சபையாரால் கூட்டப்பெற்ற பெருங் கூட்டத்தில் நடந்த செய்திகளை நேரே வந்து கண்டவர்க ளெல்லாம் இனி மயிலாப்பூர் வக்கீல்கள் ஜனத் தலைவர்க ளென்று மூச்சுவிடக்கூட இடமில்லை யென்பதை நன்றாக அறிந்திருப்பார்கள்.

நேற்று மாலை மீட்டிங்கிலே முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பின் வருவனவாகும் :—

1. இதுவரை பழைய கட்சிக்காரருக்கு முக்கிய தர்ம மாக இருந்த விண்ணப்ப முறைமையை நேற்று அவர்கள் தாமாகவே பேதமையாகுமென்று நிறுத்திவிட்டனர்.

2. அப்படி அவர்கள் விண்ணப்பம் செய்ய விரும்பாத போதிலும் வெறுமே இந்தியா மந்திரிக்கு மீட்டிங்கைப் பற்றித் தகவல் கொடுக்க வேண்டுமென்று மிஸ்டர் பி. ஆர் சுந்தரய்யர் சொன்னதைக்கூட ஜனங்கள் அங்கீகரிக்கா மல் கோபமடைந்தார்கள்.

3. மயிலாப்பூர் வக்கீல்கள் தாம் ஜனத்தலைவர்கள் என்று கனவு கண்டு கொண்டிருந்தது பொய்க் கனவென்பதை அறிந்து கொண்டார்கள்.

4. ஸர்க்காரிலே ஸர் என்றும் உர் என்றும் பட்டம் பெற்றுத் திரிந்தர்களையெல்லாம் ஜனங்கள் மதிப்புடன் நடத்திய காலம் போய், இப்போது அவர்களைப் பகிரங்க ஸ்தானங்களிலே பேசவொட்டாத நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டார்கள்.

5. இங்கிலீஷிலே பேசக்கூடாது. தமிழ் நாட்டிலே ஜனத் தலைவர்கள் என்று பெயர் வைத்துக்கொண்டு

வருவோர் பொது விஷயங்களைப்பற்றித் தமிழிலேயே பேச வேண்டுமென்று ஜனங்கள் வற்புறுத்தினார்கள்.

6. ஸர். வி. சி. தேசிகாச்சாரிக்கும், மிஸ்டர் பி. ஆர். சுந்தரய்யருக்கும் ஜனங்கள் சரியான பாடம் சொல்லிக் கொடுத்தார்கள். சென்னை மாணாக்கர்களிலே பெரும்பாலார் வெளியூருக்குச் சென்றிருந்தபடியால் பழைய கட்சியார் இம்மட்டோடு பிழைத்தார்கள். ஒரு வாரத்திற்குமுன் இந்தப் பொதுக் கூட்டம் நடந்திருக்குமானால் நமது மயிலாப்பூர் நண்பர்களின் ஸ்திதி இன்னும் வேடிக்கையாக முடிந்திருக்கும். லாலா லஜபதிராய் தீபாந்திரத்துக்குப் போவதைப் பற்றி ஜனங்கள் மனது கொதித்துக் கொண்டிருக்கும்போதுகூட இவர்கள் சர்க்காரை ஸஹஸ்ர நாமம் சொல்லி அர்ச்சனை செய்வது தான் சரியான பாதையென்று நினைப்பது விநோதமாயிருக்கிறது.

இவர்கள் என்ன நினைத்தாலும் சரியே. இனி அதைப் பகிரங்கமாக வெளியிட்டுக் கூறத் துணிய மாட்டார்கள் என்று நேற்றே தெளிவாய் விட்டது.''

அரசியல் கட்டுரையாகவே கொண்டு பாரதியார் எப்படி அந்நிய அரசாங்கத்தின் மேல் வெறுப்புண்டாக்குகிறார் என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகள் காட்டலாம். ஆனால் 1920 நவம்பர் மாதம் 30 ஆம் தேதி எழுதிய விநோதக் கொத்து என்ற கட்டுரையில், வெளிஜிலாவின் கதி என்ற ஒன்றிரண்டு பகுதியே போதும். பாரதியார் இப்பொழுது பாண்டிச்சேரியிலிருந்து வெளிப்பட்டு சில நிபந்தனைகளின் மீது விடப்பட்டிருக்கிறார் என்பது கவனத்துக்குரியது. சில நிபந்தனைகள் என்றால் என்ன என்பதனை வாசகர்கள் ஊகித்துக்கொள்ளலாம். பழையபடி காரசாரமாக எழுதாமல் இருக்கவேண்டு

என்பதே அந்த நிபந்தனை. பாரதியாரோ பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராக மறைமுகத் தாக்குதல்களில் ஈடுபடுகின்றார். உலக அரசியல் நடவடிக்கைகளைப்பற்றி எழுதினால் அது குற்றமாகாது. ஆகவே அந்த வகையிலும் பாரதியார் எழுத முனைகின்றார். எப்படியாவது அந்நிய அரசாங்கத்தின்மேல் வெறுப்புண்டாக்கி சுயராஜ்யம் பெறுவதே தமது முக்கிய குறிக்கோளாகக் கடைசி வரையிலும் கொண்டிருக்கிறார் என்பது கவனிக்கத் தகுந்தது. அதற்கு இது நல்ல எடுத்துக் காட்டாகும்.

வெனிஜிலாஸின் கதி

நேசக் கக்ஷியாருக்குச் சார்பாக நின்று, யுத்த காலத்தில் கான்ஸ்டன்டைன் ராஜாவை யவன (கிரேக்க) ஸிம்ஹாஸனத்தினின்றும் தள்ளி, அதனால் உள்நாட்டில் தோன்றிய கிளர்ச்சியை வெளியுதவியால் நசுக்கித் தம்மைத் தாமே கிரேக்கரின் ஸ்வேச்சாதிபதியாகச் சமைத்துக்கொண்ட மந்திரி வெனிஜிசாஸுக்குக் காலம் சரியான கூலி கொடுத்து விட்டது. கிரேக்க ராஜதானியாகிய அத்தேனியா (ஏதென்ஸ்) நகரத்திலிருந்து, நவம்பர் 18 ஆம் தேதி புறப்பட்ட தந்தியொன்றில், இவர் அந்நாட்டினின்றும், ப்ரிடிஷ் போர்க் கப்பல்களின் பாதுகாப்பில் வெளியேறிச் சென்று விட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது. நேசக் கட்சியார் ஆட்டியபடியெல்லாம் ஆடும் பொம்மையாகத் தான் இருந்து கொண்டு, அவர்களுடைய பட்டாள உதவியால் தன் இஷ்டப்படி யெல்லாம் யவன தேசத்தை ஒரு பொம்மைபோல் ஆட்டிக்கொண்டு வந்த வெனிஜிலாஸ் இப்போது, ஸமீபத்தில் நடந்த எலக்ஷனில் தோல்வியடைந்ததுமன்றி, எந்த ராஜாவை வீழ்த்துவதில் இந்த மஹான் (!) அன்ய ராஜாங்கத்தாருக்கு உதவி

செய்து தன்னுடைய யஜமான விசுவாஸத்தை உலக சரித்திரத்தில் நிலை நிறுத்தி வைத்தாரோ, அந்தக் கான்ஸ்டன்டைன் ராஜாவே மீளவும் பட்டத்துக்கு வரவேண்டுமென்று தேசத்தில் பெரும்பகுதியார் உறுதி செய்து விட்டார்கள். இந்த விஷயத்திலும் நேசக் கக்ஷியின் முக்கிய வல்லரசுகளுக்குள்ளேயே, தெளிவான அபிப்பிராய பேதங்கள் தோன்றியிருக்கின்றன. யுத்தம் முடிந்து, யுத்தத்திலே தாமடைந்த வெற்றியின் லாபங் களைப் பங்கிடத் தொடங்கிய கால முதல் நேசக் கக்ஷி ராஜ்யங்களுக்குள்ளே அபிப்பிராய ஒற்றுமைகளைக் காட்டிலும் அபிப்பிராய பேதங்களே அதிகமாக ஏற்பட்டு வந்திருப்பதைக் கவனிக்குமிடத்து, அவற்றுடன் இப்போது புதியதோர் ஸங்கடம் நேர்ந்திருப்பதொரு மிகையாகத் தோன்றுது. 'முழுகக் குளித்தால் பிறகு குளிரில்லை' யென்பது தமிழ் வசனம். சில தினங்களில் முன்பு பார்லிமெண்ட் ஸபையில் மிஸ்டர் போனுர்லா பேசிய போது, கிரேக்க தேசத்தின் ஸம்ரக்ஷக பதவியைப் ப்ரான்ஸும், இங்கிலாந்தும் கைவிட்டு விட்டதாகவும், ஆதலால் இப்போது அந்நாட்டின் உள் விவகாரங்களில் குறுக்கிடும் அதிகாரம் அவ்வல்லரசுகளுக்குக் கிடையா தென்றும் தெரிவித்தார். ப்ரான்ஸ் தேசத்து மந்திரிகளோ கான்ஸ்டன்டைன் ராஜாவை மறுபடி கிரேக்க ஜனங்கள் பட்டத்துக்கு வைக்கக் கூடாதென்று பஹிரங்கமாக ஆக்ஷேபித்து வருகிறுர்கள். இனி நேசக் கக்ஷியைச் சேர்ந்த மூன்ருவது ஐரோப்பிய வல்லரசாகிய இத்தாலியின் அபிப்பிராயத்தைக் கவனித்தால், பிரான்ஸ் சொல்வதற்கு நேர் விரோதமாக இருக்கிறது.

கான்ஸ்டன்டைன் ராஜா பட்டத்துக்கு வராமல் தடுக்கும் எந்தக் காரியங்களிலும் தான் ஸம்பந்தப்பட முடியாதென்று இத்தாலி ஸ்பஷ்டமாகத் தெரிவித்த

விட்டது. அமெரிக்க— ஐக்ய நாடுகளை இன்னும் நேசக் கக்ஷியுடன் சேர்த்துக் கணக்கிடலாமோ, எப்படியோ, என்றால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. எனினும் அமெரிக்காவை இப்போதும் நேசக் கக்ஷியினருடனே சேர்ந்துக் கணக்கிடுதல் பெருங் குற்றமாகாதென்றே நினைக்கிறேன். அந்த அமெரிக்கா இத்தருணத்தில் கிரேக்க ஜனங்களின் ஸ்வநிர்ணயத்துக்கு மாறான ப்ரான்ஸ் தேசக் கொள்கையை ஆதரிக்குமென்று நான் நினைக்கவில்லை. நேசக்கக்ஷியாரின் பொது நிலைமை இவ்வாறிருக்க நேற்று வரை அந்தக் கட்சிக்கு கிரேக்கதேசம் ஒரு அலங்காரமாக இருந்தது. துருக்கியின் உடைமைகளிற் சிலவற்றை நேசக் கக்ஷியார் கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தது போல், தனக்குக் கீழ்படுத்திக் கொடுக்கப் பெற்ற கிரேக்க தேசத்து ஜனங்கள் இப்போது மற்ற நேசக் கக்ஷியாரின் அபிப்பிராயங்களைக் குறித்து என்ன நினைக்கிறார்களென்பதைக் கவனிப்போம். அவர்கள் நேசக் கக்ஷியாரின் எண்ணங்களைச் சிறிதேனும் பொருட்படுத்த வில்லையென்று தெரிகிறது.

நேற்று மித்திரனில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கும் ராய்ட்டர் தந்தியொன்றில், கிரேக்க ஜனங்களும், கவர்ன்மெண்டாரும், கான்ஸ்டன்டைன் ராஜா திரும்ப வருவதைக் குறித்து ஸந்தோஷக் கொண்டாட்டங்கள் நடத்தி வருகிறார்களென்றும், எல்லா ஸர்க்கார் கச்சேரிகளிலும், நியாயஸ்தலங்களிலும் கான்ஸ்டன்டைன் ராஜாவின் சித்திரங்களைத் தொங்கவிட்டு வைக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டார் கட்டளை பிறப்பித்திருக்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது. மேலும் லண்டனில் கிரேக்க ராஜாங்கத்தின் முக்ய ஸ்தானாதிபதியாக வேலை பார்த்தவரும், சென்ற பதினேழு வருஷங்களாக லண்டனிலிருந்து, கிரேக்க தேசத்துக்கும் இங்கிலாந்துக்கும்

நட்புறுதி யுண்டாகுமாறு பாடுபட்டு வந்தவருமாகிய ஸர் ஜான் ஸ்டவர்நிட் என்பவர் வெனிஜிலாஸுக்கு ஒரு அனுதாபத் தந்தியனுப்பியது காரணமாக அந்த ஸ்தானிப பதியை இப்போதுள்ள கிரேக்க கவர்ன்மெண்டார் உத்யோகத்தை விட்டு நீக்கியதாயும் தெரிவிக்கப்படுகிறது. இந்த வெனிஜிலாஸ் மந்திரியைப் போலவே ருஷியாவை நேசக்கக்ஷிக்கு வாலாக்கிவிட முயற்சி செய்த கெரன்ஸ்கி என்ற ருஷிய மந்திரியை மித்திரன் நேயர்கள் மறந்திருக்க மாட்டார்களென்று நம்புகிறேன். ஒரு காலத்தில், கெரன்ஸ்கியை ருஷியா தேசத்து நெப்போலியன் என்று சில ஆங்கிலேயப் பத்திராபதிபர் முதலியோர் சொல்லி வந்தனர். இன்று அந்தக் கெரன்ஸ்கியின் பெயரையே உலகத்தார் மறந்துவிடக் கூடிய நிலைமை வந்துவிட்டது. மிஸ்டர் வெனிஜிலாஸ், மிஸ்டர் கெரன்ஸ்கி இவ்விருவரில் ஸ்வதேசா பிமானப் பரிசு யாருக்குக் கொடுக்கலாமென்று யோசித்தால் அந்த யோசனையில் ஒரு முடிவுக்கு வருதல் ஸாத்தியமில்லை யென்றே தோன்றுகிறது.

பாரதியாரும் அரசியலும்

மேலே மாதிரிக்கு ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது இதைப்போல நையாண்டியும், கிண்டல்களும், கேலிகளும் வஞ்சப்புகழ்ச்சிகளும் நிறைந்த பல அரசியல் கட்டுரைகளை ரஸத்திரட்டு, குறிப்புகள், விநோதத்திரட்டு, விநோதக் கொத்து, விநோதவிஷயங்கள், உலக விநோதங்கள், உலக நிலை, காலவிளக்கு, மணித்திரள், தீப்பொறிகள், காலக் கண்ணுடி, ஐர்லாந்தும் இந்தியாவும்-என்று இவ்வாறு பலப்பல தலைப்புகளில் வெளியிட்டுள்ளார். மறைமுகமாகப் பிரிட்டிஷ் ஆட்சியைத் தாக்க வேண்டும் அதன்மேல் வெறுப்பு உண்டாகி விடுதலைக்கு வழிகோல வேண்டும் என்பதே இக்கட்டுரைகளின் நோக்கமாகும்.

முக்கியமாக அன்று பிரிட்டிஷ் பிரதம மந்திரியாகிய லாய்ட் ஜார்ஜையே தமது இலக்காகக் கொண்டிருக்கிறார். லாய்ட் ஜார்ஜும் அவருடைய ஐர்லாந்துக் கொள்கையும் என்ற கட்டுரையில் கிண்டல்களும் நையாண்டியும் கலந்து வன்மையாகக் கண்டிக்கிறார். இப்படிப்பட்ட பிரதம மந்திரியிடமிருந்து நாம் ஸ்வராஜ்யம் எதிர்பார்க்கவே முடியாது என்று மக்கள் மனதில் நன்கு பதிய வைக்கிறார் பாரதியார். மக்களிடத்தே விடுதலை வேட்கையைப் பரப்ப வேண்டும் என்பதே உயிர்மூச்சாகக் கொண்டிருக்கும் பாரதியாருக்கு நிபந்தனைகள் என்ன செய்ய முடியும்? நிபந்தனைகள் ஒரு புறம் இருக்க மறு புறத்திலே பாய்கின்றார் பாரதியார். சுதேசமித்திரன் போன்ற மிதவாத நாளிதழ்களும் வெளிநாட்டுக் கொள்கைதானே பாரதியார் விருப்பப்படி எழுதவிட்டு விடலாம் என்று நினைத்தனபோலும்! ஐர்லாந்தும் இந்தியாவும் என்று 1921—ம் ஆண்டு ஜூலை மாதம் 19 - ந் தேதி வெளி வந்த கட்டுரையின் மேலும் ஒரு பகுதியை இங்கு எடுத்துக் காட்டுக்காகக் காண்பிக்கப்படுகின்றது.

"ஐர்லாந்துக்கு ஏறக்குறைய இந்தமுறை ஸ்வராஜ்யம் கொடுத்துத்தான் தீர வேண்டுமென்று தோன்றுகிறது. இல்லாவிட்டால் அமெரிக்கா சும்மா விடாது. கானடா சும்மாவிடாது. ஆஸ்திரேலியா, தென் ஆபிரிகா, நியூஜிலாந்து முதலிய குடியேற்ற நாடுகள் பொறுத்திருக்க மாட்டா. ப்ரான்ஸிடம் விடுதலைப் ப்ரஸங்கங்களை விரிக்க இங்கிலாந்துக்குச் சிறிதேனும் இடமில்லாமற் போய்விடும். உலகமுழுமையிலும் அபகீர்த்தி முற்றும். இங்கிலாந்தின் சத்ருக்கள் பெருமகிழ்ச்சியடைய ஹேதுவுண்டாகும். இத்தனை உதவிகளுமில்லாது போயினும் இப்போது ஸ்வராஜ்யம் கொடுக்காவிட்டால், ஐர்லாந்து சும்மா இராது. ஸ்வராஜ்யத்தை வற்புறுத்தும் பொருட்டு

ஐர்லாந்தியர் ஐர்லாந்திலும், லண்டன் மான்செஸ்டர் முதலிய நகரங்களிலும் என்ன காரியங்கள் செய்து வந்தன ரென்பதும், அதனால் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் முதலியோருக்கு நேர்ந்த அஸௌகர்யங்கள் எவையென்பதும் நேயர்களுக்குத் தெரிந்த சங்கதிகளேயாம்.

இத்தனை பலாத்காரங்களைக் கருதி ஸ்வராஜ்யம் கொடுத்துத் தொலைப்போம் எனிலோ, வட ஐர்லாந்து மந்திரியாகச் சில தினங்களின் முன்னே முளைத்திருக்கும் ஸர் ஜேம்ஸ் க்ரேக் ஏற்கெனவே போர்க் கொடியைத் தூக்கி விட்டார். அல்ஸ்டர் மாகாணத்துக்குத் தனிப் பார்லிமெண்ட் சாசுவதமாக இருக்குமெனில், பிறகு ஐரிஷ்ஸ்வராஜ்யம் என்பதற்கு அர்த்தமே கிடையாது. ஐர்லாந்தை இரண்டாக வெட்டிப் பிறகு ஸ்வராஜ்யம் கொடுப்பதென்றால், என்ன செய்கை அது!

அஃதொருவனை இரண்டாக வெட்டிக் கொன்ற பின்னர் அவனுக்கு மணம் புரிவிப்பதாகக் கூறுதல் போலும். எனவே, அல்ஸ்டர் என்றொரு பதார்த்தம் இருப்பதன் உண்மையை நன்குணர்ந்த ஸ்ரீமான் தெவலேரா, தாம் தமது குடியரசுக் கொள்கையை விட்டு "ஸ்மட்ஸ்" ஸ்வராஜ்யத்தை அங்கீகரிக்க ஆயத்தமாக இருப்பதாகவும், ஆனால் அல்ஸ்டர் தனது தனிப் பார்லிமெண்டை விட்டுவிட வேண்டுமென்றும் வற்புறுத்தினர். இங்ஙனமிருக்க, முன்பு யூனியனிஸ்ட் தலைவராக இருந்து இங்கிலீஷ் கவர்மெண்டினிடமுள்ள அளவிறந்த பக்தியால், அதனை எதிர்த்துப் போர்செய்யப் படைகள் தயார் செய்தவராகிய ஸர் எட்வர்ட் கார்ஸனுடைய பட்டத்தில் இப்போதிருக்கும் அல்ஸ்டர் ப்ரதம மந்திரியான ஸர் ஜேம்ஸ் க்ரேக் லண்டன் சமாதான ஸங்கத்திற்குத் தம்மை ப்ரிடிஷ் கவர்மெண்டார் அழைத்திருப்பதைக் குறித்துப்

பேசிய உதாஸீன மொழிகளை ராய்ட்டர் தந்திகளி னிடையே காணலாம்.

இங்கிலாந்திலும் லார்ட் டெர்பி முதலியவர்கள் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜைக் கடலில் கவிழ்த்து விடுவதற் குரிய யோசனைகள் இப்போது தீவிரமாகப் புரிவதன் காரணம் ஐர்லாந்துக்கு அவர் ஸ்வராஜ்யங் கொடுத்து விடுவாரோ என்ற பயத்தாலேயன்றிப் பிறிதில்லை.

கான்ஸர்வடிவ் கக்ஷியார் கைவிட்டால் பிறகு மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜுக்கு பஸிபிக் சமுத்திரந்தான் கதி.

இங்ஙனம் ஐர்லாந்து விஷயத்தில் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் இருதலைக் கொள்ளி எறும்புபோல் இடர்ப்படுதல் ஒருபுறமிருக்க, இந்த சமயத்தில் இந்தியராகிய நாமும் அவரிடம் ஒரு செய்தியை மிக நன்கு வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்.

அதாவது, ஐர்லாந்தைச் சென்ற பல நூற்றாண்டுகளாக மீட்டும் மீட்டும் போரில் அடக்கி, அதன் விடுதலை வேட்கையை மறுத்து வந்தீர்கள். ஐர்லாந்து மிகச் சிறிய நாடு. உண்மையில், இப்போதுகூட இங்கிலாந்தினாலே ஐர்லாந்தைப் போரில் மடக்கிவிட முடியும்.

அப்படியிருந்தும், உலக முழுமையிலும் எழுச்சி பெற் றிருப்பதாகிய, பெரிதோர் தர்மக்கிளர்ச்சியை முன்னிட்டு, ஐர்லாந்துக்குக்கூட இனி ஸ்வராஜ்யமில்லை என்று மறுத்தல் இங்கிலாந்துக்கு ஸாத்யப் படாதென்று தீர்ந்து போய் விட்டது.

அப்படியிருக்க, 5000 வருஷங்களுக்கு முன்னே வேதாந்தப் பயிற்சி செய்தது; முப்பது கோடி ஜனங் களுடையது; இன்றைக்கும் ஜகதீச சந்திரர் முதலியவர் களின் மூலமாக உலகத்தாருக்கு நாகரிகப் பாதையிலே வழி காட்டுவது; பூமண்டல சரித்திரத்திலே வீர்ய முதலிய ராஜ

குணங்களில் நிகரற்றதாகிய இந்தியாவுக்கு விடுதலை எப்போது தரப்போகிறீர்கள்?"

பாரதியார் அரசியல் கட்டுரைகளில் எவ்வாறு நையாண்டி செய்கிறார் என்று எடுத்துக்காட்டுகள் சிலவற்றின் வாயிலாகப் பார்த்தோம்.

இவற்றை முற்றிலும் அறிந்துகொள்ள விருப்பமுடையவர்கள் 'பாரதி தமிழ்' என்ற எனது தொகுப்பு நூலிலும், பாரதி தரிசனம் என்ற இரண்டு தொகுதிகளாக வெளியிட்ட நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பதிப்பகத்திலும் படித்து இன்புறலாம். அரசியல் கட்டுரைகளிலும் எவ்வாறு தமது பேனாவைத் திறம்படக் கையாள்கிறார் என்பதை இம் மூன்று நூல்கள் நன்கு தெரியப்படுத்தும்.

ஆனால் பாரதியார் அரசியல் அல்லாத கட்டுரைகளிலும் எவ்வாறு நகைச்சுவையைப் புகுத்துகிறார் என்பதை அவருடைய மேதைக்கு ஓர் இலக்கணமாகக் காட்டலாம். உல்லாஸ சபை, பொழுதுபோக்கு என்பன இவற்றிற்குச் சிறந்த எடுத்துக் காட்டு. மேலும் இவை, பாரதியார் இயல்பாகவே நகைச்சுவை மிக்கவர் என்பதற்குச் சான்று பகர்வதாக அமைந்துள்ளன.

உல்லாஸ சபை

29 மார்ச் 1916

வேதபுரம் உல்லாச சபையில் நடந்த செய்தி.

சபைக்கு வந்திருந்த பேர் : —

(1) ஜிந்தாமியான் ஸேட், (2) வெங்கட்டராவ், (3) குண்டு ராயர், (4) குமாரசாமி வாத்தியார், (5) எலிக் குஞ்சு செட்டியார், (6) காளிதாஸன், (7) மணவாளன் செட்டியார்.

வராத பேர் :— கோமதி நாயகம் பிள்ளை, மாரப்ப முதலியார்.

எலிக்குஞ்சு செட்டியார் : இன்று சபாநாயகராக இருக்கும்படி காளிதாஸரை வேண்டுகிறேன்.

காளிதாஸன் : எனக்குச் சம்மதமில்லை. வெங்கட்டராவைப் போடுங்கள்.

எலிக்குஞ்சு செட்டியார் : காளிதாஸரே சபாநாயகராக வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஜிந்தாமியான் சேட் : எனக்கு அதுவே சம்மதம்.

குமாரசாமி வாத்தியார் : எனக்கும் அப்படியே.

சபையாரின் பொது வேண்டுகோளின்படி காளிதாஸன் அக்கிராசனம் வகித்தார்.

எலிக்குஞ்சு செட்டியார் : சபாநாயகரே, விவகாரம் ஆரம்பிக்கலாமா?

சபாநாயகர் : அப்படியே செய்யலாம்.

எலிக்குஞ்சு செட்டியார் : இந்தக் காளிதாஸரை நமது சபையைவிட்டு நீக்கிவிட வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இதைச் சபையார் அங்கீகாரம் செய்ய வேண்டும்.

குமாரசாமி வாத்தியார் : ஏன் காணும், செட்டியாரே, என்ன காரணம்?

ஜிந்தாமியான் சேட் : செட்டியார் மனத்தில் இந்தக் கருத்திருக்கும்போது அவர் காளிதாஸரை இன்று சபாநாயகராக இருக்கும்படி கேட்டது கேலிதானே? நமது சபையில் இப்படி நாணயக் குறைவான கேலிகள் செய்வதைப் பார்த்தால் எனக்கு அருவருப்புண்டாகிறது.

எலிக்குஞ்சு செட்டியார் : நாணயக் குறைவா? யாருக்குக் காணும் நாணயக் குறைவு? சாஹப், உம்முடைய மஹம்மதிய குணங்களை நம்மிடம் காட்ட வேண்டாம் தெரியுமா?

ஜிந்தாமியான் சேட் : செட்டியாரே, அதிக வார்த்தை பேசிவிட்டீர். ஒரு தரம் பொறுத்தேன். ஹோஷ்யார்! (ஜாக்ரதை!)

எலிக்குஞ்சு செட்டியார் : என்ன ஸாஹப், தாடியை உருவுகிறீரே, அடித்துப் போடுவீரோ?

ஜிந்தாமியான் சேட் : ஹோஷ்யார்!

எலிக்குஞ்சு செட்டியார் : நம்முடைய கடையிலே உம்மைப் போலவே நாலு முரடர்களை வேலைக்கு வைத்திருக்கிறேன். ஞாபகமிருக்கட்டும்.

ஜிந்தாமியான் சேட் : ஹோஷ்யார்! ஹோஷ்யார்!

எலிக்குஞ்சு செட்டியார் : என்ன காணும், வெகு பயமுறுத்துகிறீரே! யாரென்று நினைத்தீர் நம்மை? (என்று சொல்லிக் கொண்டு எலிக்குஞ்சு செட்டியார் எழுந்து நின்று கையை ஓங்கினார்.)

சபையார் கலீரென்று சிரித்தார்கள். ஏனெனில் எலிக்குஞ்சு செட்டியார் $4\frac{3}{4}$ அடி உயரம். ஜிந்தாமியான் ஸேட் $6\frac{3}{4}$ அடி உயரம். செட்டியார் $1\frac{1}{4}$ அடி அகலம். ஸேட் $3\frac{1}{4}$ அடி அகலம். செட்டியாருக்கு வயது 55. ஸேட்டுக்கு வயது 33.

இந்தச் சமயத்தில் காளிதாஸன் எழுந்து, "உல்லாஸத்திற்கு ஒரு அளவிருக்கவேணும். வரை கடந்து போகலாகாது. செட்டியாரே உட்காரும்....என்னைச் சபையிலிருந்து நீக்க வேண்டும் என்று பிரேரணை செய்தீர் முகாந்தரங்கள் சொல்லும்" என்றார்.

குமாரசாமி வாத்தியார் : ஆமாம், காரணம் எல்லாம் காரணம்?

எலிக்குஞ்சு செட்டியார் : நமது சபையின் காரியங்களை வாரந்தோறும் சென்னப்பட்டணத்துப் பத்திரிகையில் பிரசுரம் செய்யும்படி நாம் காளிதாஸரை நியமித்தோம். அதன்படியே அவர் முதலாவது கூட்டத்து விவஹாரங்களைச் சுதேசமித்திரன் பத்திரிகைக்கு எழுதினர். அதற்கப்பால் நடந்த கூட்டங்களில் ஒன்றைப் பற்றியேனும் எழுதவில்லே. இன்று நடப்பது ஆருவது அல்லது ஏழாவது கூட்டமென்று நினைக்கிறேன். இவர் இத்தனை அஜாக்கிரதையுடன் நமது சபையாருக்கு வாக்குத் தவறியது பற்றி இவரை நீக்கிவிட வேண்டுமென்று சொல்லுகிறேன்.

காளிதாஸன் : சபையார் என்னை மன்னிக்க வேண்டும். நமது சபை விவகாரங்கள் ரஸமாக இருக்கும் சமயங்களில் பத்திரிகைக்கு எழுதலாம். அப்படி விசேஷமொன்றும் சென்ற கூட்டங்களில் நடக்கவில்லே. ஆகையால் எழுதவில்லே.

எலிக்குஞ்சு செட்டியார் : ரஸம், ரஸமில்லே. அதெல்லாம் நீர் சொல்ல வேண்டிய அவசியமில்லே. சபையில் நடக்கும் விஷயங்களை நீர் அப்படியே எழுதிவிட வேண்டும். பத்திரிகைக்காரர் போடாவிட்டால் நீர் ஜவாப்தாரி இல்லே.

(இங்ஙனம் சிறிது நேரம் வாதங்கள் நடந்த பின் கடைசியாக சபையார் செய்த முடிவு—காளிதாஸரை நீக்கிவிட வேண்டுமென்று செட்டியார் சொல்லியது பிழை. சபையில் என்ன நடந்த போதிலும் அதை அப்படியே காளிதாஸர் பத்திரிகைக்கு எழுதிவிட வேண்டும். கொஞ்சங்கூட ரஸமில்லாத வார்த்தைகள் ஒரு கூட்டத்தில்

பேசப்பட்டதாகக் காளிதாஸருக்குத் தோன்றுமானால் அவ சபையாரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு எழுதாமலிருக் லாம்.)

குமாரசாமி வாத்தியார் : மேலே விசாரணைகளை செய்வோம்.

குண்டு ராயர் : பெல்ஜியம் தேசத்திலே எமீல் வெர் ஹேரன் (Emile Verhaeren) என்று ஒரு கவி இருக்கிறான் அவருடைய கவிதை புது வழியாக இருக்கிறதென்று ஒரு பத்திரிகையில் வாசித்தேன். எப்படி யென்றால், இது வரை உலகத்துக் கவிகள் நமது நவீன நகரங்களிலேயுள்ள யந்திர ஆலைகள், மோட்டார் வண்டிகள் முதலிய வஸ்துக்களைத் தமது கவிதையிலே சேர்ப்பதில்லை. இந்த வஸ்துக்களிலே அழகில்லையாதலால் கவிதையிலே சேர்க்கத் தகாதன என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். வானம், காற்று, நீர் வனம், மலை, பெண், செல்வம், மது, தெய்வம், தவம், குழந்தை முதலிய அழகுடைய வஸ்துக்களையே கவிகள் வர்ணிப்பது வழக்கம், எமீல் வெர்ஹேரன் என்பவருடைய கொள்கை யாதென்றால்—"வலிமையே அழகு. ஒரு பொருளின் வெளியுருவத்தைப் பார்த்து அது அழகா இல்லையா என்று தீர்மானம் செய்யலாகாது. யந்திரங் களிலே வலிமை நிகழ்கின்றன. ஆதலால் அவை அழகுடை யன. அவற்றைக் கவி புகழ்ச்சி செய்தல் தகும்".

காளிதாஸன் : வலிமை ஓர் அழகு. அழகு ஒரு வலிமை. யந்திர ஆலை, நீராவிவண்டி, நீராவிக் கப்பல் வானத்தேர், பெரிய பீரங்கி எல்லாம் அழகுதான் உயர்ந்த கவிகள் வலிமையுடைய பொருள்களை அவ்வக் காலத்தில் வழங்கிய வரையிலே வர்ணனை செய்துதான் இருக்கிறார்கள். இதிலே புதுமையொன்றுமில்லை. வலிமைக் கருவிகள் இப்போது சில புதுமையாகத் தோன்றியிருக்

கின்றன. இவற்றை ஐரோப்பியக் கவிகள் விலக்கி வைத்தது பிழை. ஆனால், பழைய தெய்வத்தையும், இயற்கையையும் மறந்து யந்திரங்களைப் பாடத் தொடங்கினால் கவிதை செத்துப்போய்விடும்.

எலிச்குஞ்சு செட்டியார் : அது கிடக்கட்டும். நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அதை ஆலோசனை பண்ணுங்கள். காக்கைக்கு 100 வயதென்று சொல்லுகிறார்கள். அது வாஸ்தவமானால், தெய்வத்துக்குப் புத்தியில்லையென்று நான் சொல்லுகிறேன். காக்கைக்கு 100 வயது, மனிதனுக்கும் 100 வயதா? அதிலேகூட மனிதனை விடக் காக்கையின் வயது கொஞ்சம் அதிக நிச்சயமாகத் தோன்றுகிறது. இதென்ன படைப்பு?

குமாரசாமி வாத்தியார் : எலிக்குஞ்சு செட்டியாரே, உமக்கு இப்போது வயது 55 ஆகிறது. இதனால் என்ன பிரயோஜனம்? காக்கை ஊரிலுள்ள அசுத்தங்களையெல்லாம் நீக்கி இயன்றவரை வியாதிகளைக் குறைத்து மனிதருக்கும் மற்ற ஜந்துக்களுக்கும் நன்மை செய்கிறது. நீர் பை, பையாகப் பணத்தை உள்ளே போட்டு மூடி வைத்திருக்கிறீர். போன மாதம் ஒரு அவஸரத்துக்காக 50 ரூபாய் கடன் கேட்டேன். பொய் முகாந்தரம் சொல்லி மழுப்பி விட்டீர். உம்மால் யாருக்கென்ன பிரயோஜனம்?

எலிக்குஞ்சு செட்டியார் : உம்மாலே உலகத்துக்கு என்ன நன்மை காணும், குமாரஸாமி வாத்தியாரே? அதை முதலாவது சொல்லும்.........

இப்படி வார்த்தை சொல்லிக்கொண்டிருக்கும் போது, எலிக்குஞ்சு செட்டியார் வீட்டு வேலைக்காரன் ஒருவன் வாயில் நுரை தள்ளும்படி ஓடி வந்து, "ஐயா, நம்மவீட்டு வைக்கோல் போரிலே நெருப்புப் பற்றிக் கொண்டு எரிகிறது" என்று சொன்னான்.

"நெருப்பா?" என்று செட்டியார் உடனே எழுந்து ஓடினார். சபையைக் கலைத்துவிட்டு நாங்களெல்லோரும் செட்டியாருக்கு உதவி செய்யும் பொருட்டு அவர் வீட்டுக்குப் போனோம். அங்கே போய்ப் பார்க்கும் போது... அது மற்றொரு நாட் கதை. இன்று கதை இத்துடன் முடிகிறது.

பொழுது போக்கு

28 மார்ச்சு 1917

(காளிதாஸனுக்கும் ஸந்தோஷராயருக்கும் நடந்த சம்பாஷணை)

காளிதாஸன் எழுதியது.

ஸந்தோஷராயர் : காளிதாஸரே, பத்திரிகைகளில் ஏதேனும் இன்று புது விசேஷங்களுண்டா?

காளிதாஸன் : *ஒன்றுமில்லை.*

ஸந் : ருஷியாவில் ராஜ்யம் புரண்டு போனதாகவும், இரண்டே சில்லரை ஜார் ராஜிநாமாக் கொடுத்ததாகவும் போட்டிருந்ததே; அதற்கப்பால் என்னயிற்று?

காளி : இரண்டே சில்லரை ஜார் என்கிறீரே அதென்ன?

ஸந் : பழைய ஜார் நிக்கொலஸ் ஒன்று; அவருடைய ரகஸ்யப் பிள்ளைதான் சில்லரை; ஆக ஒன்றே சில்லரை. பின்பு சக்கரவர்த்தியின் தம்பியாகிய மைக்கேல்; ஆக இரண்டே சில்லரை.

காளி : ***சரிதான்.***

ஸ்ந் : ருஷியாவில் நிரங்குசமாகப் பத்திரிகைச் சுதந்திரமில்லாமலும், பேச்சுச் சுதந்திரமில்லாமலும்

தம்மிஷ்டப்படி அரசாண்டுவந்த ஜார் சக்ரவர்த்திகளின் அதிகாரம் தொலைந்து ஜனங்களின் அதிகாரம் ஏற்பட்டது. பற்றி உமக்கு சந்தோஷமுண்டாகவில்லையா?

காளி : வாஸ்தவந்தான்.

ஸந் : என்ன ஓய் வாஸ்தவந்தானென்று இலேசாகச் சொல்லுகிறீரே? ஜனாதிகாரத்துக்குத் தானே ஐரோப்பாவில் இத்தனை பெரிய சண்டை நடக்கிறது? அதற்காகத்தானே நம்முடைய பிரிட்டிஷ் சிநேகிதர்களும் மற்ற தேச ராஜயத்தாரும் கோடி கோடியாகப் பணத்தை வாரி இறைக்கிறார்கள்? லக்ஷக் கணக்கான மனிதர்களைப் பலியிடுகிறார்கள்? பூமண்டல முழுவதும் ஜனாதிகாரமும், விடுதலையும் நிலைபெறும். அப்பேதுதான் நம்முடைய நேச ராஜ்யங்களின் நோக்கம் முழுதும் நிறைவேறி, இவர் களுடைய கீர்த்தி எக்காலத்திலும் அழியாமலிருக்கும். ருஷியாவில் பழைய ராஜாங்கத்தை எதிர்த்து, அதன் பொருட்டாகச் சிறைப்பட்டிருந்த தேசாபிமானிகளை யெல்லாம் விடுவித்துவிட்டு அவர்களுக்குப் பதிலாக ரஹஸ்யப் போலீஸாரைச் சிறைக்குள்ளே தள்ளி விட்டார்களென்று பத்திரிகையில் வாசித்தேன். இதில் எனக்குண்டான ஸந்தோஷம் சொல்லி முடியாது.

காளி : சரிதான்.

ஸந் : ருஷியாவிலே இதுவரை தேசாபிமானிகள் பட்டுவந்த கஷ்டங்களை ஆதிசேஷனாலே கூட வர்ணிக்க முடியாது. போலீஸ்காரரின் சந்தேகத்துக்குட்பட்டவர்கள் ஸைபீரியாக் காடுகளிலும், உள்நாட்டுச் சிறைகளிலும் துன்பப்பட்டு மடிந்த கொடுமைகளை யெல்லாம் நீர் சரியாகக் கேள்விப்பட்டதில்லையென்று நினைக்கிறேன்,

கேள்விப் பட்டிருந்தால் இப்போது நீர் அதிகமான ஸந்தோஷமடைவீர்.

காளி : சரிதான். ஆனால் நீர் போன மாஸம் என்னை பார்த்தபோது ஜார் சக்ரவர்த்தியையும் அவருடைய மந்திரிகளையும் புகழ்ந்து பேசினதாக ஞாபகமிருக்கிறது.

ஸந் : ஓயாமல், ஹிந்துக்களைப் புகழ்ந்து கொண்டிருந்தால் நீர் மகிழ்ச்சியுடன் கேட்டுக் கொண்டிருப்பீர். போன மாஸம் நான் ஜார் சக்ரவர்த்தியைப் புகழ்ந்த காரணம் வேறு. ராஜ்யத்தில் எத்தனை கஷ்டங்களிருந்த போதிலும், ரஸ்புதீன் முதலிய துர்மந்திரிகளின் வார்த்தையைக் கேளாமல், அவர் நம்முடைய நேச ராஜ்யங்களின் விஷயத்தில் உண்மை செலுத்தி வந்ததன் பொருட்டாக அவரைப் புகழ்ந்தேன். இப்போது......

காளி : சரி; சரி; நிறுத்தும். வேறேதேனும் கதை சொல்லும் கேட்கிறேன்.

ஸந் : ஏழெட்டு நாளைக்கு முன்பு நம்மூருக்கடுத்த பிள்ளைப்பட்டி யென்ற கிராமத்தில் ஒருவன் கோபத்தால் தன் மனைவி வயிற்றில் மிதித்தானாம். அவள் செத்துப் போய் விட்டாளம். அந்த விஷயம் இப்போது போலீஸ் விசாரணையிலிருக்கிறதாம். நீர் கேள்விப்பட்டீரா?

காளி : ஆம்.

ஸந் : அதிலிருந்து, அந்தக் கிராமத்து ஜனங்களெல்லாம் ஆலமரத்தடியில் ஒரு கூட்டம் கூடி இனிமேல் யாரும் பெண்டாட்டியை அடிக்கக்கூடாது என்று தீர்மானம் செய்துகொண்டார்களாம். அது கிடக்கட்டும். காளி தாஸரே, உம்மிடம் நான் ஒரு முக்கியமான விஷயம் கலந்து பேசவில்லையோ?

காளி : சங்கதியென்ன?

ஸந் : ஏப்ரல் மாதம் 22-ந் தேதி ஒரு வால் நக்ஷத்திரம் எரி நக்ஷத்திரம் ஒன்றைத் தன் வாலில் கவ்விக் கொண்டு வந்து பூமியின் மேல் மோதப் போவதாகவும், அதனால் இந்தப் பூமண்டலம் தூள் தூளாக நொறுங்கிவிடப் போவதாகவும் சொல்லுகிறார்களே? அது வாஸ்தவமாக இருக்குமா?

காளி : பொய்க் கதை.

ஸந் : உமக்கெப்படித் தெரியும்? அமெரிக்கா தேசத்தில் யாரோ ஒரு பெரிய வான சாஸ்திரப் பண்டிதர் சொல்லியிருக்கிறாராமே? அது பொய்யென்று நீர் எப்படிக் கண்டீர்?

காளி : பொய்க் கதைதான் எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஏப்ரல் மாதம் 23-ம் தேதி நீர் என்னிடம் வந்து சேரும். அப்போது காரணங்கள் சொல்லுகிறேன்.

ஸந் : பூமி தூளாய்ப்போன பிறகு நான் உம்மிடம் வந்து கேட்பதெப்படி? நீர் விடை சொல்வதெப்படி?

காளி : இந்தப் பூமியில் இன்னும் நாமே நெடுநாளி லிருந்து பலவித நியாயங்கள் நடந்து நிறைவேறுவதைப் பார்க்கப் போகிறோம். பூமியில் நல்ல யுகம் தோன்றப் போகிறது. மனித ஜாதி முழுமைக்கும் விடுதலை யுண்டாகப் போகிறது. நீர் சொல்லிய ருஷிய ராஜ்யப் புரட்சியானது இனி வரப்போகிற நற்காலத்தின் முன்னடையாளங்களில் ஒன்று. பூமி தூளாகாது; மனிதர் ஒருவருக்கொருவர் செய்யும் அநீதி தூளாகும்.

ஸந் : சரி; சரி; உம்முடைய ஞான மூட்டையை நம்மிடம் அவிழ்க்கத் தொடங்கிவிட்டீர்...... எனக்குக் காபி சாப்பிட நேரமாகிறது. நான் போய்வருகிறேன்

இவ்வாறு சொல்லி ஸந்தோஷராயர் எழுந்து போய்விட்டார் ஸந்தோஷராயர் வெளிக்கு எப்படிப்

பேசியபோதிலும் மனதுக்குள் தெய்வபக்தியுடையவர். மனுஷ்ய ஜாதியின் முதுகின்மேலே பல்லாயிர வருஷங்களாகச் சுமந்து போயிருக்கும் அநீதியாகிய மலை சிதறிப் போகவேண்டுமென்பதே அவருடைய கருத்து.

வேடிக்கைப் பெயர்கள்

பாரதியார்—வேடிக்கையான பெயர் வைப்பதிலே அவருக்கிணை அவர்தான். எலிக்குஞ்சு செட்டியார், விளக்கெண்ணெய் செட்டியார், வெல்லச்சுசெட்டியார், இடிப் பள்ளிக்கூடம் என்று இப்படி வேடிக்கையாகவும் பொருத்தமாகவும் பெயர் வைப்பார்.

இந்த நகைச்சுவை இல்லாவிட்டால், பாரதியாருக்கு வறுமைத்துன்பத்தைப் பொறுத்துக்கொண்டிருக்கும் சக்தி வரவே வராது. எந்த ஒரு சம்பவத்தைக் கண்டாலும் அதில் நகைச்சுவையைக் காண்பது அவருக்கு இயல்பாக அமைந்துள்ளது.

பாரதியார் வீட்டில் ஒரு சமயம் உணவுக்கு வேண்டிய அரிசியை, கல் பொருக்கி வைத்திருந்தார்களாம். தமது மனைவியாகிய திருமதி செல்லம்மா அவர்கள் ஏதோ வேலையாகப் போயிருந்தார்கள். அங்கே சிட்டுக்குருவிகளும் காக்கைகளும் பறந்து வந்தன. உடனே அவர் அந்த அரிசியெல்லாம் பறவைகளுக்கு உணவாகப் போட்டு விட்டு ஆனந்தப்பட்டுக்கொண்டிருந்தாராம்.

திருமதி செல்லம்மா அவர்கள் திரும்பிவந்து பார்க்கும் பொழுது அரிசியெல்லாம் காலியாக இருந்தது.

"ஐய்யய்யோ! வெகுநேரம் கல் பொருக்கிய அரிசியை இப்படி இறைத்து விட்டீர்களே. இனி மறுபடியும் கல் பொறுக்க வேண்டும். குழந்தைக்கு வயிறு பசிக்கும்" என்றாராம்.

"செல்லம்மா இந்தக் குருவிகள் என்ன ஆனந்தமாக இருக்கின்றன: அவற்றைப் பார்த்து ரசிக்காமல் வருத்தப் படுகிறாயே" என்றாராம்.

இவ்வாறு வறுமையிலும் இன்பம் காண்பவர் பாரதியார். இவர் இடிப்பள்ளிக்கூடம் என்ற மாதர் பகுதியில் நகைச்சுவையோடும் அதே வேளையில் பெண் களுக்குரிய பல முன்னேற்றக் கருத்துக்களையும் மிக அழகழகாகச் சொல்லியிருக்கிறார். அவர் என்ன சொல்கிறா ரென்று கீழே வரும் மிகுந்த சுவையான கட்டுரையில் கவனிப்போம்.

1917-ஆம் ஆண்டு ஜூன்மாதம் 12ஆம் தேதி இக் கட்டுரைகள் வெளியாகி இருக்கின்றன. பெண்கள் முன்னேற்றத்தை நக் கருதாத அந்நாளிலேகூட எவ்வளவு துணிச்சலோடும் முன்னேற்றக் கருத்துக் கொண்டும் அவை விளங்குகின்றன.

மாதர்

வேதபுரத்தில் தர்மவீதியில் வாத்தியார் பிரமராய அய்யர் என்றொரு பிராமணர் இருக்கிறார். இவர் சாக்த மதத்தைச் சேர்ந்தவர். "சக்தி பூஜை" பண்ணுவோரில் சிலர் மதுமாம்ஸ போஜனம் செய்கிறார்கள். இந்த வாத்தியார் அப்படியில்லை. இவர் "சுத்த சைவம்." அதாவது ஆட்டுக்குட்டியை மாம்ஸம் தின்னும்படி செய் தாலும் செய்யலாம்; இந்த வாத்தியாரை மாம்ஸம் தின்னும்படி செய்ய முடியாது. இவர் இங்கிலீஷ் ப்ரெஞ்சு என்ற இரண்டு பாஷைகளிலும் நல்ல பாண்டித்திய முடையவர். கொஞ்சம் ஸம்ஸ்கிருதமும் தெரியும். பகவத் கீதை, வால்மீகி ராமாயணம், குமாரஸம்பவம் மூன்று நூலும் படித்திருக்கிறார். வேதாந்த விசாரணையிலே நல்ல

பழக்கமுண்டு. கதை, காலக்ஷேபம், உபந்யாஸு முதலியன நடந்தால், தவருமல் கேட்கப் போவார். பெரு பாலும் கதை கேட்டுவிட்டு அதிருப்தியுடனே திரும் வருவார். வீட்டுக்கு வந்து உபந்யாஸிகளின் கொள்கைகளு ஒரு மாஸம் தொடர்ச்சியாக நண்பர்களுடனே தர்க்கி பார். "ஹிந்துக்கள் முற்காலத்தில் நல்ல மேதாவிகளாக இருந்தனர். இன்னும் அதிசீக்கிரத்தில் மேலான நிலைமைக்கு வரப்போகிருர்கள். ஆனால், இந்தத் தேதியில், பண்டிதர்களாக வெளிப்பட்டு பிரஸங்கங்களும், கதைகளும் காலக்ஷேபங்களும் நடத்தும் ஹிந்துக்களிலே நூற்றுக்குத் தொண்ணூறுபேர் சமையல் வேலைக்குப் போகவேண்டிய வர்கள். அதை விட்டு, உலகத்துக்கு ஞானோபதேசம் பண்ணக் கிளம்பி விட்டார்கள். இது பெரிய தொல்லை உபத்திரவம், தொந்தரவு, கஷ்டம், ஸங்கடம், ஹிம்ஸை தலைநோவு. இந்தத் தேதியில், ஹிந்து ஜாதி முழு மூடமாக இருக்கிறது. நம்மவர்கள் மூளைக்குள்ளே கரையான் பிடித்திருக்கிறது. எனக்கு ஹிந்துக்களின் புத்தியை நினைக்கும்போது வயிற்றெரிச்சல் பொறுக்க முடியவில்லை. படகோனியா தேசத்தில் கூட சராசரி நூற்றுக்கு இத்தனை பேர் மூடர்களாக இருப்பார்களென்று தோன்றவில்லை என்று நாஞவிதமாக நம் தேசத்தாரின் அறிவு நிலைமையை தூஷணை செய்து கொண்டேயிருப்பார்.

மேற்படி பிரமராய வாத்தியாருக்குத் தமிழிலும் கொஞ்சம் ஞானமுண்டு. ஐரோப்பியரின் சாஸ்திரங்களில் பலவற்றைத் தமிழில் எழுதியிருக்கிருர். சில சமயங்களில் கவிதைகூட எழுதுவார். இவருடைய கவிதை மிகவும் உயர்ந்ததுமில்லை, தாழ்ந்ததுமில்லை; நடுத்தரமானது. இவருக்கு சங்கீதத்தில் நல்ல ஞானமுண்டு. ஆனால் பாடத் தெரியாது. தொண்டை சரிப்படாது. தாளத்தில் மஹா

நிபுணர். பெரிய பெரிய மிருதங்கக்காரரெல்லாம் இவரைக் கண்டால் பயப்படுவார்கள்.

இவர் இந்தத் தெருவில் வார்த்தை சொன்னால் மூன்று வது தெருவுக்குக் கேட்கும். பகலில் பள்ளிக்கூடத்து வேலை முடிந்தவுடனே வீட்டுக்கு வந்து, ஸாயங்காலம் ஆறு மணி முதல் எட்டு மணிவரை தன் வீட்டுத் திண்ணையில் சிநேகிதர்களுடன் பேசிக்கொண்டு, அதாவது, கர்ஜனை செய்துகொண்டிருப்பார். பிறகு சாப்பிடப் போவார். சாப்பிட்டுக் கையலம்பிக் கை ஈரம் உலர்வதற்கு முன்பு, மறுபடி திண்ணைக்கு வந்து சப்தம் போடத் தொடங்கி விடுவார். இவருடைய வீட்டுத் திண்ணைக்கு அக்கம் பக்கத்தார், 'இடிப்பள்ளிக்கூடம்' என்று பெயர் வைத்திருக் கிறார்கள். அந்த இடிப்பள்ளிக்கூடத்துக்கு வந்து மாலை தோறும் நாலைந்து பேருக்குக் குறையாமல் இவருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். அந்த நாலைந்து பேருக்கும் இன்னும் காது செவிடாகாமலிருக்கும் விஷயம் அனேகருக்கு ஆச்சர்யத்தை உண்டாக்குகிறது.

மேற்படி வாத்தியாருக்கும் எனக்கும் ஸ்நேகமுண்டு. நானும் அடிக்கடி இடிப்பள்ளிக்கூடத்துக்குப் போய்ப் பேச்சுக் கேட்கும் வழக்கமுண்டு. ஹிந்துக்கள் பரம மூடர்களென்று அவர் சொல்லும் வார்த்தையை மாத்திரம் நான் அங்கீகாரம் செய்துகொள்வது கிடையாது. மற்ற படி, அநேக விஷயங்களில் அவருடைய அபிப்பிராயங்கள் எனக்கு நியாயமாகவே தோன்றும்.

நாலாநாள் ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் மழைத் தூற்றலாக இருந்தபடியால், நான் வெளியே உலாவப் போகாமல், பொழுது போக்கும் பொருட்டாக மேற் படிப் பள்ளிக்கூடத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கே வாத்தியார் கர்ஜனை அட்டஹாஸமாக நடந்து கொண்

டிருந்தது. கேட்டுக் கொண்டிருந்தவர்களின் "ஜாப்தா" பின்வருமாறு :—

(1) வீராசாமி நாயக்கர். (இந்த நாயக்கர் ஆனைக் குட்டியைப் போலிருப்பார்; சர்க்கார் உத்தியோகம்; முப் பத்து மூன்று வயது; அதற்குள் சரியான வழுக்கை; நல்ல வ்யவஹார ஞானமுடையவர். வாய்பேசுவது கிடையாது. கோபம் வரும்போது கொஞ்சம் பொடியெடுத்து மூக்கில் போட்டுக் கொள்வார்).

(2) கொங்கண பட்டர். (இவர் பெருமாள் கோயில் பட்டர்; ஏழரையடி உயரம்; இவரை யார் வேண்டுமானு லும் வையலாம்! வேஷ்டியைப் பிடித்திழுக்கலாம். மேற்படி வீராசாமி நாயக்கர் இவருடைய தலையில் கால்மணி நேரத் திற்கொருதரம் குட்டுவார். இவருக்குக் கோபம் வராது. இவருடைய ஜாதகத்திலே கோபத்துக்குரிய கிரகம் சேர வில்லையென்று கேள்வி.)

(3) நாராயண செட்டியார். (பணக்காரரர். குள்ளம்) வட்டிக்குக் கொடுக்கல் வாங்கல், இடிப்பள்ளிக்கூடம்— இந்த இரண்டு தொழிலையுந் தவிர, மூன்றாவது காரியத்தை இவர் கவனிப்பதே கிடையாது. வாரத்துக்கொரு முறை வெள்ளிக்கிழமையன்று பிள்ளையார் கோவிலுக்குப் போவார். மற்றப்படி வீட்டைவிட்டு வெளியேறமாட்டார். இவரை அந்தப்புரச் செட்டியாரென்றும் சொல்லுவார்கள்.

(4) குருசாமி பாகவதர். (ஸங்கீத வித்வான்; குழந்தை களுக்குப் பாட்டும் வாத்தியமும் சொல்லிக் கொடுப்பார். சாரீரம் கட்டை.)

மேற்படி சபையில் நானும் போய்ச் சேர்ந்தேன் பிரமராய வாத்தியாருக்கு என்னைக் கண்டவுடன் கொஞ்சம் சந்தோஷம் ஏற்பட்டது.

"வாருங்கள், வாருங்கள், உங்களுக்கு ரஸப்படக்கூடிய விஷயந்தான் பேசிக் கொண்டிருக்கிறோம்" என்றார்.

"அதாவது என்ன விஷயம்?" என்று கேட்டேன்.

"ஸ்திரீயுடைய பேச்சு" என்றார்.

"ஸ்திரீகளைப் பற்றின பேச்சா? சரிதான், மேலே உபந்யாஸம் நடக்கட்டும்" என்றேன்.

வாத்தியார் கர்ஜனையைத் தொடங்குகிறார் :

"நான் சொன்ன விஷயத்தைச் சுருக்கமாக 'சக்தி தாஸ்'ருக்கு மறுமுறை சொல்லிக் காட்டிவிட்டு மேலே சொன்னால்தான் அவருக்குத் தொடர்ச்சி தெரியும்" என்று சொல்லி பூர்வ கதையை யெடுத்தார்.

அந்த நிமிஷத்தில் வீராசாமி நாயக்கர் ஒரு தரம் பொடி போட்டுக்கொண்டு கொங்கண பட்டர் தலையில் ஒரு குட்டுக் குட்டினார்.

"சில்லரை விளையாட்டு வேண்டாம். வாத்தியார் பிரசங்கம் நடக்கட்டும்" என்றேன்.

வாத்தியார் கர்ஜனை செய்யலானார்.

"இந்தியாவின் ஆண் பிள்ளைகளுக்குகூட வாக்குச் சீட்டுக் கிடையாது. அதாவது ஜனங்களுடைய இஷ்டப்படி ஆள் நியமித்து ஜனசபையாலே நடத்தும் அரசாட்சியுரிமை ஹிந்துகளுக்குக் கிடையாது. ஹிந்துக்களுக்குப் புத்தி சொற்பம். நம்முடைய தேசத்தில் ஆண் பிள்ளைகளுக்குக் கிடையாத மேற்படி வாக்குச் சீட்டுச் சுதந்திரம் வேறு சில தேசங்களிலே பெண்களுக்கு உண்டு.

அதாவது, அரசாட்சி இன்னபடிதான் நடக்கவேண்டு மென்று நியமிக்கும் பாத்தியதை அங்கே ஸ்திரீகளுக்கும் உண்டு.

"ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, டென்மார்க், நார்வே, யுனைடெட் ஸ்டேட்ஸிலே பாதி, கானடா—இத்தனை தேசங் களில், பெண்களுக்கு வாக்குச் சீட்டு கெட்டியாகவுண்டு இங்கிலாந்திலேகூட அந்த அநுஷ்டானத்தை ஏற்படுத்த வேண்டுமென்று பலர் மன்றாடுகிறார்கள். போன மந்திரி ஆஸ்க்வித்கூட அந்தக் கட்சியை நெடுங்காலமாக எதிர்த்து வந்து, ஸமீபத்தில் அதற்கனுகூலமாகப் பேசுகிறா ரென்று கேள்வி. இதை விடுங்கள்.

"துருக்கி தேசம் தெரியுமா? அங்கே நேற்று வரை ஸ்திரீகளை மூடிவைத்திருப்பது வழக்கம். கஸ்தூரி மாத்திரை களை டப்பியில் போட்டு வைத்திருக்கிறார்களோ இல்லையோ? அந்த மாதிரி; திறந்தால் வாசனை போய்விடும் என்று நம்முடைய தேசத்திலேயேகூட அநேக ஜாதிக்காரர் அந்த மாதிரிதானே செய்கிறார்கள். ஹிந்து ஸ்திரீ ஏறக் குறைய அடிமை நிலைமையிலிருக்கிறாள். நம்முடைய வீடு களில் அறைக்குள் அடைத்து வைப்பது கிடையாது. அறைக்குள்ளே தான் இருந்தாலென்ன, குடிகெட்டுப் போச்சுது? அடிமையைத் தண்ணீர் கொண்டுவர தெரு விலே விட்டால்தானென்ன? அதுவும் கூடாதென்று கதவைப்பூட்டிக் கைதியாக வைத்திருந்தாலென்ன? எந்த நிலைமையிலிருந்தாலும் அடிமை அடிமைதானே ஸ்வாமி? மனுஷ்ய ஜீவனுக்கு இரண்டுவித நிலைமைதான் உண்டு. எதுவும் தன்னிஷ்டப்படி செய்து, அதனால் ஏற்படக்கூடிய இன்ப நஷ்டங்களுக்குத் தான் பொறுப்பாளியாக இருப்பது ஒரு நிலைமை; அதுதான் சுதந்திரம். அப்படி இல்லாமல், பிறர் இஷ்டப்படி, தான் இஷ்டமிருந்தாலும் இல்லா

விட்டாலும் மீறி நடக்கக்கூடாதபடி கட்டுப்பட்டிருத்தல்; அடிமை நிலை. அந்த ஸ்திதியில் நம்முடைய ஸ்திரீகளை வைத்திருக்கிறோம். சும்மா பொய்க்கதை சொல்வதில் பிரயோஜனமென்ன, ஸ்வாமி? நம்முடைய ஸ்திரீகள் அடிமைகள், அதிலே சந்தேகமில்லை. ஹிந்துக்களுக் குள்ளே புருஷர்களுக்கே அரசாட்சியில் வாக்குச் சீட்டுக் கிடையாது. அவர்களுக்குள்ளே ஸ்திரீகள் அடிமைகள். ஹிந்து ஸ்திரீகளைக் காட்டிலும் இப்போது துருக்கி ஸ்திரீகள் நல்ல நிலைமையில் வந்திருக்கிறார்கள். மிஸ். எல்லிஸன் என்றொரு இங்கிலீஷ்காரி ஒரு புஸ்தகம் போட்டு, நேற்றுத்தான் ஒரு பத்திரிகையில் அந்தப் புஸ்தகத்தைப் பற்றி அபிப்பிராயம் போட்டிருந்தது. அந்த அபிப்பிராயம் எழுதினவர் ஒரு சிங்களத்துப் பௌத்தர். அவர் பெயர் ஜினராஜதாஸர். அவர் ஒரு இங்கிலீஷ்காரியைக் கலியாணம் பண்ணிக்கொண்டிருக்கிறார். துருக்கி ஸ்திரீகள் படிப்பு, ராஜியப் பொறுப்பிலே ஊக்கம் முதலிய சகல அம்சங்களிலேயும் போதுமானபடி விருத்தியாய்க் கொண்டு வருவதாக அந்த இங்கிலீஷ் புத்தகத்தில் போட்டிருப்பதாக அந்த பௌத்தர் சொல்லுகிறார். ஐயோ, ராமா, ராகவா, கேசவா, விசுவாமித்திரா!— நமக்கு சந்தியாவந்தனம் கொஞ்சம் மறதி;" ஆண்களுக்கு அநியாயமும் கொடுமையும் செய்து பயனில்லை.

இங்ஙனம், அவர் பிரசங்கத்தில் கொஞ்சம் மூச்சு வாங்கும் பொருட்டாக, ஒரு விகட வார்த்தை சொன்னவுடனே, அவருடைய முக்கிய சிஷ்யராகிய கொங்கண பட்டர் கொல்லென்று சிரித்தார். வீராசாமி நாயக்கர் மேற்படி பட்டாசார்யாருடைய தலையில் ஒரு குட்டுக் குட்டி ஒரு தரத்துக்குப் பொடி போட்டுக் கொண்டார்.

வாத்தியார் மறுபடியும் கோஷிக்கலானார் : —

ருதுவான பிறகு கலியாணம்

"ருதுவான பிறகு, பெண்ணுடைய இஷ்டப்படி, கலியாணம் செய்யவேண்டும்; புருஷன் கொடுமையை சகிக்க முடியாமலிருந்தால், ஸ்திரீ சட்டப்படி அவனை த்யாஜ்யம் செய்துவிடச் சட்டமும் இடம் கொடுக்க வேண்டும்; ஊர்க்காரரும் தூஷணை செய்யக்கூடாது. பெண் உழைத்துச் சாப்பிட முடியாது. அந்த விஷயத்தில் ஐரோப்பிய ஸ்திரீ ஸ்வதந்திர முயற்சிக்காரருடைய அபிப்பிராயத்திலிருந்து என் அபிப்பிராயம் பேதப்படுகிறது. பெண்ணை ஸம்பாத்யம் பண்ணிப் பிழைக்கவிடக் கூடாது. அவளுக்கு பிதுரார்ஜியத்தில் பாகமிருக்க வேண்டும். கலியாணம் செய்து கொண்டால் புருஷனுடைய சொத்து அவளுடையதாகவே பாவிக்க வேண்டும்.

பெண்ணுக்கு மரியாதை

பெண்டாட்டி கையில் காசு கொடுக்கக் கூடாதென்று சொல்லுகிற மனுஷ்யர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். பெண் அவளிஷ்டப்படி சஞ்சரிக்கலாம். தனி இடங்களில் ஸ்திரீகளைக் கண்டால் மரியாதை செய்து வணங்க வேண்டும். அப்படி எந்தப் புருஷன் மரியாதை செய்ய வில்லையென்று தோன்றுகிறதோ, அவனை கிருகஸ்தர்கள் நெருங்கக் கூடாது. அவன்கூட ஒருவனும் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ளாமல் இருந்துவிட வேண்டும். அப்படி வீதி வழியோ, கடைத் தெருவோ, ரயில் வழியோ, காசிப் பட்டணமோ ஸ்திரீகள் தனியே போகுலும், புருடர் கண்டு வணங்கும்படி ஏற்பாடு செய்வது நாளது தேதியில் இந்த தேசத்தில் வெகு கஷ்டம். என்ன செய்யலாம்? ஹிந்துக் களிலே நூற்றுக்குத் தொண்ணூறு பேர் மூட ஜனங்கள். அது எப்படி நாசமாய் போனாலும், படித்துக் கௌரவ

மாகக் குடித்தனம் பண்ணும் ஜனக் கூட்டத்துக்குள்ளே 'ஸ்திரீகள் சுயேச்சையாகப் பேசலாம், சுயேச்சையாக ஸஞ்சரிக்கலாம்' என்று வைக்கவேண்டும். அது ஸாத்ய மாகும்படி புருஷரைத் தண்டிக்க வேண்டும். கையாலாகாத பேரை தண்டிப்பதிலே என்ன பிரயோஜனம், ஸ்வாமி? எத்தனை நாள் இந்த தேசத்தில் பழங்குப்பையில் முழுகிக் கிடக்கப் போகிறீர்கள்? நத்தைப் புழுவைப்போல ஆணும் பெண்ணும் கூடப் பிறக்கிறோம். உடன் பிறந்தான் ஆண்டான், உடன் பிறந்தவள் அடிமை, ஸ்வாமீ? சுத்த பாமரஜனங்கள்" என்று சோனுமாரியாகப் பொழிந்தார்.

இந்த சமயத்தில் என்னுடைய குழந்தை வீட்டிலிருந்து ஓடி வந்து என்னை சாப்பிடக் கூப்பிட்டது; நான் எழுந்தேன். "பிரமராய வாத்தியார் சொல்லுகிற விஷயத்தைக் குறித்து உம்முடைய அபிப்ராயமென்ன?" என்று என்னை நோக்கிக் கொங்கணப்பட்டர் கேட்டார்.

நான் சொல்லத் தொடங்கு முன்னே, வீராசாமி நாயக்கர் மேற்படி பட்டாசாரியாருடைய தலையில் ஒரு குட்டுக்குட்டி, "நீர் சும்மா இருமே, ஓய்" என்று சொன்னார். பிறகு நான் :—"பூலோகத்துப் பஞ்சாயத் தெல்லாம் எனக்கு வேண்டியதில்லை ஸ்வாமி, யாருக்கு என்ன காரியம் சித்தியாக வேண்டுமானாலும், 'ஓம் சக்தி, ஓம் சக்தி' என்று சொன்னால், அவர்களுக்கு அந்தக் காரியம் சித்தியாகும். இதுதான் எனக்குத் தெரிந்த விஷயம்" என்றேன்.

பிரமராய வாத்தியார் "அது உண்மை" என்றார். இப்பள்ளிக்கூட முழுவதும் 'வாஸ்தவந்தான்' என்று ஒப்புக்கொண்டது. நான் போஜனத்திற்குப் புறப் பட்டேன்.

பதிவிரதை

ஆனால் "பதிவிரதை" என்ற கட்டுரையில் தான் பிற இல் விழைகின்ற பேதமையைக் குறித்துத் தமது கொ கையை ஆணித்தரமாக முழங்குகின்றார் பாரதியார்.

"கற்புநிலை என்றால் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"

என்று கவிதையில் சுருக்கமாகச் சொன்னவர். அதை மி அழுத்தமாக, இடியோசை எனக் கேட்கும் வகையில் இங்கே கர்ஜிக்கிறார். கட்டுரையைப் பார்ப்போம்.

'ஸ்த்ரீகள் பதிவிரதைகளாக இருக்கவேண்டும்' என்று எல்லாரும் விரும்புகிறார்கள். அதிலே கஷ்டம் என்ன வென்றால், ஆண்பிள்ளைகள் யோக்கியர்கள் இல்லை. ஆண் மக்களில் ஒவ்வொருவனும் தன் மனைவி, மக்கள் பதிவிரதை களாக இருக்கவேண்டுமென்பதில் எத்தனை ஆவலோடு இருக்கிறானோ, அத்தனை ஆவல் இதர ஸ்த்ரீகளின் பதி விரத்யத்திலே காட்டுவதில்லை. ஒவ்வொருவனும் ஏறக் குறைய தன் இனத்து ஸ்த்ரீகளை பதிவிரதை என்று நம்புகிறான்.

ஆணும் பெண்ணும் ஒன்றுக்கொன்று உண்மையாக இருந்தால் நன்மையுண்டாகும்; பதிவிரதைக்கு அதிக வீரமும் சக்தியும் உண்டு. சாவித்ரி தனது கணவனை எமன் கையிலிருந்து மீட்ட கதையில் உண்மைப் பொருள் பொதிந் திருக்கிறது. ஆனால், பதிவிரதை இல்லை என்பதற்காக, ஒரு ஸ்திரீயை வதைத்து ஹிம்சை பண்ணி அடித்து விட்டுத் தள்ளி ஊரார் இழிவாக நடத்தி அவளுடன் யாவரும் பேசாமல் கொள்ளாமல் தாழ்வு படுத்து அவளைத் தெருவிலே சாகும்படி விடுதல் அநியாயத்திலும் அநியாயம்.

அட பரம மூடர்களா! ஆண்பிள்ளைகள் தவறினால் ஸ்த்ரீகள் எப்படிப் பதிவிரதைகளாக இருக்க முடியும்

நற்பனைக் கணக்குப் போட்டுப் பார்ப்போம். ஒரு பட்டணத்தில் லக்ஷம் ஜனங்கள், ஐம்பதினுயிரம் பேர் ஆண்கள், ஐம்பதினுயிரம் பேர் பெண்கள். அதில் நாற்பத்தையாயிரம் ஆண்கள் பர ஸ்த்ரீகளை இச்சிப்பதாக வைத்துக் கொள்வோம். அதிலிருந்து குறைந்த பக்ஷம் நாற்பத்தையாயிரம் ஸ்திரீகள் பர புருஷரின் இச்சைக் வேண்டும். அந்தக் கூட்டத்தில் இருபதினுயிரம் புருஷர்கள் தம் இச்சையை ஓரளவு நிறைவேற்றுவதாக வைத்துக் கொள்வோம். எனவே, குறைந்த பக்ஷம் இருபதினுயிரம் ஸ்த்ரீகள் வ்யபசாரிகளாக இருத்தல் அவசியமாகிறது. அந்த இருபதினுயிரம் வ்யபசாரிகளில் நூறு பேர்கள்தான் தள்ளப்படுகிருர்கள். மற்றவர்கள் புருஷனுடன் வாழ்கிருர்கள். ஆனல் அவளவளுடைய புருஷருக்கு மாத்திரம் அவளவள் வ்யபசாரி என்பது நிச்சயமாகத் தெரியாது. தெரிந்தும் பாதகமில்லை யென்று சும்மா இருப்பாருமுளர்.

மானங் கெட்ட தோல்வி

ஆகவே பெரும்பாலோர் வ்யபசாரிகளுடனேதான் வாழ்கிருர்கள். இதினிடையே, பாதிவ்ரத்யத்தைக் காப்பாற்றும் பொருட்டாக ஸ்த்ரீகளைப் புருஷர்கள் அடிப்பதும், திட்டுவதும், கொடுமை செய்வதும் எல்லையின்றி நடைபெற்று வருகின்றன. சீச்சீ! மானங்கெட்ட தோல்வி, ஆண்களுக்கு! அநியாயமும் கொடுமையும் செய்து பயனில்லை!

இதென்னடா இது! "என்மேல் ஏன் விருப்பம் செலுத்தவில்லை?" என்று ஸ்திரீயை அடிப்பதற்கு அர்த்தமென்ன? இதைப்போல் மூடத்தனம் மூன்று லோகத்திலும் வேறே கிடையாது.

ஒரு வஸ்து நம்முடைய கண்ணுக்கு இன்பமாக இருந்தால், அதனிடத்தில் நமக்கு விருப்பம் இயற்கையிலே

உண்டாகிறது. கிளியைப் பார்த்தால் மனிதர் அழகென்று நினைக்கிறார்கள். தவளை அழகில்லை என்று மனிதர் நினைக்கிறார்கள். இதற்காகத் தவளைகள் மனிதரை அடித்தும் திட்டியும், சிறையிலே போட்டும் துன்பப்படுத்த அவற்றுக்கு வலிமை இருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்படி அவை செய்தால் நாம் நியாயமென்று சொல்லுவோமா

சில தேசங்களில் அன்னியர் வந்து கொடுங்கோல் அரசு செலுத்துகிறார்கள். அவர்களிடம் அந்த ஜனங்கள் ராஜபக்தி செலுத்த வேண்டுமென்றும், அங்ஙனம் பக்தி செய்யாவிட்டால், சிறைச்சாலையிலே போடுவோம் என்றும் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட ராஜ்யத்தை உலகத்து நீதிமான்கள் அவமதிக்கிறார்கள்.

அந்த அரசு போலேதான், ஸ்திரீகள் மீது புருஷர் செய்யும் கட்டாய ஆட்சியும் என்பது யாவருக்கும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாக விளங்கும். கட்டாயப்படுத்தி, என்னிடம் அன்பு செய் என்று சொல்வது அவமானமல்லவா?

ஸ்திரீகள் புருஷர்களிடம் அன்புடன் இருக்க வேண்டினால், புருஷர் ஸ்திரீகளிடம் அசையாத பக்தி செலுத்த வேண்டும். பக்தியே பக்தியை விளைவிக்கும். நம்மைப் போன்றதொரு ஆத்மா நமக்கு அச்சத்தினாலே அடிமைப் பட்டிருக்கும் என்று நினைப்பவன் அரசனாயினும், குருவாயினும், புருஷனாயினும் மூடனைத் தவிர வேறில்லை. அவனுடைய நோக்கம் நிறைவேறாது. அச்சத்தினால் மனுஷ்ய ஆத்மா வெளிக்கு அடிமைபோல் நடித்தாலும் உள்ளே துரோகத்தை வைத்துக்கொண்டுதான் இருக்கு

அச்சத்தினால் அன்பை விளைவிக்க முடியாது.

பெண் விடுதலை (1)

இங்கிலாந்தில் பெண்களுக்கு வாக்குச் சீட்டுக் கொடுத்தாய்விட்டதென்று சில தினங்களின் முன்பு ராய்டர்' தந்தி வந்தது. 'அதைப்பற்றிய பத்திராதிபர் குறிப்பொன்று "ஸ்திரீகளின் ஜயம்" என்ற மகுடத்துடன் சுதேசமித்திரன் பத்திரிகையில் எழுதப்பட்டிருந்தது. நேற்று மாலை நானும் என்னுடைய சினேகிதர் சிரோமணி ராமராயரும் வேறு சிலருமாக இருக்கையில் மேற்படி தேதி (அதாவது "ஸ்திரீகளின் ஜயம்" எழுதியிருந்த) சுதேச மித்திரன் பத்திரிகையைக் கையில் எடுத்துக்கொண்டு மோட்டு வீதி கோபாலய்யர் பத்தினி வேதவல்லி அம்மை வந்தார்.

வேதவல்லி அம்மைக்கு நாற்பது வயது. தமிழிலும் இங்கிலீஷிலும் உயர்ந்த படிப்பு. ஸமஸ்கிருதம் கொஞ்சம் தெரியும். இவளுடைய புருஷன் கோபாலய்யர் பெரிய சர்க்கார் உத்தியோகத்திலிருந்து விலகி பணச்செருக்கு மிகுந்தவராய் தமது பத்தினியாகிய வேதவல்லியுடனும் நான்கு குழந்தைகளுடனும் சௌக்கியமாக வேதபுரத்தில் வாழ்ந்துவருகிறார். வேதவல்லிக்கு அவர் விடுதலை கொடுத்து விட்டார். எங்கும் போகலாம், யாருடனும் பேசலாம். வீட்டுச் சமையல் முதலிய காரியமெல்லாம் ஒரு கிழவி பார்த்துக்கொள்கிறாள். வேதவல்லி அம்மை புஸ்தகம், பத்திரிகை, சாஸ்திர ஆராய்ச்சி, பொதுக் கூட்டம் முதலியவற்றிலே காலங்கழித்து வருகிறார்.

வேதவல்லி வரும்போது நான் ராமராயர் முதலியவர்களுடன் வேதவியாசர் செய்த பிரம்ம சூத்திரத்திற்கு சங்கராச்சாரியார் எழுதின அத்வைத பாஷ்யத்தை வாசித்து அதன் சம்பந்தமாகத் தர்க்கித்துக் கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் வேதவல்லியார் வந்தனர்,

(ஒருமை பன்மை இரண்டும் பெண்களுக்கு உயரிவைரே காட்டும்) வேதவல்லிக்கு நாற்காலி கொடுத்தோம். உட்கார்ந்தாள். தாகத்துக்கு ஜலம் கொண்டுவரச் சொன்னாள். பக்கத்திலிருந்த குழந்தையை மனை பள்ளியிலிருந்து ஜலம் கொண்டு கொடுக்கும்படி ஏவினேன். அதனிடையே வேதவல்லி அம்மை, "என்ன சாஸ்திரம் ஆராய்ச்சி செய்கிறீர்கள்?" என்று கேட்டாள். சங்கர பாஷ்யம் என்று சொன்னேன். வேதவல்லி சிரித்தாள். "சங்கர பாஷ்யமா! வெகு ஷோக். இந்துக் களுக்கு இராஜ்யாதிகாரம் வேண்டுமென்று சொல்லித் தான் மன்றாடப்போய், 'ஆனி பெஸண்ட்' வலைக்குள் மாட்டிக்கொண்டாள். அவள் இங்கிலீஷ்கார ஸ்திரீ. நம்முடைய தேசத்து வீராதிவீரராகிய ஆண்பிள்ளைச் சிங்கங்கள் சங்கர பாஷ்யம் வாசித்துப் பொருள்விவரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஷோக்! ஷோக்! இரட்டை ஷோக்" என்றாள்.

ராமராயருக்குப் பளிச்சென்று கோபம் வந்துவிட்டது. "சரிதானம்மா, நிறுத்துங்கள். தங்களுக்குத் தெரிந்த ராஜயுக்திகள் பிறருக்குத் தெரியாதென்று நினைக்க வேண்டாம்" என்றார்.

"இங்கிலாந்தில் ஸ்திரீகளுக்குச் சீட்டுக் கொடுத்தாய் விட்டது" என்று சொல்லி, வேதவல்லி தன் கையில் இருந்த சுதேசமித்திரன் பத்திரிகையை ஏறக்குறைய ராமராயர் முகத்தில் வந்து விழும்படி வீசிப் போட்டாள். ராமராயர் கையில் தடுத்துக் கீழே விழுந்த பத்திரிகையை எடுத்து மெதுவாக மேஜையின் பேரிலே வைத்துவிட்டு தலைக்கு மேலே உத்தரத்தைப் பார்த்துக்கொண்டு ஏதோ யோசனையில் இறங்கிவிட்டார். குழந்தை இச்சமயத்தில் ஜலம் கொண்டு கொடுத்தது. வேதவல்லியம்மை இதைத்

வாங்கி சற்றே விடாய் தீர்த்துக்கொண்டாள். "என்ன? ராமராயரே, மோட்டைப் பார்க்கிறீரே? மோட்டில் என்ன எழுதியிருக்கிறது? 'ப்ரம்மம் ஸத்யம் லோகம் மித்யை. ஆதலால், வித்வான்கள் எப்பொழுதும் பொய் சொல்லிக் கொண்டே இருப்பதே மேன்மை' என்றெழுதியிருக்கிறதா?" என்று கேட்டாள்.

ராமராயருக்கு முகம் சிவந்து போய்விட்டது. கொஞ்சம் மீசையைத் திருகி விட்டுக்கொண்டார். தாடியை இரண்டு தரம் இழுத்தார். கடகடவென்று சிரிக்கத் தொடங்கினார்.

ஸ்ரீமதி ஆனி பெஸண்ட் ராஜ்ய விஷயத்திலே தலையிட்டு சுதேசியமே தாரகமென்றும், வந்தேமாதரம் ஒன்றே ஜீவமந்திரம் என்றும் பேசத்தலைப்பட்டது. மேற்படி ராமராயருக்குச் சம்மதமில்லை. வேதாந்திகள் எப்போதும் பரப்ரஹ்மத்தையே கவனிக்க வேண்டும். லௌகிக விஷயங்களைத் துளிகூடக் கவனிக்கக் கூடாதென்பது அவருடைய மதம்.

வேதவல்லி அம்மை ராமராயரை நோக்கிச் சொல்லுகிறார்:— "எடுத்ததற்கெல்லாம் ஆனி பெஸண்ட் சொன்னதே பிரமாணம் என்று தொண்டை வறண்டு போகக் கத்திக்கொண்டிருந்தீர். இப்போது அந்த அம்மாள் சுயராஜ்யம் நல்லதென்று சொல்லும்போது அவளைப் புறக்கணிக்கிறீர்! ஐயோ! கஷ்டம்! புருஷஜன்மம்! ஸ்திரீகளுக்குள்ள திறமையிலே நாலிலொரு பங்கு புருஷர்களுக்கில்லை. எல்லா தேசங்களிலும் புருஷரைக் காட்டிலும் ஸ்திரிகளுக்கு ஆயுள் அதிகம். அதனால் சரீர உறுதி அதிகம் என்று ருஜு வாக்கியாயிற்று; புத்தி அதிகமென்பதுந்தான். ராமாயணத்தில் சீதை பொய் மானை மெய்மான் என்று நினைத்து ஏமாற்றம் அடைந்தாள் என்றும், எங்கள் வீட்டில் ஒரு

தாத்தா நேற்று வந்து பேசிக்கொண்டிருந்தார். அந்த சீதை சொல்லுக்குக் கட்டுப்பட்டு அதை வேட்டையாடப் போன ராமனுடைய புத்தியைக் காட்டிலும் அவளுக்குப் புத்தி அதிகமா, குறைவா, என்று நான் கேட்டேன். தாத்தா தலையைக் குனிந்துகொண்டு வாயில் கொழுக் கட்டையைப் போட்டுக்கொண்டு சும்மாயிருந்தார். சகல அம்சங்களிலும் ஸ்திரீயே மேல். அதில் சந்தேகமில்லை" என்று வேதவல்லி சொன்னாள்.

"ஸ்திரீகளுக்குப் பேசும் திறமை அதிகம்" என்று ராமராயர் சொன்னார்.

வேதவல்லியம்மை யொன்னார் :— "ஆனி பெஸண் டுக்கு ஸமானமாக நம்முடைய புருஷரில் ஒருவருமில்லை, அந்த அம்மாள் கவர்னருடனே சம்பாஷணை செய்ததைப் பார்த்தீரா? அந்த மாதிரி கவர்னரிடத்தில் நீர் பேசுவீரா?"

இதைக் கேட்டவுடன் ராமராயர், "நான் வீட்டுக்குப் போய்விட்டு.வருகிறேன்" என்று சொல்லி எழுந்து நின்றார். நான் இரண்டு கட்சியையும் சமாதானம் பண்ணிக் கடைசி யாக வேதவல்லியம்மை பொதுப்படையாக ஆண் பிள்ளை களை எவ்வளவு கண்டித்துப் பேசியபோதிலும் ராமரா ரைச் சுட்டிக் காட்டி ஒரு வார்த்தையும் சொல்லக்கூடாது என்று தீர்மானம் செய்துகொண்டோம். அப்பால் வேதவல்லி அம்மையின் உபந்யாஸம் நடக்கிறது :—

"ஹிந்து ஸ்திரீகள் ராஜ்யவிவகாரங்களிற் சேர்ந்து பாடுபடாதவரையில், இங்குள்ள புருஷர்களுக்கு விடுதலை ஏற்பட நியாயமில்லை. இந்தத் தேசத்தில் ஆதிகாலத்து புருஷர் எப்படி யெல்லாமோ இருந்ததாகக் கதைகளில் வாசித்திருக்கிறோம். ஆனால் இப்போதுள்ள புருஷரைப் பற்றிப் பேசவே வழியில்லை. ஹிந்து ஸ்திரீகள் ராஜ்

விவகாரங்களிலே தலையிட்டால் ஆனி பெஸண்டுக்கு ஸமானமாக வேலை செய்வார்கள். இங்குள்ள ஆண் பிள்ளைகள் வேதாந்த விசாரணைக்கும் குமாஸ்தா வேலைக்கும் தான் உபயோகப்படுவார்கள். ராஜ்ய க்ஷேமத்தைக் கருதி தைர்யத்துடன் கார்யம் நிறைவேறும்வரை பாடுபடும் திறமை இத்தேசத்துப் புருஷருக்கு மட்டு. ஸரோஜினி நாயுடு எவ்வளவு தைரியமாகப் பேசுகிருர்கள், பார்த்தீர் களா? உலகத்தில் எங்குமே புருஷரைக் காட்டிலும் ஸ்திரீகள் அதிக புத்திசாலிகள் என்றும், தைரியசாலிகள் என்றும் தோன்றுகிறது. மற்ற தேசங்களில் எப்படியாறு லும், இங்கே பெண்ணுக்குள்ள தைர்யமும் புத்தியும் ஆணுக்குக் கிடையாது. இங்கிலாந்தில் பெண்கள் ஆண் பிள்ளைகளை வசப்படுத்தி எவ்வளவு சுலபமாகச் சீட்டு வாங்கி விட்டார்கள்.

ஹோ! ஹோ! அடுத்த தடவை இங்கிருந்து காங்கிரஸ் காரர் இங்கிலாந்திற்கு ஸ்வராஜ்யம் கேட்கப் போகும் போது, அங்குள்ள புருஷரைக் கெஞ்சினுல் போதாது. ஸ்திரீகளைக் கெஞ்சவேண்டும். அதற்கு இங்கிருந்து புருஷர் மாத்திரம் போனுல் நடக்காது. இந்த தேசத்துப் புருஷர் களைக் கண்டால் அங்குள்ள ஸ்திரீகள் மதிக்கமாட்டார்கள். ஆதலால், காங்கிரஸ் ஸபையார் நமது ஸ்திரீகளை அனுப்பு வதே நியாயம். எனக்கு இங்கிலீஷ் தெரியும். என்னை அனுப்பினுல் நான் போய் அங்குள்ள பெண் சீட்டாளி களிடம் மன்ருடி இந்தியாவுக்கும் சீட்டுரிமை வாங்கிக் கொடுப்பேன். பெண் பெருமை பெண்ணுக்குத் தெரியும். உங்களிடம் சொல்லிப் பிரயோஜனம் இல்லை" என்று சொன்னுள்.

ராமராயர்:—"வேறு விஷயம் பேசுவோம்" என்ருர். தான் பாதி பேசும்போது, ராமராயர் தடுத்துப் பேசியதி

லிருந்து, அந்த வேதவல்லி அம்மைக்குக் கோபம் உண்டாகி "நான் இவரைக் குறிப்பிட்டு ஒன்றும் சொல்லுவதில்லை யென்றும், இவர் சும்மாயிருக்கவேண்டும் என்றும், ஆரம் பத்தில் செய்யப்பட்ட தீர்மானத்தை இவர் அதற்குள்ளே மறந்து விட்டார்" என்று சொல்லி வெறுப்புடன் எழுந்து போய்விட்டார்.

நான் எத்தனையோ சமாதானம் சொல்லியும் கேட்க வில்லை. 'ராமராயர் இருக்கும் சபையிலே தான் இருக்க லாகாது' என்று சொன்னாள். அந்த அம்மை சென்றபிறகு ராமராயர் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தார். "என்ன சொல்லுகிறீர்?" என்று கேட்டேன்.

ஸ்திரீகளுக்கு விடுதலை கொடுப்பது மிகவும் அவசியத் திலும் 'அவசியம் என்று ராமராயர் சொன்னார். பிறகு மறுபடி சங்கர பாஷ்யத்தில் இறங்கி விட்டோம்.

பெண் விடுதலை (2)

அடிமைகள் யாராயினும், அவர்களுக்கு விடுதலை கொடுத்தால், அதினின்றும் யுகப்பிரளயம் நிச்சயமாக நேரிட்டு, அண்டச் சுவர்கள் இடிந்துபோய், ஜகத்தே அழிந்துவிடும் என்று சொல்லுதல் அவர்களை அடிமைப் படுத்தி ஆள்வோருடைய ஸம்பிரதாயம்.

இருபது முப்பது வருஷங்களுக்கு முன்பு, பெண் கல்வி ஏற்பட்டால் மாதர் ஒழுக்கத்தில் தவறி விடுவார்களென்று தமிழ் நாட்டில் பலர் கூறினர். இப்போதோ, பெண் கல்வி தமிழ் நாட்டில் சாதாரணமாகப் பரவியிருக்கிறது. அண்டச் சுவர்கள் இன்னும் இடிந்து போகவில்லை. இதுவரை கூடிய மட்டும் பத்திரமாகவே இருந்து வருகின்றன. ஆனால், இப் பொழுது பெண்களுக்கு விடுதலை கொடுத்தால், ஏழு லோக மும் கட்டாயம் இடிந்து பூமியின்மேல் விழும் என்றும்,

வால் நக்ஷத்திரம் வகையராக்களெல்லாம் நடுவிலே அகப்பட்டுத் துவையலாய் விடும் என்றும் பலர் நடுங்குகிறார்கள். மதராஸ் மெயில்' போன்ற ஆங்கிலேயப் பத்திராதிபதியிடம் போய் இந்தியாவிற்கு சுயராஜ்யம் கொடுத்தால் என்ன நடக்கும் என்று கேளுங்கள். "ஓஹோ! ஹோ! ஹோ! இந்தியாவிற்கு சுயராஜ்யம் கொடுத்தால் பஞ்சாபிகள் ராஜபுத்திரரைக் கொல்வார்கள். பிறகு, ராஜபுத்திரர் மஹாராஷ்டிரரின் கூட்டத்தையெல்லாம் விழுங்கிப் போடுவார்கள். அப்பால், மஹாராஷ்டிரர் தெலுங்கரையும் கன்னடரையும் மலையாளிகளையும் தின்று விடுவார்கள். பிறகு மலையாளிகள் தமிழ்ப் பார்ப்பாரையும், தமிழ்ப் பார்ப்பார் திராவிடரையும் சூர்ணமாக்கி விடுவார்கள். சூர்ணித்த திராவிடர் வங்காளி எலும்புகளை மாலையாகப் புனைவர்" என்று சொல்லிப் பெருமூச்சு விடுவார். அதே கேள்வியை நீதிபதி மணி அய்யர், கேசவப் பிள்ளை, சிதம்பரம்பிள்ளை முதலியவர்களைப் போய்க் கேளுங்கள். "அப்படி பெரிய அபாயம் ஒன்றும் உண்டாகாது. ஸ்வராஜ்யம் கிடைத்தால் கஷ்டம் குறையும். பஞ்சம் வந்தால் அதைப் பொறுக்கத் திறன் உண்டாகும். அகால மரணம் நீங்கும் அவ்வளவுதான்" என்று சொல்லுவார்கள்.

அதுபோலே, பெண்களுக்கு விடுதலை கொடுத்ததனால் ஜன சமூகம் குழம்பிப் போய்விடும் என்று சொல்லுவோர் பிறர் தமது கண்முன் ஸ்வேச்சையுடன் வாழ்வதை தாம் பார்க்கக் கூடாதென்ற அசூயையால் சொல்லுகிறார்களே யொழிய வேறொன்றுமில்லை. விடுதலை என்றால் என்ன அர்த்தம்? விடுதலை கொடுத்தால் பிற ஸ்திரீகள் என்ன நிலையில் இருப்பார்கள்? பெண்களுக்கு விடுதலை கொடுக்க வேண்டும் என்றால் என்ன செய்யவேண்டும்? வீடுகளை விட்டு வெளியே துரத்திவிடலாமா? செய்யவேண்டிய

விஷயமென்ன என்று பலர் சங்கிக்கலாம். இங்ஙனம் சங்கையுண்டாகும்போது விடுதலையாவது யாது? என்ற மூலத்தை விசாரிக்கும்படி நேரிடுகிறது. இதற்கு மறுமொழி சொல்லுதல் வெகு சுலபம். பிறருக்குக் காயம் படாமலும், பிறரை அடிக்காமலும், வையாமலும், கொல்லாமலும், அவர்களுடைய உழைப்பின் பயனைத் திருடாமலும், மற்றபடி ஏறக்குறைய 'நான் ஏது பிரிய மானாலும் செய்யலாம்' என்ற நிலையில் இருந்தால் மாத்திரமே என்னை விடுதலையுள்ள மனிதனாகக் கணக்கிடத் தகும். 'பிறருக்குத் தீங்கில்லாமல் அவனவன் தன் இஷ்ட மானதெல்லாம் செய்யலாம் என்பதே விடுதலை' என்று ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் சொல்லுகிறார்.

இந்த விதிப்படி உலகத்தில் பெரும்பான்மையான ஆண் மக்களுக்கே விடுதலை உண்டாகவில்லை. ஆனால் இவ்விடுதலை பெறும்பொருட்டாக நாடுதோறும் ஆண் மக்கள் பாடுபட்டு வருகிறார்கள். ஆண் மக்கள் ஒருவருக் கொருவர் அடிமைப்பட்டிருக்கும் கொடுமை சகிக்க முடியாது. ஆனால், இதில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைக் காட்டிலும் பல்லாயிர மடங்கு அதிகக் கஷ்ட நஷ்டங்கள் பெண்கூட்டத்தை ஆண்கூட்டம் அடிமைப்படுத்தி வைத் திருப்பதால் விளைகின்றன.

அடிமைத் தேசங்களிலேகூட ஆண்மக்களிற் பெரும் பாலோர்—அதாவது ரஹஸ்யப் போலீஸ்உபத்திரவத்திற்கு இடம் வைத்துக்கொண்டவர் தவிர மற்றவர்கள்—தம் இஷ்டப்படி எந்த ஊருக்குப் போகவேண்டுமானாலும், போகலாம், எங்கும் சஞ்சரிக்கலாம். தனியாக சஞ்சாரம் பண்ணக் கூடாதென்று நியதி கிடையாது. ஆனால் பெண் தன்னிஷ்டப்படி தனியே சஞ்சரிக்க வழியில்லாத தேசங்

களும் உள. அவற்றில் நமது தேசத்தில் பெரும் பகுதி உட்பட்டிருப்பதைப் பற்றி மிகவும் விசனப்படுகிறேன்:

"ஒஹோ பெண்கள் தனியாக சஞ்சாரம் செய்ய இடங் கொடுத்தால் அண்டங்கள் கட்டாயம் இடிந்து போகும். ஒரு விதமான நியதியும் இருக்காது. மனுஷ்யர் மிருகப் பிராயமாய் விடுவார்கள்" என்று சில தமிழ்நாட்டு வைதிகர் நினைக்கலாம். அப்படி நினைப்பது சரியில்லை. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பெண்கள் இஷ்டப் படி எங்கு வேண்டுமானாலும் போகலாமென்று வைத்திருக் கிறார்கள். அதனால் பூகம்பமொன்றும் நேர்ந்துவிடவில்லை. ஸ்ரீமதி அனிபெஸண்டை நம்மவர்களிலே பலர் மிகவும் மரியாதையுடன் புகழ்ந்து பேசுகிறார்கள். 'அவரைப் போலே நமது ஸ்திரீகள் இருக்கலாமே' என்றால், நம்மவர் அடாதென்றுதான் சொல்லுவார்கள். காரணமென்ன? ஐரோப்பிய ஸ்திரீகளைக் காட்டிலும் நமது ஸ்திரீகள் இயற்கையிலேயே நம்பத்தகாதவர்கள் என்று தாத்பர்யமா?

'மேலும் ஐரோப்பியரை திருஷ்டாந்தம் காட்டினால் நமக்கு ஸரிப்படாது. நாம் ஆரியர்கள், திராவிடர்கள். அவர்களோ, கேவலம் ஐரோப்பியர்' என்று சொல்லிச் சிலர் தலையசைக்கலாம்.

சரி, இந்தியாவிலே மஹாராஷ்டிரத்தில் ஸ்திரீகள் யதேச்சையாகச் சஞ்சாரம் பண்ணலாம். தமிழ் நாட்டில் கூடாது. ஏன்?

பெண்களுக்கு விடுதலை கொடுப்பதில் இன்னும் முக்கியமான—ஆரம்பப் படிகள் எவை யென்றால்:—

(1) பெண்களை ருதுவாகு முன்பு விவாகம் செய்து கொடுக்கக் கூடாது.

(2) அவர்களுக்கு இஷ்டமில்லாத புருஷனை விவாகம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தல் கூடாது.

(3) விவாகம் செய்துகொண்ட பிறகு அவள் புருஷனை விட்டு நீங்க இடங்கொடுக்க வேண்டும். அதன் பொருட்டு அவளை அவமானப்படுத்தக் கூடாது.

(4) பிதுரார்ஜிதத்தில் பெண்குழந்தைகளுக்கு ஸம பாகம் கொடுக்க வேண்டும்.

(5) புருஷன் இறந்தபின்பு ஸ்த்ரீ மறுபடி விவாகம் செய்து கொள்வதைத் தடுக்கக் கூடாது.

(6) விவாகமே இல்லாமல் தனியாக இருந்து வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றால் கௌரவமாக ஜீவிக்க விரும்பும் ஸ்திரீகளை, யதேச்சையான தொழில் செய்து ஜீவிக்க இடங்கொடுக்கவேண்டும்.

(7) பெண்கள் கணவனைத் தவிர வேறு புருஷருடன் பேசக்கூடாதென்றும் பழகக்கூடாதென்றும் பயத்தாலும் பொறாமையாலும் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனையை ஒழித்து விடவேண்டும்.

(8) பெண்களுக்கும் ஆண்களைப் போலவே உயர்தரக் கல்வியின் எல்லாக் கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்த வேண்டும்.

(9) தகுதியுடன் அவர்கள் அரசாட்சியில் எவ்வித உத்யோகம் பெற விரும்பினாலும் அதைச் சட்டம் தடுக்கக் கூடாது.

(10) தமிழ் நாட்டில் ஆண்மக்களுக்கே ராஜரிக சுதந்திரம் இல்லாமல் இருக்கையிலே, அது பெண்களுக்கு வேண்டுமென்று இப்போது கூறுதல் பயனில்லை. எனினும் சீக்கிரத்தில் தமிழருக்கு சுயராஜ்யம் கிடைத்தால் அப்போது பெண்களுக்கும் ராஜாங்க உரிமைகளிலே அவசியம் பங்கு கொடுக்க வேண்டும். சென்ற வருஷத்து

காங்கிரஸ் சபையில் தலைமை வகித்தவர் மிஸஸ் ஆனி பெஸண்டு என்ற ஆங்கிலேய ஸ்திரீ என்பதை மறந்து போகக்கூடாது.

இங்ஙனம் நமது பெண்களுக்கு ஆரம்பப்படிகள் காட்டினோமானால், பிறகு அவர்கள் தமது முயற்சியிலே பரிபூரண விடுதலை நிலைமையை எட்டி மனுஷ்ய ஜாதியைக் காப்பாற்றுவார்கள். அப்போதுதான் நமது தேசத்துப் பூர்விக ரிஷிபத்தினிகள் இருந்த ஸ்திதிக்கு நமது ஸ்திரீகள் வர இடமுண்டாகும். ஸ்திரீகளை மிருகங்களாக வைத்து நாம் மாத்திரம் மஹரிஷிகளாக முயலுதல் மூடத்தனம். பெண் உயராவிட்டால் ஆண் உயராது.

தமிழ்

தமிழில் வேண்டாம். ஆங்கிலத்திலேயே இருக்கட்டும் என்று யாரோ திருநெல்வேலிப் பண்டிதர் ஒருவர் கூறிவிட்டாராம். வந்தது அடங்காத கோபம் பாரதியாருக்கு. தமிழ் என்னும் கட்டுரையிலே அவர் எப்படி ஓரேபோடாக போடுகின்றார் பாருங்கள். யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் என்று வீரமுழக்கம் செய்தவரல்லவா பாரதியார்? அவர் சொல்லுவதை அவர் வாக்கிலேயே கேளுங்கள்:

கல்கத்தாவிலிருந்து வெளிப்படும் 'மாடன் ரெவ்யூ' மாதப் பத்திரிகையின் தை—மாசி ஸஞ்சிகையை நேற்றுப் பொழுதுபோக்கின் பொருட்டாகத் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதிலே திருநெல்வேலி ஹிந்து காலேஜ் சரித்திர பண்டிதர் ஸ்ரீ நீலகண்டையர் ஒரு சிறிய கடிதமெழுதியிருக்கிறார். ஏற்கெனவே மேற்படி பத்திரிகையில் ஸ்ரீயதுநாத ஸர்க்கார் என்ற வித்வான் எழுதியிருந்த

சில வார்த்தைகளைக் குறித்து ஸ்ரீ ஐயர் தமது கருத்துக்களை வெளியிடுகிறார்.

கலாசாலையிலே சரித்திரப் பாடங்களை இங்கிலீஷில் கற்றுக் கொடுப்பது பயனில்லாத வீண்தொல்லையாக முடிகிறதென்றும், தேசபாஷைகளிலே கற்றுக்கொடுத்தால் நல்ல பயன் விளையுமென்றும் ஸ்ரீ சர்க்கார் தமது அனுபவத்திலே கண்ட செய்தியைச் சொன்னார். அதற்கு நமது திருநெல்வேலிப் பண்டிதர் சொல்லுகிறார்: "பாஷைத் தொல்லை பெருந்தொல்லையாகவே இருக்கிறது. ஆனால் எனது ஜில்லா, எனது காலேஜ் சம்பந்தப்பட்டவரையிலே பிள்ளைகளுக்குச் சரித்திரப் பாடம் இங்கிலீஷிலே கற்றுக் கொடுப்பதைக் காட்டிலும் தேச பாஷையில் கற்றுக் கொடுப்பது அதிக பயன் படுமென்று சொல்வதற்கில்லை. எனது மாணாக்கர்களிலே பெரும்பாலோர் இங்கிலீஷ் இலக்கணப் பிழைகளும் வழக்குப்பிழைகளும் நிறையச் செய்த போதிலும் மொத்தத்திலே தமிழைக்காட்டிலும் இங்கிலீஷை நன்றாக எழுதுகிறார்கள். சரித்திர விஷயங்களை வியவஹரிக்கும்போது எனக்கும் இங்கிலீஷ்தான் தமிழைக் காட்டிலும் நன்றாகச் சொல்ல வருகிறது."

இங்ஙனம் எழுதுகிற ஸ்ரீ நீலகண்டையரின் நிலைமையை நினைத்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன். சொந்த பாஷையை நேரே பேசத்தெரியாதவர்கள், சாஸ்திர பாடங்கள் நடத்தும் விநோதத்தை இந்தத் தேசத்திலேதான் பார்த்தோம். புதுமை! புதுமை!! புதுமை!!!

மேலும் இவர் தமக்குத் தாய்மொழி தெரியாதென்ற செய்தியை வங்கப் பத்திரிகைக்கு ஏன் எழுதப்போனார் என்பது எனக்கு அர்த்தமாகவில்லை. ஜப்பானியர், சீனர் நார்வேக்காரர், ஸ்விஸ்ஜாதியார், இத்தாலி தேசத்தார்,

ஹாலந்துக்காரர் முதலிய உலகத்து ஜாதியாரெல்லாம் நம்மை அறிவிலும் சாஸ்திரங்களிலும் பாஷைத் திறமையிலும் தாழ்வென்று நினைத்துவந்தார்கள். இப்போது தான் ஹிந்து ஜாதியராகிய நாம் காட்டுமனிதரில்லை, வாலில்லாத குரங்குகளில்லை, நமக்குப் பாஷைகள் இருக்கின்றன, நமக்குள்ளே சாஸ்திர விற்பன்னர்கள் இருக்கிறார்கள், கவிகள் இருக்கிறார்கள் என்று நம்மவரிலே சிலர் வெளியுலகத்தார் தெரிந்து கொள்ளும்படி செய்து வருகிறார்கள். இதற்குள்ளே தமிழ் வகுப்பு மற்ற ஹிந்துஸ்தானத்து வகுப்புக்களைக் காட்டிலும் குறைவுபட்டதென்று நம்மிலே சிலர் முரசடிக்கத் தொடங்குவது எனக்கு நகைப்புண்டாக்குகிறது.

என்னுடைய சொந்த அபிப்பிராயத்தைக் கொஞ்சம் சொல்லிவிடுகிறேன்.

உலகத்திலுள்ள ஜாதியார்களிலே ஹிந்து ஜாதி அறிவுத்திறமையில் மேம்பட்டது. இந்த ஹிந்து ஜாதிக்குத் தமிழராகிய நாம் சிகரம்போல் விளங்குகிறோம். எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கமுண்டு. இவற்றிலே தமிழைப்போல வலிமையும், திறமையும், உள்ளத் தொடர்பும் உடைய பாஷை வேறொன்றுமே யில்லை.

இந்த நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளியுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவொளி சற்றே மங்கியிருந்ததையும் நானறிவேன். ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் ஸத்யமில்லை. நாளை வரப்போவது ஸத்யம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள். அது வரையில் இங்கு பண்டிதர்களாக இருப்போர் தமக்குத் தமிழ்ச்சொல் நேரே வரா

விட்டால், வாயை மூடிக்கொண்டு வெறுமே இருக்க வேண்டும். தமிழைப் பிறர் இழிவாகக் கருதும்படியான வார்த்தைகள் சொல்லாதிருக்க வேண்டும். இவ்வளவு தான் என்னுடைய வேண்டுகோள்.

காந்தாமணி

பாரதியார் நகைச்சுவையோடு கதை சொல்லுவதில் மிகத் திறமை வாய்ந்தவர். அக்காலத்திலே சிறு கதை யென்பது இன்றுபோல் தனித்துறையாகவும் அதற்கென்று தனி இலக்கணத்தோடும் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை இருந்தாலும் காந்தாமணி என்ற பாரதியார் சிறுகதை மிகுந்த சுவையோடு விளங்குகிறது. நேருக்கு நேராக உரையாடும் பாங்கிலே அது நல்லதோர் எடுத்துக் காட்டாகும். அதை இப்பொழுது பார்க்கலாம். 1919ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 14 ஆம் தேதியில் இச்சிறு கதை வெளியாகியிருக்கிறது. பெண்களுக்கு ஒரு நீதி ஆண்களுக்கு ஒரு நீதி என்பதைக் கண்டித்து எவ்வளவு நயமாக நையாண்டி செய்கிறார் பாருங்கள்.

"காந்தாமணி, உங்கப்பா பெயரென்ன?" என்று பாட்டி கேட்டாள். ஒரு கிணற்றங்கரையில் நடந்த ஸங்கதி. கோடைக்காலம். காலைவேளை. வானத்திலே பால ஸூர்யன் கிரணங்களை ஒழிவில்லாமல் பொழிந்து விளையாடு கிறான். எதிரே நீலமலை; பச்சை மரங்கள்; பசுக்கள்; பல மனிதர்; சில கழுதைகள்; இவற்றின் தொகுதி நின்றது. வெயிலொளி எந்தப் பொருள்மீது பட்டாலும் அந்தப் பொருள் அழகுடையதாகத் தோன்றுமென்று ஷெல்லி என்ற ஆங்கிலக் கவிராயன் சொல்லுகிறான்; எனக்கு எந்த நேரத்திலும் எந்தப் பொருள்களும் பார்க்க அழகுடையன வனவாகத் தோன்றுகின்றன.

ஆனால் காலை வேளையில் மனிதக் கூட்டத்தில் கொஞ்சம் உற்சாகமும் சுறுசுறுப்பும் அதிகமாகக் காணப் படுவதால் அப்போது உலகம் மிகவும் சந்தோஷகரமான காட்சியுடையதாகிறது.

தோட்டத்துக்கு நடுவே ஒரு கிணறு. அத்தோட்டத் தில் சில அரளிப்பூச் செடிகள்; சில மல்லிகைப்பூச் செடிகள்; சில ரோஜாப்பூச் செடிகள். அக்கிணற்றிலிருந்து அதற் கடுத்த வீதியிலுள்ள பெண்களெல்லோரும் ஜலம் எடுத்துக் கொண்டு போவார்கள்.

இந்தக் கதை தொடங்குகிற அன்று காலையில் அங்கு காந்தாமணியையும் பாட்டியையும் தவிர ஒரு குருட்டுக் கிழவர் தாமே ஜலமிறைத்து ஸ்நானத்தைப் பண்ணிக் கொண்டிருந்தார். போலீஸ் உத்தியோகத்திலிருந்து தள்ளு படியாகி, அதிலிருந்து அந்தக் கிராமத்துக்கு வந்து, தமது வாழ்நாளின் மாலைப்பொழுதை ராமநாமத்தில் செலவிடும் பார்த்தசாரதி அய்யங்கார், அங்கு பக்கத்திலே நின்று கிழவியைக் குறிப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மேற்படி கிணற்றருகே ஒரு குட்டிச்சுவர். அதற்குப் பின்னே ஒரு வேப்பஞ் சோலை. அங்கு பல மூலிகைகளிருக் கின்றன. அவற்றுள் ஒன்று மிகுந்த பசி உண்டாக்குமென்று என்னிடம் ஒரு சாமியார் சொன்னார். அதுகொண்டு நான் மேற்படி மூலிகையைப் பறித்து வரும் பொருட்டாக அந்தச் சோலைக்குப் போயிருந்தேன். வானத்தில் குருவிகள் பாடுகின்றன. காக்கைகள் 'கா, கா' என்று உபதேசம் புரிகின்றன. வானவெளியிலே ஒளி நர்த்தனம் பண்ணு கிறது. எதிரே காந்தாமணியின் திவ்ய விக்ரஹம் தோன்றிற்று.

"உங்கப்பா பெயரென்ன?" என்று பாட்டி காந்தா மணியிடம் கேட்டாள்.

"எங்கப்பா பெயர் பார்த்தசாரதி அய்யங்கார்" என்று காந்தாமணி புல்லாங்குழலைப் போல் ஊதிச் சொன்னாள். கிழவி, போலீஸ் பார்த்தஸாரதி அய்யங்காரை நோக்கி, ஒரு முறை உருட்டி விழித்தாள். போலீஸ் பார்த்தஸாரதி அய்யங்கார் கையுங் காலும் வெலவெலத்துப் போனார். அவருக்கு முகமும் தலையும் வெள்ளை வெளேரென்று நரைத்துப் போய்த் தொண்ணூறு வயதுக் கிழவனைப் போலே தோன்றினாலும், உடம்பு நல்ல கட்டுமஸ்துடைய தாகப் பதினெட்டு வயதுப் போர்ச் சேவகனுடைய உடம்பைப் போலிருக்கும். அவர் ஆண் புலி; வேட்டை களாடுவதில் தேர்ச்சியுடையவரென்று கேள்வி. பாம்பு நேரே பாய்ந்து வந்தால் பயப்பட மாட்டேனென்று அவரே என்னிடம் பத்துப் பதினைந்து தரம் சொல்லியிருக் கிறார்.

அப்படிப்பட்ட சூராதி சூரனாகிய பார்த்தஸாரதி அய்யங்கார், கேவலம் ஒரு பாட்டியின் விழிப்புக்கு முன்னே இங்ஙனம் கைகால் வெலவெலத்து மெய்வெயர்த்து முகம் பதறி நின்றதைக் கண்டு வியப்புற்றேன்.

அப்பால் அந்தப் பாட்டி காந்தாமணியிடம் மேற்படி போலீஸ் அய்யங்காரைச் சுட்டிக் காட்டி :— 'இதோ நிற் கிறாரே, இந்தப் பிராமணன், இவரா உங்கப்பா?" என்று கேட்டாள்.

அதற்குக் காந்தாமணி தன் இரண்டு கைகளையும் வானத்திலே போட்டு, முகத்திலே வானொளியை நகைக்கத் தக்க ஒளியுடைய நகை வீச,—"ஏ, ஏ, இவரல்லர்; இவர் கன்னங்கரேலென்று ஆசாரியைப் போலிருக்கிறாரே! எங்கப்பா செக்கச்செவேலென்று எலுமிச்சம் பழத்தைப் போலிருப்பார். இவர் நரைத்த கிழவரன்றோ? எங்கப்பா சின்னப்பிள்ளை" என்று காந்தாமணி உரைத்தாள்.

அப்போது போலீஸ் பார்த்தஸாரதி அய்யங்கார் காந்தாமணியை நோக்கி :— "உங்கப்பாவுக்கு எந்த ஊரிலே வேலை?" என்று கேட்டார்.

"எங்கப்பா சங்கரநாதன் கோயில் ஸப்—இன்ஸ்பெக்டர்" என்று காந்தாமணி சொன்னாள். பார்த்தஸாரதி அய்யங்கார் தலையைக் கவிழ்த்துக் கொண்டார். அவருக்கு "ஸப்—இன்ஸ்பெக்டர்" என்ற பெயர் பாம்புக்கு இடி போல். அப்போது காந்தாமணிக்கும் பாட்டிக்குமிடையே பின்வரும் ஸம்பாஷணை நிகழலாயிற்று.

"நீங்கள் அக்கா, தங்கை எத்தனை பேர்?" என்று பாட்டி கேட்டாள். அப்போது காந்தாமணி சொல்லுகிறாள் :— "எங்கக்காவுக்குப் பதினெட்டு வயது. போன மாஸந்தான் திரட்சி நடந்தது; ஸ்ரீ வைகுண்டத்திலே. எனக்கு அடுத்த மாஸம் திரட்சி. என் தங்கை ஒரு பெண் திரள நிற்கிறது. நாங்கள் மூன்று பேரும் பெண்கள். எங்காப்பாவுக்குப் பிள்ளைக் குழந்தை இல்லையென்று தீராத மனக்கவலை. என்ன செய்யலாம்? பெருமாள் அநுக்ரஹம் பண்ணினாலன்றோ தாழ்வில்லை? அதற்காக அவர் சோதிடம் பார்த்தார். எங்கம்மாவுக்கு இனிமேல் ஆண்குழந்தை பிறக்காதென்று பாழாகப் போவான் ஒரு ஜோதிடன் சொல்லிவிட்டான். அதை முத்திரையாக முடித்துக் கொண்டு இந்த அறுதலிப் பிராமணன், எங்கப்பா, அடுத்த மாஸம் மன்னார் கோவிலில் ஒரு பெண்ணை இளையாளாகக் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறார். முகூர்த்தமெல்லாம் வைத்தாய் விட்டது" என்றாள்.

"மன்னார் கோவிலில் உங்கப்பாவுக்குப் பெண் கொடுக்கப்போகிற மாமனாருடைய பெயரென்ன?" என்று அந்தப் பாட்டி கேட்டாள். அதற்குக் காந்தாமணி : — "அவர் பெயர் கோவிந்தராஜய்யங்காராம், அந்த ஊரிலே

அவர் பெரிய மிராசாம். அவருக்கு ஒரு பெண்தானும் கால் முதல் தலைவரை அந்தப் பெண்ணுக்கு வயிர நகை சொரிந்து கிடக்கிறதாம். தேவ ரம்பையைப் போலே அழகாம் அந்தப் பெண்" என்றாள்.

"அப்படிப்பட்ட அழகான பணக்கார இடத்துப் பெண்ணை, இளையாளாகக் கொடுக்கக் காரண மென்ன? என்று பாட்டி கேட்டாள். "அந்தப் பெண் திரண்டு மூன்று வருஷங்களாய்விட்டன. தாயும் இறந்து போய் விட்டாள். அதன் நடையுடை பாவனைகளெல்லாம் ஐரோப்பிய மாதிரி. ஆதலால் இதுவரை அதற்குக் கலியாணத்துக்கு யாரும் வரவில்லை. எங்கப்பா அந்த ருதுவான வார்த்தையெல்லாம் வீண் பொய்யென்று சொல்லித் தாம் கல்யாணம் பண்ணிக்கொள்ள ஸம்மதப் பட்டு விட்டார். மேலும் இவருக்கு மனதுக்குள்ளே ஸந்தோஷந்தான், தமக்கு ருதுவான பெண் கிடைப்பது பற்றி. இன்றைக்குக் காலையிலேகூட அவரும் எங்கம்மாவும் பேசிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் இந்த ஊர்ச் சத்திரத்திலேதான் ஒரு வாரமாக இறங்கியிருக்கிறோம். எங்கப்பாவும் அம்மாவும் பேசிக்கொண்டிருந்தபோது, அம்மா சொன்னாள் :—"மன்னார்குடிப் பெண் திரண்டு மூன்று வருஷமாய் விட்டதாக இந்த ஊரிலே கூடப் பலமான ப்ரஸ்தாபம். ஆண், பெண் எல்லோரும் ஒரே வாக்காகச் சொல்லுகிறார்கள்' என்றாள். அப்பா அதற்கு :—'நெவர்மைண்ட். அந்தக் குட்டி திரண்டிருப் பதைப் பற்றி நமக்கு இரட்டை ஸந்தோஷம். நமக்குப் பணம் கிடைக்கும். ஆண் பிள்ளை பிறக்கும். குட்டி ஏராளமான அழகு. இந்த மாதிரி இடத்திலே ஐ டோன் கேர் எடேம் எபௌட் சாஸ்திரங்கள். நாம் சாஸ்திரங் களைப் புல்லாக மதிக்கிறோம்' என்றார்......" என்று காந்தா மணி சொன்னாள்.

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கிற சத்தம் என் காதில் விழுந்தது. என்னுடைய பார்வை முழுவதும் போலீஸ் பார்த்தஸாரதி அய்யங்கார்மேல் நின்றது. அவரைப் பார்த்துக் கொண்டேயிருக்கையிலே என் மனதில் திடீரென்று ஒரு யோசனை பிறந்தது. அங்கிருந்தவர்களில் எனக்குக் காந்தாமணியின் முகந்தான் புதிது. பார்த்தஸாரதி ஐயங்காரையும் தெரியும். அந்தக் கிழவியையுந் தெரியும். அந்தக் கிழவி அய்யங்காரிச்சியில்லை; ஸ்மார்த்தச்சி. அந்த கிராம முன்சீபின் தங்கை. அவளுக்கும் போலீஸ் பார்த்தஸாரதி அய்யங்காருக்கும் பால்யத்தில் பலமான காதல் நடைபெற்று வந்ததென்றும், அதனால் போலீஸ் பார்த்தஸாரதி அய்யங்காருக்கும் மேற்படி கிராம முன்ஸீபுக்கும் பலமுறை யுத்தங்கள் நடந்தனவென்றும், அந்த யுத்தங்களிலே ஒன்றின்போதுதான் பார்த்தஸாரதி அய்யங்காருக்கு ஒரு கண்ணில் பலமான காயம்பட்டு அது பொட்டையாய் விட்டதென்றும் நான் கேள்விப் பட்டதுண்டு. அந்தக் கேள்வியையும் மனதில் வைத்துக் கொண்டு இப்போது மேற்படி ஸ்திரீகளின் ஸம்பாஷணையின் போது மேற்படி அய்யங்காரின் முகத்தில் தோன்றிய குறிப்புகளையும் கவனித்தவிடத்தே என் மனதில் பின்வரும் விஷயம் ஸ்பஷ்டமாயிற்று.

கிழவியினிடத்தில் பழைய காதல் தனக்கு மாறுமல் இன்றும் தழல் வீசிக்கொண்டிருக்கிறதென்ற செய்தியை ஐயங்கார் கிழவியினிடம் ஸ்திரப்படுத்திக் காட்ட விரும்புகிறுரென்றும், காந்தாமணி முதலிய யுவதிகளின் அருகேகூடத் தனக்கு அக்கிழவியின் வடிவே அதிக ரம்யமாகத் தோன்றுகிறதென்று உணர்த்த விரும்புகிறுரென்றும் தெரியலாயிற்று. ஆனல் அவருடைய முகக் குறிப்புகளிலே பாதி பொய் நடிப்பென்பதும் தெளிவாகப் லப்பட்டது.

ஏனென்றால் காந்தாமணியையும் அக்கிழவியையும் ஒருங்கே தன் கையால் படைத்து, இருவருக்கும் பிதா வாகிய பிரமதேவன் கூடக் காந்தாமணியின் ஸந்நிதியில் அந்தக் கிழவியைப் பார்க்கக் கண் கூசுவான். அப்படி யிருக்கக் கிழவியின்மீது அங்கு காதற் பார்வையை அசைவின்றி நிறுத்த முயன்ற போலீஸ் பார்த்தஸாரதி ஐயங்காரின் முயற்சி மிகவும் நம்பக்கூடாத மாதிரியில் நடைபெற்று வந்தது.

இந்த ஸங்கதியில் மற்றொரு விசேஷமென்னவென்றால் மேற்படி அய்யங்காரை நான் விருக்ஷ மறைவிலிருந்து கவனித்துக் கொண்டு வந்ததுபோலவே காந்தாமணியும் கிழவியும் அவரை அடிக்கடி கடைக்கண்ணால் கவனித்துக் கொண்டு வந்தார்கள். பெண்களுக்குப் பாம்பைக் காட்டிலும் கூர்மையான காது; பருந்தைக் காட்டிலும் கூர்மையான கண். எனவே பார்த்தஸாரதி அய்யங்கா ருடைய அகத்தின் நிலைமையை நான் கண்டது போலவே அந்த ஸ்திரீகளும் கண்டு கொண்டனரென்பதை அவர் களுடைய முகக்குறிகளிலிருந்து தெரிந்து கொண்டேன்.

என்னை மாத்திரம் அம்மூவரில் யாவரும் கவனிக்க வில்லை. நான் செடி கொடிகளின் மறைவில் நின்று பார்த்தபடியால் என்னை அவர்களால் கவனிக்க முடிய வில்லை.

இப்படி யிருக்கையிலே அங்கு இருபது வயதுள்ள ஒரு மலையாளிப் பையன் பெருங்காயம் கொண்டு வந்தான். சில்லறையில் பெருங்காயம் விற்பது இவனுடைய தொழில். இவன் பலமுறை அந்தக் கிராமத்துக்குப் பெருங்காயம் கொண்டு வந்து விற்பதை நான் பார்த்திருக்கிறேன். இவனைப்பற்றி வேறொன்றும் நான் விசாரித்தது கிடையாது. இவன் பார்வைக்கு மன்மதன் போலிருந்

தான். கரிய விழிகளும், நீண்ட மூக்கும், சுருள் சுருளான படர்ந்த உச்சிக்குடுமியும், அவனைக் கண்டபோது எனக்கே மோஹமுண்டாயிற்று.

அந்த மலையாளி கிணற்றருகே வந்துட்கார்ந்து கொண்டு கிழவியிடம் தாஹத்துக்கு ஜலங்கேட்டான் அவனைப் பார்த்த மாத்திரத்தில் காந்தாமணி நடுங்கிப் போனதைக் கவனித்தேன். அப்பால் அந்த மலையாளி காந்தாமணியை ஒரு முறை உற்றுப் பார்த்தான். அவள் தன் இடுப்பிலிருந்த குடத்தை நீரோடு நழுவ விட்டுவிட்டாள். அது தொப்பென்று விழுந்தது. காந்தாமணி அதை குனிந்தெடுத்து;...“ஐயோ, நான் என்ன செய்வேனம்மா? குடம் ஆறங்குல ஆழம் அமுங்கிப் போய் விட்டதே? எங்கம்மா எனக்குத் தூக்குத் தண்டனை விதிப்பாளே?” என்று சொல்லிப் பெருமூச்சு விட்டாள்.

மார்புத் துணியை நெகிழவிட்டாள்; பொதியைமலைத் தொடரை நோக்கினாள்.

இந்தக் காந்தாமணி மேற்படி மலையாளிப் பையனிடம் காதல் வரம்பு மிஞ்சிக் கொண்டவளென்பதை நான் தொலைவிலிருந்தே தெரிந்து கொண்டேன், பின்னிட்டு விசாரணை பண்ணியதில் காந்தாமணியின் பிதாவாகிய பார்த்தஸாரதி ஐயங்கார் பூர்வம் நெடுநாள் மலையாளத்தில் உத்தியோகம் பண்ணிக் கொண்டிருந்தாரென்றும், அங்கு மிகச்சிறிய குழந்தைப் பிராய முதலாகவே காந்தாமணிக்கும் அந்த மலையாளிக்கும் காதல் தோன்றி அது நாளுக்குநாள் வளர்ந்து வருகிறதென்றும் வெளிப் பட்டது. ஸப் - இன்ஸ்பெக்டர் அய்யங்கார் திரவிய லாபத்தை உத்தேசித்துக் காந்தாமணியைப் பென்ஷன் டிப்டி கலெக்டரும் கூந்தலாபுரம் ஜமீன் திவானுமாகிய ஐம்பத்தைந்து வயதுள்ள கோழம்பாடு ஸ்ரீநிவாஸாசார்யார்

என்பவருக்கு விவாகம் செய்து கொடுத்துவிட்டார். அந்த ஸ்ரீநிவாஸாசார்யருடன் வாழக் காந்தாமணிக்கு சம்மதமில்லை. இந்தச் செய்தியெல்லாம் எனக்குப் பின்னிட்டுத் தெரியவந்தது.

அன்று கிணற்றங்கரையில் என் கண்முன்னே நடந்த விஷயத்தை மேலே சொல்லுகிறேன். காந்தாமணி குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு, "எங்கம்மா வைவாளே, நான் என்ன சொல்வேனம்மா?" என்று அழுதுகொண்டே போனாள். ஆனால் அவள் தன்னுடைய தாய் தந்தையர் இருந்த சத்திரத்திற்குப் போகவில்லை. நேரே, அந்த ஊருக்கு மேற்கேயுள்ள நதிக்குப் போனாள். தாகத்துக்கு நீர் குடித்த பின்பு மலையாளியும் அந்த ஆற்றங்கரையை நோக்கிச் சென்றான். இதற்குள்ளே எனக்கு ஸந்தியா வந்தன காலம் நெடுந்தூரம் தவறி விட்டபடியால் நான் அந்தக்கிணற்றடியைவிட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். அன்று மாலை என் வீட்டுக்கு மேற்படி கிராமத்து வாத்தியார் சுந்தர சாஸ்திரி வந்தார். வந்தவர் திடீரென்று:—, 'கேட்டீர்களோ. விஷயத்தை; வெகு ஆச்சர்யம்! வெகு ஆச்சர்யம்;" என்று கூக்கூரலிட்டார்.

"என்ன ஓய் ஆச்சர்யம்? நடந்ததைச் சொல்லிவிட்டுப் பிறகு கூக்குரல் போட்டால் எனக்குக் கொஞ்சம் சௌகர்ய மாக இருக்கும்" என்றேன். "சத்திரத்திலே ஸப் - இன்ஸ் பெக்டர் பார்த்தசாரதி அய்யங்கார் சங்கரநாதன் கோவிலிருந்து வந்து இறங்கியிருக்கிறாரோ, இல்லையோ? அவர் ஒரு பெண்ணையுங் கூட்டிக்கொண்டு வந்தார் அவருடைய மகள். அந்தக் குட்டி வெகு அழகாம். திலோர்த்தமை, ரம்பை யெல்லாம் இவளுடைய காலிலே கட்டி அடிக்க வேண்டுமாம். அதற்குப் பெயர் காந்தாமணியாம். சொல்லுகிறபோதே நாக்கில் ஜலம்

சொட்டுகிறது. காந்தாமணி, காந்தாமணி. என்ன நேர்த்தியான நாமம். ரஸம் ஒழுகுகிறது..."

இங்ஙனம் ஸுந்தர சாஸ்திரி காந்தாமணியை வர்ணித்துக்கொண்டு போவதை நான் இடையே மறித்து :—"மேலே நடந்த சரித்திரத்தைச் சொல்லும்" என்றேன்.

"அந்தக் காந்தாமணியைக் காணவில்லையென்று விடியற்காலமெல்லாம் தேடிக் கொண்டிருந்தார்கள். இப்போதுதான் அம்பாசமுத்திரத்திலிருந்து ஒரு தந்தி கிடைத்ததாம். இன்று பகல் 3 மணிக்கு மேற்படி காந்தாமணியும், ஒரு மலையாளிப் பையனும் கிறிஸ்துவக் கோவிலில் விவாகம் செய்து கொண்டார்களென்று அந்தத் தந்தி சொல்லுகிறதாம்" என்றார்.

சில தினங்களுக்கப்பால் மற்றொரு ஆச்சர்யம் நடந்தது. கிராமத்து மாஜி போலீஸ் சேவகர் நரைத்த தலைப் பார்த்தஸாரதி அய்யங்காரும், அன்று கிணற்றங் கரையில் அவருடைய காதற்பார்வைக் கிலக்காயிருந்த கிழவியும் ரங்கூனுக்கு ஓடிப் போய்விட்டார்கள். பின்னிட்டு அந்தக் கிழவி தலை வளர்த்துக் கொண்டு விட்டாளென்றும் பார்த்தஸாரதி ஐயங்காரும் அவளும் புருஷனும் பெண்ஜாதியுமாக வாழ்கிறார்களென்றும், அய்யங்கார் அங்கொரு நாட்டுக்கோட்டை செட்டியிடம் வேலை பார்த்துத் தக்க சம்பளம் வாங்கிக்கொண்டு க்ஷேமமாக வாழ்கிறார்களென்றும் ரங்கூனிலிருந்து செய்தி கிடைத்தது.

பிராயச்சித்தம்

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பது தமிழ் பழமொழி. முந்நாளில் கடல் வாணிகம் செய்து நிறையப்

பொருள் ஈட்டி வந்தார்கள். ஆனால் கடல் கடந்தால் ப்ராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டும் என்ற மூடக் கொள்கை எப்படியோ இடைக்காலத்தில் புகுந்து விட்டது. நிறையப் பொருள் சம்பாதிக்கவேண்டும் என்பது பாரதியார் கொள்கை. கடல் கடந்தால் ப்ராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டுமென்ற மூடக்கொள்கையை மண்டையில் ஓங்கி அடிக்கிறார் பாரதியார். மண்டையில் ஓங்கி அடிப்பதுமில்லாமல் அதை குத்தும் வெட்டுமென்று சாடுகிறார் பாரதியார். 1917 ஆம் ஆண்டு ஜூன்மாதம் 21ஆம்தேதி வெளிவந்த பாரதியாரின் ப்ராயச்சித்தம் என்ற கட்டுரை இதை நன்கு விளக்குகிறது. இந்தச் சுவை யான கட்டுரையையும் பார்ப்போம்.

என்னுடைய ஸ்நேஹிதர்களில் ஒருவராகிய ராமராயர் இங்கிலாந்துக்குப் போயிருந்தார். திரும்பி வேதபுரத்துக்கு வந்தார். அவருக்கு ஒருவிதமான வேதாந்தப் பயித்தியம், ப்ரம்மமே ஸத்தியம். லோகமெல்லாம் மித்தை. ஆதலால் எல்லாரும் ஸந்நியாஸம் வாங்கிக்கொள்ள வேண்டும். தலையை மொட்டை அடித்துக்கொள்ள வேண்டும் சடைகளாகத் திரித்து விடலாம். அப்படிச் செய்தாலும் குற்றமில்லை. எப்போதும் 'ஓம், ஓம்' என்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். அல்லது ஐம்புலன்களையும், மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்ற நான்கு அந்தக் கர்ணங்களையும் உள்ளே இழுத்துக்கொண்டு சுத்த ப்ரம்ம நிலையோ, அல்லது அதற்குப் போகிற பாதையோ ஆகிய நிர்விகற்ப ஸமாதியில் நிற்கவேண்டும். இது அவருடைய மதம்; ஆனால் அவருடைய நடை மற்ற மனுஷ்யர்களைப் போலேதான்.

ஸந்யாஸம் வாங்கவில்லை; தலை மொட்டையுமில்லை; சடையுமில்லை; ஓங்காரத்தைத் தவிர வேறு வார்த்தை

னும் சொல்லிக்கொண்டுதான் வருகிறார். நிர்விகற்ப மாதியிலே அவர் இருப்பதை நான் பார்த்ததே கிடையாது.

மேற்படி ராமராயர் இங்கிலாந்தில் இருக்கும்போது, ஐரோப்பியர் கண் பார்க்காமல் கை எப்படிச் சமைக்கும்? ஐரோப்பியர் சமையல் பண்ணின பதார்த்தங்களை நாளொன்றுக்கு நான்கு முறையாகப் பத்து வருஷ காலம் நிர்விக்நமாக போஜனம் செய்துகொண்டு வந்தார். இந்த விஷயத்தில் அவர் மேலே அதிகக் குற்றம் சொல்ல இடமில்லை. ஐரோப்பாவில் ஐரோப்பியர் சமையல் பண்ணினதைத் தின்னுமல் எப்படிப் பிழைக்க முடியும்? இங்கிருந்து பிராம்மணப் பரிசாரகர்களில் நூறு நூற்றைம்பது பேரைக் கொண்டு லண்டன் பட்டணத்தில் குடியேற்றினுல், நம்மவர்கள் போய் ஜாதியாசாரங்களுக்கு விரோதமில்லாதபடி அங்கிருந்து படித்து வைதிகக் கலெக்டர்களாகவும் வைதிக பாரிஸ்டர்களாகவும் திரும்பி வர இடமுண்டாகும். ஸ்வாமி விவேகானந்தர் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் ஸஞ்சரித்த காலத்தில் பசுக்கறி முதலியவற்றை யதேஷ்டமாக சாப்பிட்டதாகப் பாதிரிகள் இந்தியாவில் கூக்குரல் போட்டதைப் பொறுக்க முடியாமல், சென்னப் பட்டணத்திலிருந்து சில வைதிக சிஷ்யர்கள் வருத்தப்பட்டு விவேகானந்தருக்குக் காயிதம் போட்டார்கள். அடுத்த கப்பலில் ஒரு வைதிக பரிசாரனும், வைதிக போஜனங்களும் இந்தியாவிலிருந்து அனுப்பினுல், தான் வைதிகமாக உண்பதில் ஆக்ஷேபமில்லை யென்று விவேகானந்தர் மறுமொழி எழுதினுராம்.) ராமராயர் இங்கிலாந்தில் போய்ப் பத்து வருஷ காலம் இருந்து வியாபாரம் பண்ணிவிட்டுக் கொஞ்ச காலத்துக்கு முன்பு, வேதபுரத்துக்குவந்து சேர்ந்தார். இங்கே அவர் கையில் கொஞ்சம் காசிருப்பதைக் கண்டு சில வைதிகர்கள்

அவரைப் ப்ராயச்சித்தம் செய்து கொள்ளும்படி சொன்னார்கள். அவர் பண்ணிக்கொள்ளவில்லை. ஆனால் இங்கு வந்த பிறகு சுத்தமான பிராமணர் சமையல்தான் சாப்பிடுகிறார். பிராமண ஆகாரம் அவருக்கு நன்றாக ஒத்து வருகிறது. உடம்புக்கு ஒன்றும் செய்வதில்லை. மற்ற நடைகளும் அப்படியேதான். மூன்று வேளையும் ஸந்த்யா வந்தனம்; மாத்யான்ஹிகங்கள் தவறுவதில்லை. அமாவாஸை தோறும் சரியான தர்ப்பணம்; வருஷத்தில் ஐந்தாறு சிராத்தம் எல்லாம் கிரமமாகவே நடத்தி வருகிறார். ஒரே ஒரு புரோஹிதரும் அனேக லௌகிகரும் இவரை ஜாதியில் சேர்த்துக்கொண்ட மாதிரியாகவே நடந்து வருகிறார்கள். பல புரோஹிதரும், சில லௌகிகரும் கொஞ்சம் ஒட்டியும் ஒட்டாமலும், தாமரை நீர் போலிருக்கிறார்கள். சிலர் ஒட்டாமலே விலகியிருக்கிறார்கள். போன மாஸம் மேற்படி ராமராயர் என்னிடம் ஊர்க்காரருடைய திருப்தியை உத்தேசித்துத்தான் ப்ராயச்சித்தம் பண்ணிக்கொள்ள இஷ்டப்படுவதாக அறிவித்தார். நான் உடனே மேற்படி விஷயத்தை இந்த ஊர் வைதிகர்களுக்கெல்லாம் சிரோமணியாகிய ரங்கநாத சாஸ்திரிகளிடம் போய்ச் சொன்னேன். இந்த ரங்கநாத சாஸ்திரிகளுடைய மாப்பிள்ளை ஒருவன் ரங்கூனிலே போய்க் காபிக் கடை வைத்திருக்கிறான். தமிழ்த் தேங்குழல், தமிழ் முறுக்கு தோசை, வடை, கடலைச் சுண்டல் முதலிய பக்ஷணங்களை கொஞ்சமேனும் வடஇந்தியா ஆரிய சம்பந்தமில்லாதபடி நன்றாகப் பண்ணிக்கொடுத்து, அங்குள்ள தமிழ் மக்களெல்லாம், இந்த பிராமணனை மிகவும் அருமையாகப் பாராட்டினபடியால் நல்ல பணக்காரனாகி, அங்கே தனது மனைவியாகிய மேற்படி சாஸ்திரிகளுடைய பெண்ணும் தானும் நாலைந்து குழந்தைகளுமாக சௌக்கியத்தோடு வாழ்ந்து வருகிறான். இந்தக் காரணத்தை யொட்டி

மேற்படி ரங்கநாத சாஸ்திரிகள் மாப்பிள்ளையுடன் எவ்விதமான சம்பந்தமுமில்லாமல் கத்திரித்துவிட்டார். இவருடைய மனைவி மூலமாகக் காயிதப் போக்குவரவு நடக்கிறது. அதில்கூட இவர் கவனம் செலுத்துவதில்லை. இதே காரணத்தை யனுசரித்து, அதாவது, அவருடைய மாப்பிள்ளை ரங்கூனுக்குப் போனதை உத்தேசித்து, இந்த சாஸ்திரிகள் தம்முடைய வைதிகத்தை மிகவும் விஸ்தாரப் படுத்தி வைத்திருக்கிறார். மற்றவர்களுடைய வைதிகம் ஆறுமுழமென்று வைத்துக்கொண்டால் இவருடைய வைதிகம் பன்னிரண்டு முழம். இந்த ப்ராமணர் இங்கே வைதிகர்களுக்குத் தலைவர். இவரிடம் நான் போய் ராமராயருக்குப் பிராயச்சித்தம் செய்து வைக்க வேண்டு மென்று சொன்னேன்.

அப்போது மேற்படி ரங்கநாத சாஸ்திரிகள் என்னைப் பார்த்து, "நீர் இந்த விஷயத்தை ஏன் கவனிக்கிறீர்?" என்று கேட்டார். நான் வைதிகமென்றும் அவர் நினைத்துக் கொண்டிருக்கிறார். அவர் கேள்விக்கு நான் மறுமொழி சொல்லாமல், "ஸமுத்ர யாத்திரை செய்தவன் பண்ண வேண்டிய ப்ராயச்சித்த மெப்படி?" என்று கேட்டேன்; இது வரைக்கும் சொன்ன கதை யெல்லாம் பீடிகை. இனி மேல் எழுதப்போகிற வசனங்களே நான் சொல்லவந்த விஷயம். ப்ராயச்சித்தம் கடல் யாத்திரைக்கு எப்படி நடத்த வேண்டுமென்று நான் கேட்டதற்கு, ரங்கநாத சாஸ்திரி சொல்லிய மறுமொழி கொஞ்சம் தர்க்க சாஸ்த்ர ஹானியாக இருந்தபோதிலும் எனக்கே கேட்க ரஸமாக இருந்தபடியால், பிறருக்கும் தெரிவிப்போம் என்ற எண்ணத்துடன் இங்கெழுதலானேன்.) ரங்கநாத சாஸ்திரி கள் சொல்லுகிறார் : —

"இங்கிலீஷ் படித்தவன் பண்ணுகிற ப்ராயச்சித்த மெல்லாம் 'ஹம்பக்' (பொய் வேஷம்) ப்ராயச்சித்தம்,

இங்கிலீஷ் படித்தவனுக்கு இந்த விஷயத்தில் கொஞ்ச மேனும் நம்பிக்கை கிடையாது. ருஷ்யாவிலே ராஜ்யம் புரண்டு போச்சுதாமே. ஜாதி குலமெல்லாம் லோக முழு திலும் தலைகீழாகக் கவிழ்ந்து போமென்று ஆனிபெஸண்ட் பத்திரிகையில் போட்டிருந்ததாமே! 'தன் மத்யே' இன்னு மொரு பேச்சு உம்மிடத்தில் கேட்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டேயிருந்தேன். ஆனி பெஸண்டுக்கு அஷ்டமாசித்துகளும் வருமென்று தஞ்சாவூரில் ஒரு பெரிய யோகீசுவரர் என்னிடம் நேரில் சொன்னார்......உமக்குத் தெரியாதா? போகட்டும் போம்......மொத்தத்தில் உத்தம ஸ்த்ரீ. வெள்ளைக்கார ஜாதியில் பிறந்து நம்முடைய ஹிந்து மதத்தைச் சேர்ந்து விட்டதாக வாயினாலே எப்போது சொன்னாளோ, அவள் நம்மைச் சேர்ந்த வளாகவே நினைக்க வேண்டும். இந்த விஷயத்தில், காளி தாஸரே, நம்முடைய அபிப்ராய மென்னவென்றால், எந்தக் குலமாக, எந்த ஜாதியாக இருந்த போதிலும், நமது ஆலயத்தில் வந்து கும்பிட்டால் அவர்களை நாம் ஹிந்து வாக நினைத்து ப்ரேமை செலுத்த வேண்டும். இந்த ஆனி பெஸன்ட்கூட பூமி முழுதிலும் ஸஹோதரத்வமும் ஸமத் துவமும் ஏற்படப் போகிறதென்று சொல்லுவதாகக் கேள்வி. அந்த வார்த்தை ஸத்தியமாகத்தான் இருக்கும். அந்தம்மாள் வெகு தூரம் படித்தவளாமே? அஷ்டமா ஸித்தி யென்கிற வார்த்தை வந்தால் அஸாதாரணமான புத்தியாவது உண்டென்பது நிச்சயந்தானே? நம்முடைய சாஸ்திரங்களும் அப்படியேதான் சொல்லுகின்றன. கலி மேலே போகப்போக ஜனங்களுக்குள்ளே கலப்பு மிகுதிப் பட்டு கடையிசில் ஒரே குலமாய் விடுமென்று சாஸ்த்ரம் சொல்லுகிறது. ஆனால் அது கெட்ட அர்த்தத்திலே சொல்கிறது. எல்லாரும் ஒரே குலமாய்க் கெட்டுப் போவார்களென்று சொல்லுகிறது. யதார்த்தம் அப்படி

யில்லை. ப்ரஹ்மாண்ட புராணத்தில் நான் ஒரு சுலோகம் படித்தேன். அது இப்போது ஞாபகமில்லை. அதிலே என்ன போட்டிருக்கிறதென்றால், கலியுகத்திலேயே ஒரு கிருதயுகம் வரும் என்று போட்டிருக்கிறது. கலி முற்றி உலகம் நாசமாய்ப் போகுமென்றே வாக்யங்களை நான் சோதனை போட்டுப் பார்த்திருக்கிறேன். அவற்றை யெல்லாம் காட்டிலும், மேற்படி ப்ரஹ்மாண்ட புராண வாக்யமே ப்ரமாணமென்று நான் நிச்சயமாக ருஜுப்படுத்துவேன். காளிதாஸரே, நீரும் அதை நம்பும். இதெல்லாம் ஏன் சொல்லுகிறனென்றால் உம்முடைய ஸ்நேகிதர் ராமராயர் ப்ராயச்சித்தம் பண்ணிக் கொள்ளப் போகிறதாகச் சொன்னீரே? அது அவசியமில்லை. இன்னும் கொஞ்ச காலத்தில் கிருதயுகம் வந்து விடுமானல், அவருக்கு யாதொரு சிரமுமில்லை. எல்லாரும் ஸமானம். அட க்ருதயுகம் வரவேயில்லை; இந்தக் கலியுகமே சாசுவதமாக இருக்கப் போகிறதாக வைத்துக்கொள்வோம். அதிலும், அதிகமாகப் பொய் சொல்லாமல் இருப்பது விசேஷம். கலி தானகவே முற்றுவது போதாதென்று நாம் ஒரு பக்கம் அதைப் பொய்சொல்லிப் பழுக்க வைப்பதில் என்ன சுகம்? கடல் யாத்திரை பண்ணினல் என்ன குடி முழுகிப் போச்சு? ஏன் காணும், காளிதாஸரே! உம்மைத்தான் கேட்கிறேன், கடல் யாத்திரை பண்ணினல் என்ன? இருக்கிற பிராமணர்களெல்லாரும் ஸ்மிருதி வாக்யம் தவருதபடிதான் நடக்கிறார்களோ? நம்முடைய மாப்பிள்ளை ரங்கூனுக்குப் போய் அங்கே நல்ல கோடீசுவரனக வாழ்கிறன். மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, பங்களூர், திருச்சினப்பள்ளி, தஞ்சாவூர், புதுச்சேரி, கும்பகோணம் இத்யாதி க்ஷேத்ரங்களில் வஸிக்கும் இங்கிலீஷ் பிராமணர்களுக்குள்ளே ஸந்த்யா வந்தனம் எவ்வளவும் சொற்பம்? தீர்த்த பானம் கூட நடக்கத்தான் செய்கிறது. ராம ராமா! இந்த ரிஷிக

ளெல்லாரும் என்ன ப்ராயச்சித்தம் பண்ணுகிறார்கள்? என் மாப்பிள்ளை ரங்கூனில் நித்ய கர்மானுஷ்டானங்கள் தவறு மல் நடத்தி வருகிறானென்று கேள்வி. அவன் வந்தால் ஜாதி ப்ரஷ்டன் தானே? ப்ராயச்சித்தம் பண்ணினால்கூட நான் சேர்த்துக்கொள்ள மாட்டேன். தள்ளுங்காணும். ப்ராயச்சித்தமாவது, வெங்காயமாவது! நான் ஏதோ உதர நிமித்தமாக இந்த வைதிகத்தை விடமுடியாமல் கட்டுப்பட்டுக் கிடக்கிறேன். இதில் மற்றவர் வந்து சேர்வதிலே எனக்கு ஸம்மதமில்லை. ராமராயர் ப்ராயச் சித்தம் பண்ணிக் கொள்ளுவதில் எனக்கு இஷ்டமில்லை. ரூபாய் ஐந்நூறு கொடுத்தால் செய்து வைக்கிறேன். ஆக்ஷேபமில்லை. அப்படியே அவர் ப்ராயச்சித்தம் செய் தாலும், நான் அவருடன் பந்தியிலிருந்து சாப்பிட மாட்டேன்" என்றார். இதை நான் ராமராயரிடம் வந்து சொன்னேன். ராமராயர் ப்ராயச்சித்த யோசனையை நீக்கி விட்டார்.

பாரதியாரும் பாட்டும்

பாரதியார் சிறந்த இசை ஞானம் உடையவர். "காணமுதம் படைத்த காட்சி மிக விந்தையடா!" "பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா!" என்று பாடியவர் அல்லவா பாரதியார்? ஆகையால் இவர் பாட்டைப் பற்றிக் கூறிய கருத்துகள் மிகுந்த கவனத்திற் குரியவை. அவர் தொடர்ந்து பத்து முப்பது கீர்த்தனங் களையே பாடுவதில் தமது அழுத்தமான கண்டனத்தைத் தெரிவிக்கிறார்.

சங்கீதத்தைப் பற்றி அவர் கூறுவதாவது :

"நானும் பிறந்தது முதல் இன்று வரை பார்த்துக் கொண்டே வருகிறேன். பாட்டுக் கச்சேரி தொடங்

கிறது. வித்வான் 'வாதாபி கணபதிம்' என்று ஆரம்பஞ் செய்கிறார். 'ராம நீ ஸமான மெவரு', 'மரியாத காதுரா', 'வரமு லொஸகி' ஐயையோ, ஐயையோ! ஒரே கதை.

எந்த ஜில்லாவுக்குப் போ, எந்த கிராமத்திற்குப் போ, எந்த 'வித்வான்' வந்தாலும், இதே கதைதான். தமிழ் நாட்டு ஜனங்களுக்கு இரும்புக் காதாக இருப்பதால், திரும்பத்திரும்பத் திரும்பத்திரும்ப ஏழெட்டுப் பாட்டுக் களை வருஷக்கணக்காகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தோற்காது உள்ள தேசங்களிலே இந்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

"பூர்விக மஹான்களுடைய பாட்டுக்களை மறந்து போய் விடவேண்டும்' என்பது என்னுடைய கக்ஷியன்று. அவற்றை அர்த்தத்துடன் பாடவேண்டும். பதங்களைப் பிழையாக உச்சரிக்கக் கூடாது. பதங்களை வாய்விட்டுத் தெளிவாகச் சொல்ல வேண்டும். விழுங்கிவிடக்கூடாது. பத்து முப்பது கீர்த்தனங்களையே ஓயாமற் பாடி, ஸங்கீதத்தை ஒரு தொல்லையாகச் செய்துவிடக்கூடாது" என்று மேலும் சொல்லுகிறார்.

"புதிய புதிய கீர்த்தனங்களை வெளியே கொண்டுவர வேண்டும். இப்போது ஸங்கீத வித்வான்களிலே தலைமைப் பட்டிருப்போர் தமிழிலே புதிய மெட்டுக்களில் கீர்த்தனங் கள் செய்ய முயலவேண்டும். நவரஸங்களின் தன்மை களையும், இன்னின்ன ராகங்களை, இன்னின்ன விதங்களிலே பாடினால், இன்னின்ன ரஸங்கள் உண்டாகும் என்பதையும் கற்றுத் தெரிந்துகொள்ளுதல் அவசியம்" என்பது பாரதி யாரின் கருத்து.

"பூர்வகாலத்து மஹான்களுக்குத் தெய்வப் பிரஸாத மிருந்தது. எங்களுக்கில்லையே? என்ன செய்வோம்? என்று புதிய வித்வான்கள் புதிய கீர்த்தனங்கள் அமைப்பதிலே

பின் வாங்கக் கூடாது. தெய்வங்கள் இறந்து போகவில்லை. இப்போதும் அவற்றை உபாஸனை செய்து அவற்றின் அருள் பெறலாம். தெய்வப் பிரஸாதத்தை ஒருவன் பக்தியாலும், ஜீவதயையாலும், நேர்மையாலும், உண்மையாலும், இடைவிடாத உழைப்பினாலும் ஸம்பாதிக்க முடியும்" என்றிவ்வாறு தெளிவாகச் சொல்லுகிறார் நம் கவிஞர்.

"நாட்டிலே ஸங்கீதத்திற்குச் சரியான போஷணை செய்யும் ராஜாக்களும் பிரபுக்களும் இல்லை. எங்களுக்கு ஜீவனமே கஷ்டமாயிருக்கிறது. மனக்கஷ்டம் இல்லாமல் இருந்தாலன்றோ ரஸஞானத்தை வளர்த்துக் கொண்டு போகலாம். சில வருஷங்களுக்குள்ளே சில கீர்த்தனங்களை வரப்படுத்திக் கொண்டு ஜீவனத்திற்கு வழி தேட வேண்டிய ஸ்திதி ஏற்பட்டிருக்கிறது. என்ன செய்யலாம்?" என்று நினைத்து மனமுடைந்து போகவேண்டாம்.

ஊரே யஜமானன்

இப்போது உலக முழுவதிலுமே ராஜாக்களையும் பிரபுக்களையும் நம்பி வித்தை பழகும் காலம் போய்விட்டது. பொது ஜனங்களை நம்பவேண்டும். இனிமேல் கலைகளுக்கெல்லாம் போஷணையும் ஆதரவும் பொது ஜனங்களிடமிருந்து கிடைக்கும். அவர்களுக்கு உண்மையான அபிருசி உண்டாக்கிக் கொடுப்பது வித்வான்களுடைய கடமை; பிறகு, நல்ல போஷணை கிடைக்கும். ஒரு பிரபு மாதம் ரூபாய் 100 கொடுப்பான். ஊர் சேர்ந்தால் தலைக்குக் கால் ரூபாயாக வசூல் பண்ணி மாதம் 1000 ரூபாய் கொடுக்கும். ஊரையே யஜமானனாகக் கொள்ளவேண்டும்.

ஊர்தான் ராஜா. இந்த ராஜாவுக்கு ஆரம்பத்திலே கொஞ்சம் ஞானம் அளித்துப் பழக்கங் கொடுத்தால் வித்தைகளுக்கு எவ்விதமான குறைவும் ஏற்படாது.

பாரதியார் வாக்கு ஆழ்ந்து சிந்தித்தற்குரியது. இதன் விரிவை மேலும் தெரிந்து கொள்ள வேண்டுமானால் என்னுடைய பாரதியும் பாட்டும் என்ற நூலைப் பார்க்கவும். கர்நாடக சங்கீதம் மங்கிவருவதை உணர்ந்தாவது, பாரதியார் கருத்தை ஊன்றிப் பார்க்க வேண்டும். ஏனென்றால் கர்நாடக சங்கீதம் ஓர் ஒப்பற்ற கலை. இசைக்கெல்லாம் சிகரம். இது வீணாக ஆதரிப்பாரற்றுப் போகக்கூடாது.

உங்கள் சிவன் வழியே வருவதில்லை

நாராயண குரு பெரிய சமூக சீர்திருத்தவாதி. பல எதிர்ப்புக்களிடையே தீயர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர்.

ஒரு சமயம், ஒரு நம்பூதிரி பிராம்மணன், ரயில் பயணத்தின்போது, "நீதானு சிவபிரதிஷ்டை செய்கிறவன்?" என்று கோபத்தோடு கேட்டாராம்.

நாராயண குரு அமைதியாகவும் நகைச்சுவையோடும் பதில் சொன்னார்: "உங்கள் சிவனே வேறு; நான் அதைப் பிரதிஷ்டை செய்யவில்லை. எங்கள் சிவனே வேறு; அதைத் தான் பிரதிஷ்டை செய்கிறேன். உங்கள் சிவன் வழிக்கே நாங்கள் வருவதில்லை" என்றாராம்.

தீயர்களுடைய சிவன்

"இவர் கோயில்கள் கட்டினதைப்பற்றி இதர ஜாதியார் வருத்தப்படவில்லையா?" என்று வேதவல்லியம்மை கேட்டாள்.

"ஆம். அவர்களுக்குக் கோபம்தான். ஒரு நாள் இந்த நாராயணஸ்வாமி ரயில்யாத்திரை செய்கையில், இவர் ஏறியிருந்த வண்டியில் ஒரு நம்பூரி பிராமணர் வந்து

சேர்ந்தார். அந்த நம்பூரி இவரை நோக்கி, இடது கை சிறுவிரலை நீட்டிக்கொண்டு, "பெயரென்ன?" என்று கேட்டார்.

"என் பெயர் நாணு என்று ஜனங்கள் சொல்லு வார்கள்" என்று நாராயணஸ்வாமி சொன்னார்.

"தீயர்களுக்குக் கோயில் கட்டிக்கொடுக்கும் ஸந்யாஸி நீர் தானோ?" என்று நம்பூரி கேட்டார்.

'ஆம்' என்று ஸ்வாமி சொன்னார். "பிராமணர் பிரதிஷ்டை செய்து பூஜிக்கவேண்டிய தெய்வத்தை, நீர் பிரதிஷ்டை செய்யும்படி உமக்கு யார் அதிகாரம் கொடுத் தார்கள்?" என்று நம்பூரி கேட்டார்.

அதற்கு நாராயணஸ்வாமி:— "பிராமணர்களுடைய சிவனை நான் பிரதிஷ்டை செய்யவில்லை. நான் பிரதிஷ்டை செய்தது தீயர்களுடைய சிவன். இதில் தாங்கள் வருத்தப் படவேண்டாம். தங்களுடைய சிவன் வழிக்கே நாங்கள் வரவில்லை" என்றார்.

பாரதியாரும் ஆசார திருத்த மஹாசபையும்

பாரதியார் ஆசார திருத்த மஹாசபையின் தீர்மானங் களைப் பற்றிப் பெரிதும் நம்பிக்கை வைத்திருக்கிறார். அரசியல் சீர்திருத்தம் வேண்டுமென்றால், அந்நிய அரசாங்கத்தாரிடமிருந்து எதிர்பார்க்க வேண்டும். ஆனால் சமூக சீர்திருத்தங்களுக்கு அவ்வாறு வேண்டியதில்லை. இந்தச் சீர்திருத்தங்களும் நடைமுறையில் கொண்டு வராததுபற்றி அவர் எள்ளி நகையாடுகிறார். அது பின்வரும் கட்டுரையால் வெளியாகின்றது.

இப்போது நடைபெறும் 1920-ம் வருஷம் ஜூன் மாஸம் 22-ம் தேதியன்று தொடங்கி, அன்றைக்கும்

அடுத்த இரண்டு மூன்று தினங்களும் திருநெல்வேலியில் "மாகாண ஆசாரத் திருத்த மஹாஸபை" நடைபெறும் என்று தெரிகிறது. 21-ந் தேதியன்று மாகாணத்து ராஜரீக மஹாஸபை திருநெல்வேலியில் கூடுகிறது. அதை அனுசரித்து, அதே பந்தரில் ஆசாரஸபையும் நடக்கும்.

22-ந் தேதி முதல், இரண்டு மூன்று நாள் கூடி, அங்கு நம் மாகாணத்து ஆசாரத் திருத்தக்காரர், வழக்கப்படி விவாதங்கள் நடத்தி, மாமூலைத் தழுவி சில தீர்மானங்கள் செய்து முடித்துப் பின்பு கலைந்து விடுவார்கள்.

எனக்குக் கிடைத்திருக்கும் அழைப்புக் கடிதத்தைப் பார்க்குமிடத்தே, இந்த வருஷம் நடப்பது இருபத்திரண்டாவது வருஷக் கூட்டமென்று விளங்குகிறது. சென்ற இருபத்திரண்டு வருடங்களாக இம் மாகாணத்திலுள்ள ஆசாரத் திருத்தக் கூட்டத்தார் வெறுமே ஸபைகள் கூடித் தீர்மானங்கள் செய்திருப்பதேயன்றி உறுதியான வேலை என்ன செய்திருக்கிறார்கள் என்பதை அறிய வழியில்லை.

ராஜரீக மஹா சபையில் செய்யப்படும் தீர்மானங்கள் காரியத்துக்கு வராவிட்டால், "அதற்கு நாம் என்ன செய்யலாம்? அதிகாரிகள் பார்த்து வரங்கொடுத்தால் தானே உண்டு. நாம் கேட்க மாத்திரமே தகுதியுடையோர். நம்முடைய விருப்பங்கள் நிறைவேற வேண்டுமாயின், அதற்கு அதிகாரிகளின் தயவு வேண்டும், அல்லது இங்கிலீஷ் பார்லிமெண்டின் தயை வேண்டும். அவை நிறைவேறாமலிருப்பதுபற்றி நம்மீது குறை கூறுதல் பொருந்தாது" என்று சாக்குப்போக்குச் சொல்ல இடமிருக்கிறது.

ஆசாரத் திருத்த மஹா சபையின் விஷயமோ அப்படியில்லை. இதில் நம்மவர்கள் செய்யும் தீர்மானங்களை நிறை

வேற்றவேண்டியவர்களும் நம்மவரே யன்றிப் பிறரில்லை, அதிகாரிகளின் தயவு வேண்டியதில்லை. இங்கிலீஷ் பார்லிமெண்டின் கருணையும் அவசியமில்லை. இதில் நாமே வரங் கேட்டு, நாமே வரங்கொடுக்க வேண்டும். அப்படியிருந்தும், இந்த ஆசாரத் திருத்தக் கூட்டத்தாரின் முயற்சிகள் ராஜ்யத் திருத்தக் கூட்டத்தாரின் பிரயத்தனங்களைக் காட்டிலுங்கூடக் குறைவான பயன் எய்தியிருப்பதை நோக்கும் போது மிகவும் வருத்தமுண்டாகிறது.

இந்த தேசத்து ஜனத்தலைவர்கள் மனிதர்களா? அல்லது வெறும் தோல் பொம்மைகள்தானா? இவர்கள் மனித ஹ்ருதயத்தின் ஆவலையும், மனித அறிவின் நிச்சயத்தையும், அவற்றின் பெருமைக்குத் தக்கபடி மதிப்பிடுகிறார்களா? அல்லது வெறும் புகையொத்த பதார்த்தங்களாகக் கணிக்கிறார்களா?

மேற்படி ஆசாரத் திருத்த சபைகளிலே அறிவுடைய மனிதர் பலர், ஜனத்தலைவர்களும், உத்தியோக பதவிகளில் உயர்ந்தோரும், பிரபுக்களும், கீர்த்தி பெற்ற பண்டிதர்களும், சாஸ்திரிகளும், நீதி நிபுணர்களும் கூடி, அறிவுடன் வாதங்கள் நடத்தி, அறிவுடன் சில தீர்மானங்கள் செய்து முடிக்கிறார்கள். அப்பால், அத் தீர்மானங்களைத் தமது சொந்த ஒழுக்கத்திலும் தேச ஜனங்களின் நடையிலும் செய்கைகளாக மாற்றுவதற்குரிய முயற்சிகள் ஒன்றுமே நடப்பதில்லை. எனவே, மனித அறிவை இவர்கள் களைந்துபோடும் குப்பைக்கு நிகராகவே மதிக்கிறார்கள் என்று தோன்றுகிறது. மேலும், அந்தத் தீர்மானங்கள் நிறைவேறுவதினின்றும் தேசத்து ஜனங்களுக்கு நன்மை விளையும் என்ற உண்மையான நம்பிக்கையுடனேயே அவை பிரேரேபணை செய்யப்படுகின்றன. இந்த விஷயத்தில் ஏராளமான காலவிரயமும் பொருட்

செலவும் ஏற்படுகின்றன. இவ்வளவுக்கும் முடிவாக யாதொரு பயனும் விளையக் காணோமென்றால், இந்த ஆசாரத் திருத்தக்காரரின் சக்தியை குறித்து நாம் என்ன சொல்லலாம்! இவ் வருஷமேனும், இவ்விஷயத்தில் தகுந்த சீர்திருத்தம் ஏற்படுமென்று நம்புகிறேன். முதலாவது விஷயம், ஆசாரத் திருத்த மஹா சபையில் பேசுவோராவது 'உண்மையிலேயே தாம் பேசும் கொள்கையின்படி நடப்பவரா' என்பதை நிச்சயித்து அறிந்துகொள்ள வேண்டும். மஹா சபைக்குப் பிரதிநிதிகளாக வந்திருப்போர் அத்தனை பேரிலும், பெரும்பகுதியார், 'இப்போது உடனே தத்தம் குடும்ப வாழ்க்கையில் என்னனென்ன சீர்திருத்தங்களை நிறைவேற்றத் தயாராக இருக்கிறார்கள்' என்பதைக் கண்டு பிடித்துப் பத்திரிகைகளில் வெளியிடவேண்டும்.

நமது மாகாண முழுமையிலும் ஆசாரத் திருத்த விஷயத்தில் சிரத்தையுடையோர் எல்லோரும் இந்த மாதம் திருநெல்வேலிக் கூட்டத்துக்கு அவசியம் வந்து சேர முயற்சி செய்யவேண்டும். இந்தக் கூட்டத்தை யொட்டி மாதர்களின் சபையொன்று நடக்கப்போகிறதாகையால், கல்வி கற்ற மாதர்களெல்லோரும் அவசியம் வந்திருந்து தமக்கு வேண்டிய சீர்த்திருத்தங்களை உறுதிப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். 'தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு.' அவரவருக்கு வேண்டிய விஷயங்களைக் குறித்து அவரவர் பாடுபட்டாலொழியக் காரியம் நடக்காது. மேலும், நம்நாட்டு ஆண்மக்கள் தமது நிலைமையை உயர்த்திக் கொள்ளக்கூடிய சுலபமான உபாயங்களைக்கூடக் கையாளத் திறமையற்றோராகக் காணப்படுகிறார்களாதலால், நம்முடைய ஸ்த்ரீகளை மேன்மைப்படுத்துதற்குரிய காரியங்களை முற்றிலும் இந்த ஆண்மக்கள் வசத்திலே விட்டுவிடாமல், மாதர்கள் தாமே முற்பட்டுத் தமக்கு வேண்டிய சீர்திருத்தங்களைத் தேடிக்

கொள்வதே நன்றாகும். அன்னிய தேசங்களில் விடுதலைக்காக உழைக்கும் ஸ்திரீகள், பெரும்பாலும் ஆண்மக்களின் உதவியை அதிகமாக நாடாமல் தமது மேம்பாட்டுக்குரிய வேலைகளைத் தாங்களே செய்து வருவதை நம் தேசத்து ஸ்திரீகள் நன்கு கவனிக்க வேண்டும்.

தமிழ் நாட்டு மக்களே! ஆரம்ப முதல் சமீப காலம் வரை ஆசாரத் திருத்தத் தலைவர்கள் பெரும்பாலும் தேசாபிமானம், ஸ்வபாஷாபிமானம், ஆர்ய நாகரீகத்தில் அனுதாபம் இம்மூன்றும் இல்லாதவர்களாக இருந்து வந்த படியால், பொதுஜனங்கள் இவர்களுடைய வார்த்தையைக் கவனிக்க இடமில்லாமல் போய்விட்டது. எனினும், அவர்களுடைய கொள்கைகளிற் பல மிகவும் உத்தமமான கொள்கைகள் என்பதில் ஐயமில்லை.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

தேசாபிமானம் முதலிய உத்தம குணங்கள் இல்லாவிடினும், இந்த முயற்சி தொடங்கியவர்கள் உலகப் பொது நீதிகளை நன்குணர்ந்தோர். யாவராலே தொடங்கப்பட்டதாயினும், இப்போது இம் முயற்சி தேச ஜனங்களின் பொதுக்கார்யமாக பரிணமித்து விட்டது. எனவே, இவ் வருஷத்து மஹா ஸபையில் தமிழ் மக்கள் பெருந்திரளாக எய்தி நின்று, ஸபையின் விவகாரங்கள் பெரும்பாலும் தமிழிலேயே நடக்கும்படியாகவும், தீர்மானங்கள் பின்பு தேச ஒழுக்கத்தில் காரியப்படும் வண்ணமாகவும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யக் கடவர். எதற்கும் பிரதிநிதிகள் நல்ல பெருங்கூட்டமாக வந்தால்தான் நல்ல பயன் ஏற்படும். ஜெர்மன் பாஷையில் "கூட்டம்" என்பதற்கும், "உத்ஸாஹம்" என்பதற்கும் ஒரே பதம் வழங்கப்படுகிறது.

பெருங் கூட்டம் சேர்ந்தால், அங்கு உத்ஸாஹம் இயல் பாகவே பெருகும் என்பது குறிப்பு.

பொது ஜன உத்ஸாஹமே ஸகல காரியங்களுக்கும் உறுதியான பலமாகும். எனவே, நமது முன்னேற்றத்தின் பரம ஸாதனங்களில் ஒன்றாகிய இந்த ஆசாரத் திருத்த மஹா சபையின் விஷயத்தில், நம்மவர், ஆண் பெண் அனை வரும், தம்மால் இயன்ற வகைகளிலெல்லாம் உதவி புரிந்து மிகவும் அதிகமான உத்ஸாஹம் காட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

உண்மையான பிராமணன் யார்?

உண்மையான பிராமணன் யாரென்று பாரதி யாருக்குத் தெளிவான கருத்து உண்டு. பிராமணன் யார் என்ற கட்டுரையிலே இதை நன்கு விளக்குகிறார். பொய்ப் பெருமைகளையும், போலிப் பெருமைகளையும் நசுக்க வேண் டும் என்பதே பாரதியாரின் கருத்து.

பிராமணன் யார்?
ஓர் உபநிஷத்தின் கருத்து

அஷ்டாதச உப நிஷத்துக்களிலே வஜ்ரஸூசிகை என்பது தொன்று. "வஜ்ர ஸூசி" என்றால் வயிர ஊசி என்பது பொருள். இவ்வுபநிஷதம் 'பிராமணன் யார்?' என்பதைக் குறித்து மிகவும் நேர்த்தியாக விவரித்திருக்கின்றது.

"நான் பிரமாணன், நீ சூத்திரன்" என்று சண்டை போடும் குணமுடையவர்களுக் கெல்லாம் இவ் வேத நூல் தக்க மருந்தாகும். அன்னிய ராஜாங்கத்தாரிடம் ஒருவன் போலீஸ் வேவு தொழில் பார்க்கிறான். அவன் ஒரு பூணூலைப் போட்டுக்கொண்டு, ஏதேனும் ஒரு நேரத்தில், கிராமபோன் பெட்டி தியாகையர் கீர்த்தனைகள் சொல்லு

வதுபோல, பொருள் தெரியாத சில மந்திரங்களைச் சொல்லி விட்டு, ஐயர் ஐயங்காரி அல்லது ராயர் என்று பெயர் வைத்துக்கொண்டு, ''நான் பிராமணன், நான் தண்ணீர் குடிப்பதைக்கூட மற்ற வர்ணத்தவன் பார்க்லாகாது'' என்று கதை பேசுகிறான். மற்றொருவன் தாசில்தார் வேலை பார்க்கிறான். பஞ்சத்தினால் ஜனங்கள் சோறின்றி மடியும் போது, அந்தத் தாசில்தார் தனது சம்பளம் அதிகப்படும் பொருட்டுப் ''பஞ்சமே கிடையாது, சரியானபடி தீர்வை வசூல் செய்யலாம்'' என்று 'ரிப்போட்டு' எழுதி விடுகிறான். ஆறிலொரு கடமைக்குமேல் ராஜாங்கத்தார் தீர்வை கேட்பதே குற்றம். பஞ்சநாளில் அதுகூடக் கேட்பது பெருங் குற்றம். அங்ஙனம் தீர்வை வாங்கிக் கொடுக்கும் தொழிலிலே இருப்பவன் ஹிந்து தர்மத்துக்கு விரோதி. அதற்குமப்பால், உள்ள பஞ்சத்தை இல்லை யென்றெழுதி ஜனத்துரோகம் செய்யும் தாசில்தாருக்கு என்ன பெயர் சொல்வதென்று நமக்குத் தெரியவில்லை. இப்படிப்பட்ட தாசில்தார் தனக்கு 'சாஸ்திரியார்' என்று பெயர் வைத்துக் கொண்டு, 'நான் கௌதம ரிஷியின் சந்ததியிலே பிறந்தேன்' என்பதாகப் பெருமை பாராட்டிக் கொள்ளு கிறான். இப்படியே, வைசியத் தொழில் சூத்திரத் தொழில் என்ற கௌரவத் தொழில்கள் செய்வோரும், இவற்றிற்குப் புறம்பான புலைத்தொழில்கள் செய்வோருமாகிய பல போலிப் பார்ப்பார், தங்களுக்கு இயற்கையாகவுள்ள பெரு மையை மறந்துவிட்டுப் பொய்ப்பெருமையைக் கொண் டாடி வருகிறார்கள்.

நாட்டிலே இவ்விஷயமான விவாதங்களும் போராட் டங்களும் அதிகரிக்கின்றன. இத்தருணத்தில் நமது வேதம் இவ்விவகாரத்தைப் பற்றி என்ன அபிப்பிராயம் கொடுக் கிறது என்பது ஆராயத்தக்க பொருளாகும்.

வஜ்ரஸூசீ உபநிஷத்து பின் வருமாறு :—

ஞானமற்றவர்களுக்குத் தூஷணமாகவும், ஞானக் கண்ணுடையவர்க்குப் பூஷணமாகவும் விளங்குவதும், அஞ்ஞானத்தை உடைப்பதுமாகிய "வஜ்ர ஸூசீ" என்ற சாஸ்திரத்தைக் கூறுகிறேன் :—

'பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்று நான்கு வர்ணங்கள் உண்டு. அவற்றிலே, பிராமணன் பிரதானமானவன் என்று வேதவசனத்தைத் தழுவி ஸ்மிருதிகளாலும் சொல்லப்படுகிறது. அதில் பிராமணன் யாரென்பது பரிசோதிக்கத்தக்கதாகும். ஒருவன் தன்னைப் பிராமணன் என்று சொல்லிக்கொள்ளுகிறான். அங்ஙனம் பிராமணன் என்பது அவனுடைய ஜீவனையா? தேகத்தையா? பிறப்பையா? அறிவையா? செய்கையையா? தர்மகுணத்தையா? அவனுடைய ஜீவனே பிராமணனென்றால் அஃதன்று. முன் இறந்தனவும், இனி வருவனவும் இப்போதுள்ளனவும் ஆகிய உடல்களிலெல்லாம் ஜீவன் ஒரே ரூபமுடையதாயிருக்கின்றது. ஒருவனுக்கே செய்கை வசத்தால் பலவித உடல்கள் உண்டாகும்போது, எல்லா உடல்களிலும் ஜீவன் ஒரே ரூபமுடையதாகத் தான் இருக்கின்றது. ஆகையால், (அவனுடைய) ஜீவன் பிராமணனாக மாட்டாது. ஆயின், (அவனது) தேஹம் பிராமணனெனில் அதுவுமன்று, சண்டாளன் வரையுள்ள எல்லா மனிதருக்கும் பஞ்சபூதங்களால் ஆக்கப்பட்ட உடலும் ஒரே அமைப்புடையதாகத் தானிருக்கின்றது. மூப்பு, மரணம், பல்கள், இயலின்மைகள்—இவையனைத்தும் எல்லா உடல்களிலும் சமமாகக் காணப்படுகின்றன. மேலும், பிராமணன் வெள்ளை நிறமுடையவன், க்ஷத்திரியன் செந்நிறமுடையவன், வைசியன் மஞ்சள் நிறமுடையவன், சூத்திரன் கருமை நிறமுடையவன் என்பதாக ஓர் நியமத்

தையும் காணவில்லை. இன்னும், உடல் பார்ப்பானுயின் தகப்பன் முதலியவர்களை இறந்தபின் கொளுத்தும் மகன் முதலியவர்களுக்குப் பிரமஹத்தி தோஷம் உண்டாகும். ஆதலால், (அவனுடைய) தேஹம் பிராமணனு மாட்டாது. ஆயின், பிறப்புப்பற்றி பிராமணன் என்று கொள்வோமென்றால், அதுவுமன்று. மனிதப் பிறவியற்ற ஜந்துக்களிடமிருந்துகூடப் பல ரிஷிகள் பிறந்தார்கள் என்று கதைகளுண்டு. ரிஷ்யசிருங்கர் மானிலிருந்தும், ஜாம்பூகர் நரியிலிருந்தும், வால்மீகர் புற்றிலிருந்தும், கௌதமர் முயல் முதுகிலிருந்தும் பிறந்ததாகக் கதை கேட்டிருக்கிறோம். அதுபோக, வஸிஷ்டர் ஊர்வசி வயிற்றில் பிறந்தவர்; வியாஸர் மீன் வலைச்சியின் வயிற்றில் பிறந்தவர்; அகஸ்தியர் கலசத்திலே பிறந்ததாகச் சொல்லுவார்கள். முன்னுளில் ஞானத்தில் பெருமை யடைந்தவர்களாகிய பல ரிஷிகளின் பிறவிவகை தெரியாமலேயே இருக்கிறது. ஆகையால், பிராமணத்துவம் பிறப்புப் பற்றியதன்று. ஆயின், அறிவினால் பிராமணன் எனக் கொள்வோமென்றால், அதுவுமன்று. க்ஷத்திரியர் முதலிய மற்ற வர்ணத்தவர்களிற் கூட அநேகர் உண்மை தெரிந்த அறிவாளிகளாயிருக்கிறார்கள். ஆதலால், அறிவுபற்றி ஒருவன் பிராமணன் ஆகமாட்டான். ஆயின், செய்கை பற்றி ஒருவனைப் பிராமணனாகக் கொள்வோமெனில் அதுவுமன்று. பிராரப்தம், சஞ்சிதம், ஆகாமியம் என்ற மூவகைச் செயல்களும், ஒரே விதமான இயற்கையுடையனவாகவே காணப்படுகின்றன. முன் செயல்களால் தூண்டப்பட்டு, ஜனங்களெல்லோரும் பின் செயல்கள் செய்கிறார்கள். ஆதலால், செய்கைபற்றி ஒருவன் பிராமணனாய் விடமாட்டான். பின், தர்மஞ் செய்வோனைப் பிராமணனாகக் கொள்வோமென்றால், க்ஷத்திரியன் முதலிய நான்கு வருணத்தவரும் தர்மஞ் செய்கிறார்கள். ஆதலால், ஒருவன் தருமச் செ

கையைப் பற்றியே பிராமணனுகி விடமாட்டான். அப்படியானல், யார்தான் பிராமணன்? எவனொருவன் இரண்டற்றதும், பிறவி, குணம், தொழில் என்பவை இல்லாததும், உள்ளும் புறமும் ஆகாசம் போலக் கலந்திருப்பதும், அளவிடக் கூடாததும், அனுபவத்தால் உணரத்தக்கதுமாகிய இறுதிப் பொருளை, நேருக்குநேராகத் தெரிந்து காமம், குரோதம் முதலிய குற்றங்களில்லாதவனுய், பாபம், மாற்சரியம், விருப்பம், ஆசை, மோகம் முதலியவை நீங்கினவனுய், இடம்பம் அகங்காரம் முதலியவை பொருந்தாத நெஞ்ச முடையவனுய் இருக்கின்ருனே, இங்ஙனம் கூறப்பட்ட இலக்கணமுடையவனே பிராமணனென்பது சுருதி, ஸ்மிருதி, புராண, இதிகாச மென்பவற்றின் அபிப்பிராயமாகும். மற்றப்படி ஒருவனுக்கு பிராமணத்துவம் சித்தியாகாது என்பது உபநிஷத்து.

பிராமணராக வேண்டுவோர் மேற்கூறப்பட்ட நிலைமையைப் பெற முயற்சி செய்யக் கடவர். க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் முதலிய மற்ற லௌகிக வர்ணங்களுக்கும் இதுபோலவே தக்கவாறு லக்ஷணங்கள் அமைத்துக் கொள்க. அவ்வவ் விலக்கணங்கள் பொருந்தியவர்களே அவ்வவ் வருணத்தினரென்று மதிக்கத்தக்கவர்கள். அந்த இலக்கணங்கள் இல்லாதவர்கள் அவற்றைபடைய முயற்சி செய்யவேண்டும். போலீஸ் வேவுத் தொழில் செய்பவன் பிராமணன் ஆகமாட்டான். குமாஸ்தா வேலை செய்பவன் க்ஷத்திரியன் ஆகமாட்டான். சோம்பேறியாக முன்னேர் வைத்து விட்டுப் போன பொருளை யழித்துத் தின்பவன் வைசியன் ஆகமாட்டான். கைத்தொழில்களை யெல்லாம் இறக்கக் கொடுத்துவிட்டுச் சோற்றுக்குக் கஷ்டமடைவோர் சூத்திரர் ஆகமாட்டார்கள். இவர்களெல்லாம் மேம்பாடுடைய ஆரிய வர்ணங்கள் நான்கிற்கும் புறம்பாகிய நீசக்கூட்டத்தார். நமது தேசம்

முன்போலக் கீர்த்திக்கு வரவேண்டுமானால், உண்மையான வகுப்புகள் ஏற்படவேண்டும். பொய் வகுப்புகளும் போலிப் பெருமைகளும் நசிக்க வேண்டும். இது நம்முடைய வேத சாஸ்திரங்களின் கருத்து.

போலிப் பெரிய மனுஷத்தன்மை

ஏதாவது ஒரு சிறிய உத்யோகம்வந்துவிட்டாலும் ஒரு போலிப் பெரியமனுஷத்தன்மை வந்துவிடுகிறது. உடனே தன்னை நவாப் என்று நினைத்துக் கொள்கிறான். இதைப் பெரிய மனுஷத்தன்மை என்ற கட்டுரையில் எள்ளி நகை யாடுகின்கிறார் பாரதியார்.

பெரிய மனுஷத்தன்மை

இன்னுமொரு தொல்லை. பெரிய மனுஷத்தன்மைக் கும் சரீரவுழைப்புக்கும் விரோதம் என்று நம்மவர்களில் சிலரின் மனதில் எந்தப் பிசாசோ எழுதிவைத்துவிட்டது. ஆகையால், சொற்பப்பணமுடையவன்கூட, தனக்கு ஜலம் கொண்டு கொடுக்க ஓராளும், குளிப்பாட்ட ஓராளும், தலை துவட்ட ஓராளும் வைத்துக்கொண்டு, பாயோடே கிடக் கும் கிழவியைப் போல் நடந்து கொள்கிறான். மாதம் முப்பது ரூபாய் சம்பளம் வந்தால் போதும், வீட்டிலே அவன் பெரிய நவாப்! கைகாலை அசைக்க மாட்டான். மேல் மாடத்திலே போய் ஒரு புஸ்தகம் அல்லது மேல் வேஷ்டி எடுத்துக்கொண்டு வரவேண்டுமானால், அவன் போக மாட்டான். பந்துக்களை ஏவுவான். வயதிலே சிறிய வராயிருந்தால் அவர்களை விலையடிமைபோலே நடத்து வான், அற்பக் காரியங்களுக் கெல்லாம் ஒருவரையொருவ வேலையேவி வதைக்கும் தொல்லை நமக்குள்ளே மிகவு அதிகம். இக்காலத்திலே வரதட்சிணைபற்றிப் பலமாக எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது.

பாரதியார் 1915-ம், ஆண்டு ஜூன் மாதம் 15-ந்தேதியில் வெளிவந்த எதிர்ஜாமீன் அல்லது மாப்பிள்ளை விலை என்ற கட்டுரையில் வரதட்சிணையைப்பற்றி அழுத்தமாகக் கண்டித்திருக்கிறார்.

எதிர்ஜாமீன் அல்லது மாப்பிள்ளை விலை

நமது தேசத்தில் வறுமை அதிகம். முன்னேயிருந்தவர்களின் கோழைத்தன்மை, ஒற்றுமைக்குறைவு, சாஸ்திர ஞானமில்லாமை, பலதேச விவகாரங்கள் தெரியாமை, மூடகர்வங்கள் முதலியவற்றால் லக்ஷ்மியை இழந்தோம். மேற்படி குணங்கள் இன்னும் நம்மைவிட்டு நன்றாக நீங்கவில்லை. நாளொன்றுக்குச் சராசரியாக நமது நாட்டில் ஒரு மனிதனுக்கு மூக்காலணா வரும்படியென்று கணக்காளிகள் சொல்லுகின்றார்கள்; அதாவது, நரகத்துன்பம் உலகத்தில் வேறெந்த நாட்டிலும் இப்படி இல்லை.

இந்த நிலையில் நமக்குள்ளே பலர் பலவிதமான இழிந்த காரியங்கள் செய்வது வியப்பில்லை. மிகுந்த செல்வமுடைய நாடுகளிலேகூட மனிதர் பணத்துக்காக எத்தனையோ மானங்கெட்ட காரியங்கள் செய்கிறார்கள். ஏழைத் தேசத்தாராகிய நாம் இவ்வளவு மானத்துடன் பிழைப்பதே பெரிய காரியம்.

பணம், பொதுக்கல்வி, விடுதலை மூன்றும் இல்லாவிட்டால் அந்த நாட்டில் மானமேது?

பிராமணருக்குள் விவாஹகாலங்களிலே எதிர் ஜாமீன் கேட்கும் வழக்கத்தை நிறுத்திவிடவேண்டும் என்று சில வருஷங்களாகப் பலர் பேசிவருகிறார்கள். மானமுடைய தேசங்களிலே சீதனம் கொடுத்தல் பெண்களின் பெற்றோர் செய்வது சாதாரணமேயாம். ஆனால், மாப்பிள்ளைகளுக்கு

விலைத்தரங்கள் போட்டு, இன்ன பரீக்ஷை தேறினவனுக்கு இத்தனை ரூபாய் கிரயம் என முடிவு செய்து வைத்து அதன்படி விவாஹங்கள் நடத்தும் வழக்கமில்லை.

சீனு, ஜப்பான், நவீன பாரசீகம் முதலிய எல்லா மனுஷ்ய தேசங்களிலேயும் விவாஹம் அன்பையே ஆதாரமாகக்கொண்டு செய்யப்படுகிறது. இங்கே, பணத்துக்காக விவாஹங்கள் செய்து கொள்ளுகிறார்கள். சாதாரணமாகப் பெண்களுக்கு விலைகூறி விற்பது வழக்கமாவே இருந்தது. இப்போது "பூசுரர்" (பூமண்டலத்திலே தேவர்) ஆகிய பிராமணக் கூட்டத்தார் மாப்பிள்ளைக்கு விலை போட்டு விற்கத் தொடங்கி இருக்கிறார்கள். புண்ய பூமி! பணம் கொடுக்கச் சொல்லி ஏழைக் குடும்பத்தாரை வதை செய்யும் போதுதான் துன்பம் அதிகப்படுகிறது. பெண்கள் ருதுவாகுமுன்பு விவாகம் நடந்து தீரவேண்டும். ஒரு ஜாதியிலே, ஒரு பிரிவிலே, ஒரு சாகையிலே, ஒரு கிளையிலே, ஒரு பகுதியியேல, ஒரு வகுப்பிலே, ஒரு கோணத்திலே, ஓரோரத்துக்குள்ளேதான் ஸம்பந்தங்கள் செய்துகொள்ளலாம். இல்லாவிட்டால் "ஸநாதன அதர்மம்" முட்டவருகிறது. மாப்பிள்ளைகளோ உயர்ந்த கிரயங்கள் கொடுத்தாலொழிய அகப்படுவதில்லை. முக்கால் வாசிக் குடும்பத்தார் நித்திய ஜீவனத்துக்கு வழியில்லாத ஏழைகள். நாலைந்து பெண்களைப் பெற்றுவிட்டால், இந்த ஏழைகள் என்ன செய்வார்கள்? திருநெல்வேலி ஜில்லாவில் எனக்குத் தெரிந்த ஒரு கிராமத்திலே ஒரு பெண்ணுக்கு விவாஹம் நடந்தபோது, இவளுடைய பெற்றோர் மாப்பிள்ளைக்குப் பணங் கொடுத்தார்கள். பிறகு ருது சாந்தியின் போது, அந்த மாப்பிள்ளை, "ஐந்நூறு ரூபாய் கொடுத்தால் தான் ருதுசாந்தி செய்து கொள்வேன். இல்லாவிட்டால் பெண் உங்கள் வீட்டோடே இருக்கட்டும்" என்று சொல்லி ஐந்நூறு ரூபாய் தண்டம் வாங்கிக் கொண்டான்.

இதுபோலவே சீமந்தத்துக்கும் கிரயம் வாங்கிக் காண்டான். பிறகு அந்தப் பெண்ணை விலக்கி வைத்து ட்டு, வேறொரு பெண்ணை விவாகம் செய்து கொண்டு, து மாமனாரிடத்திலும் முன்னைப் போலவே 'பண சூல்கள்' செய்து வருகிறான். பணம் கொடுக்க வழி இல்லாத குடும்பத்தாரும், அவர்களைப் பார்த்துப் இதவிக்கும் சிலரும், இந்தவிஷயத்தில் ஏதேனும் சீர்திருத் மும் செய்யவேண்டும் என்று விரும்புகிறார்கள். கல்யாண மாகாமல் காலேஜிகளில் படிக்கும் பிரமசாரிப் பிள்ளைகள் மக்குள் கூடி, இனிமேல் மாமனாரிடம் தண்டம் வாங்குவ தில்லை என்று பிரதிக்கினை செய்துகொள்ளவேண்டுமென்று லர் சொல்லுகிறார்கள். பிள்ளையின் தகப்பனன்றோ பணம் வாங்குகிறான்? அதற்குப் பிள்ளை சபதம் செய்து கொண் டால் என்ன பிரயோஜனம்? நியாயத்தில்கூடத் தகப்பன் வார்த்தையை மீறி நடக்கும் பிள்ளைகள் நமது நாட்டிலே பலரில்லை. இதுவெல்லாம் வீண் வார்த்தை. பெண்களுக்கு விடுதலையுண்டானால் ஒழிய விவாக சம்பந்தமான ஆயிரத் தெட்டு ஊழல்கள் நீங்க வழியில்லை.

பாரதியாரும் சின்னச் சங்கரன் கதையும்

பாரதியார் எழுதிய சின்னச் சங்கரன் கதை முழுக்க முழுக்க நகைச்சுவையும், நையாண்டியும், கிண்டல்களு மாக அமைந்துள்ளது. எந்தப் பக்கத்தை எடுத்துக்காட் டாகத் தரலாம் என்பது இயலாத காரியம். அத்தனை அழகும் வஞ்சப் புகழ்ச்சியும் நிறைந்தது. வேண்டுமானால் சின்னச் சங்கரன் கதையையே முழுவதுமாகப் படித்துக் கொள்ளுங்கள். பாரதியாரின் நகைச்சுவை உணர்வுக்கு இது மிகச்சிறந்த எடுத்துக் காட்டு.

பாரதியார் நகைச்சுவை இல்லாத இடத்திலும்கூட நகைச்சுவையைக் காண்பவர். பாரதியார் நகைப்பு வந்து

விட்டால் கடகடவென்று உரக்கச் சிரிப்பாராம். தமிழை இழிவாகப் பேசுதல், பெண்ணை இழிவாகப் பேசுதல், நாட்டை இழிவாகப்பேசுதல் என்முல் பாரதியாருக்கு அடங்கா கோபம் வந்துவிடும். அப்பொழுது மிகக் கூரிய வசன களால் தமது கோபத்தை வெளிப்படுத்தி விடுவார். அடுத் கணத்தில் அதை மறந்துவிடுவார். நகைச்சுவை வஞ்ச புகழ்ச்சி மட்டும பாரதியாருக்கு இயல்பாகவே அமை திருந்தது என்பதற்கு மேலும் ஓர் எடுத்துக் காட்டா அமைகிறது இந்தக் கதை. இதனுல்தான் தமது வறுமை துன்பத்தை மகிழ்ச்சியோடு பொறுத்துக்கொண்டிருந்தா என்பதை, இதுவரையிலும் அவரது கவிதையிலும் உ நடையிலும் பார்த்தோம். நகைச்சுவை என்முல் வெறு வேடிக்கை அல்ல. அது என்றும் நகைப்பை உண்டாக் வல்லது. படித்துப்படித்து இன்புறலாம். சின்னச் சங்கர கதையையும், இடிப்பள்ளிக்கூடத்தையும், எலிக்குஞ் செட்டியாரையும் இப்பொழுது நினைத்தாலும் சிரிப் வருகின்றது. எப்பொழுது நினைத்தாலும் சிரிப்பு வரு என்பதில் ஐயமில்லை. வறுமைத் துன்பத்திலும் நமக் நகைச்சுவையை அளித்த மகாகவியைப் போற்றுவோம்.

உண்மையான நகைச்சுவை எழுத்தாளர்கள் தமிழி அதிகமாக இல்லை. அந்த வகையிலும் முன்னேடியாக திகழ்ந்த நமது மகாகவியைப் போற்றிப் பாராட் வோமாக.

வஞ்சனை செய்து ஜீவிப்பவன் நரி

புனர்ஜன்மம் (2)

புனர்ஜன்மம் என்ற கட்டுரையிலே மனிதனே மி மாகின்முன். தேவாங்கு என்றும் வேட்டைநாய் என்ற வௌவால் என்றும் கிளிப்பிள்ளை என்றும் மனிதனை பழிக்கிமுர். அதே சமயத்தில் தர்மத்தை ஆதரி

 மார்த்தத்தை அறிய முயலுகிறவனே மனிதன் என்றும், தவன் என்றும் சொல்வதற்குரியவனுவான். மிருக ர்மங்களை நீக்கிவிட்டு உண்மை மனிதனுக வேண்டும் னகிருர் பாரதியார்.

பாப புண்ணியங்களுக்கு இணங்க மானிடரின் கர்மத்தி டைய பலனை அடுத்த ஜன்மத்தில் உயர்ந்த பிறப் னும் தாழ்ந்த பிறப்பேனும் கிடைக்கும் என்பது நமது சத்துப் பொதுநம்பிக்கை. பாவம் செய்யும் ஒருவனை 'அடுத்த ஜன்மத்தில் மிருகமாகப் பிறப்பாய்' என்ருல், வனுடைய மனம் பதைக்கிறது. ஆனுல், இந்த ஜன்மத்தி லயே தாம் மிருகங்களைப் போலிருப்பதைக் கவனிப்பது டையாது. ஒவ்வொரு நிமிஷத்திலேயும் ஒருவன் னக்கும் நினைப்புகளும் செய்யும் செய்கைகளும் அவன் வவிதப் பிறவிகளை அடைவதற்குக் காரணமாகின்றன. ந்த உலகத்திலேயே, இப்பொழுதே, ஒரே சரீரத்தி ள்ள ஒருவன், ஆயிரம் பிறவிகள் பிறந்து மடிகிருன். வ்வொரு க்ஷணமும் ஒவ்வொருவனும் பிறந்து பிறந்து டிகிருன்; ஒவ்வொரு க்ஷணமும் ஒவ்வொருவனும் பிறந்து றந்து மாய்கிருன் என்று கூறத் தகும். மிருகங்களைப் பான்ற மனிதர்களை நாம் பார்த்ததில்லையா? நம்மை ம் கவனிக்குமிடத்து, எத்தனை விதமான மிருங்களா நந்திருக்கிருேம் என்பது தெரியும். வஞ்சனையாலும், த்திரத்தாலும் சமயத்திற் கேற்பப் பலவிதக் டங்கள் செய்து ஜீவிப்பவன் நரிதானே? ஊக்க ல்லாமல் ஏதேனுமொன்றை நினைத்துக்கொண்டு மனஞ் ார்ந்து தலைகவிழ்ந்து உட்கார்ந்திருப்பவன் தேவாங்கு. றைந்திருந்து பிறருக்குத் தீங்கு செய்பவன் பாம்பு. மத்திலும் புகழிலும் விருப்பமில்லாமல், அற்ப சுகத் லே மூழ்கிக் கிடப்பவன் பன்றி. சுயாதீனத்திலே ச்சையில்லாமல் பிறர்களுக்குப் பிரியமாக நடந்து

கொண்டு, அவர்கள் கொடுத்ததை வாங்கி வயிறு வளர்ப்பவன் நாய். கண்ட விஷயங்களிலெல்லாம் திடீர் திடீர் என்று கோபமடைகிறவன் வேட்டைநாய். காங்கிரஸ் சபையிலேயும் சேர்ந்து கொண்டு, ஆங்கிலேய அதிகாரிகளுக்கும் ஹிதமாக நடக்க வேண்டுமென்ற விருப்பமுடைய 'மேத்தா' கட்சியைச் சேர்ந்தவன் வௌவால். அறிவுத் துணிவால் பெரும் பொருள்களைத் தேர்ந்து கொள்ளாமல், முன்னோர் சாஸ்திரங்களைத் திரும்பத் திரும்ப வாயினால் சொல்லிக் கொண்டிருப்பவன் கிளிப் பிள்ளை. பிறர் தன்னை எவ்வளவு அவமதிப்பதாக நடத்திய போதிலும், அவன் அக்கிரமத்தை நிறுத்த முயலாமல் தனது மந்தகுணத்தால் பொறுத்துக் கொண்டிருப்பவன் கழுதை. வீண் மினுக்கு மினுக்கி டம்பம் பாராட்டுகின்றவன் வான்கோழி. கல்வியறிவில்லாதவனை மிருகக் கூட்டத்திலேயும் சேர்க்கலாகாது; அவன் தூண். தான் சிரமப்படாமல் பிறர் சொத்தை அபகரித்து உண்ணுபவன் கழுகு. ஓர் நவீன உண்மை வரும்போது, அதைஆவலோடு அங்கீகரித்துக் கொள்ளாமல் வெறுப்படைகிறவன் (வெளிச்சத்தைக் கண்டு அஞ்சும்) ஆந்தை.

ஒவ்வொரு நிமிஷமும் சத்தியமே பேசித் தர்மத்தை ஆதரித்துப் பரமார்த்தத்தை அறிய முயலுகிறவனே மனிதனென்றும் தேவனென்றும் சொல்வதற்குரியவனாவான். மிருக ஜன்மங்களை நாம் ஒவ்வொருவரும் க்ஷணந்தோறும் நீக்க முயலவேண்டும்.

இந்தியாவில் விதவைகளின் பரிதாபகரமான நிலைமை

குறிப்பு : "கொடிய வெந்நாக பாசத்தை மாற்ற மூலிகை கொணர்ந்தவன் என்கோ? இடிமின்னல் தாங்கும் குடை செய்தான் என்கோ? என்சொலிப் புகழ்வதிங்

ஞேயே?" என்றும், "மஹாத்மா நீ வாழ்க வாழ்க" என்றும் காந்தி அடிகளை வாயாரப் புகழ்கின்றார் பாரதியார். அவருக்குக் காந்தி அடிகளின் அஹிம்ஸைக் கொள்கையால் தான் இந்தியாவுக்கு விடுதலை கிடைக்கும் என்று தமது மிக நுட்பமான உள்ளுணர்வு கூறுகின்றது. ஆகவேதான், 'மஹாத்மா' நீ வாழ்க வாழ்க என்று வாழ்த்துகின்றார். ஆனால் கருத்து வேறுபடும்போது, பாரதியாருக்கு யாரிடமும் தயவு தாட்சண்யம் பார்ப்பது பழக்கம் இல்லை. அவருடைய கொள்கைக்கு மாறுபட்டால், அதை உடனே வெளிப்படையாகச் சொல்லிவிடுவார். இந்தியாவில் விதவைகளின் பரிதாபகரமான நிலைமையைக் குறித்தும் இவ்வாறே சொல்வது கவனிக்கத்தக்கது. ஒரு வயதுடைய கைம்பெண்கள் ஆயிரத்துப் பதினுலு பேர்கள் இருக்கின்றார்கள் என்று அறிந்தபோது அவருக்குச் சினத்தீ மூண்டெழுகின்றது. ஸ்ரீமான் காந்தி சொல்லும் உபாயம் அவருக்கு முற்றிலும் பிடித்தமானதாக இருக்கவில்லை. அதனால்தான் அவருக்குத் தைரியம் இல்லையென்றும், மழுப்புகிறார் என்றும் சொற்களைப் பிரயோகப் படுத்துகின்றார். இக்கட்டுரையை வாசித்து அறிந்தவர்கள் இதன் உண்மையை உணர்வார்கள்.

ஸ்ரீமான் மோஹனதாஸ் கரம்சந்திர காந்தி (மகாத்மா காந்தி) யால் நடத்தப்படும் "நவஜீவன்" என்ற பத்திரிகையில், ஒருவர் பாரததேசத்து விதவைகளைப் பற்றிய சில கணக்குகளைப் பிரசுரம் செய்திருக்கிறார்.

அவற்றுள் குழந்தை, கைம்பெண்களைப் பற்றிய பின்வரும் கணக்கு மிகவும் குறிப்பிடத்தக்கது.

வயது	மணம்புரிந்த மாதர்	கைம்பெண்கள்
0-1	13212	1014
1-2	17753	856

2-3	49,787	1,807
3-4	1,34,105	9,273
4-5	3,02,425	17,703
5-10	22,19,778	94,240
10-15	1,00,87,024	2,23,320

இந்தக் கணக்கின்படி, இந்தியாவில் பிறந்து ஒரு வருஷமாகு முன்னரே விதவைகளாய்விட்ட மாதர்களின் தொகை 1,014! 15 வயதுக்குக் குறைந்த கைம்பெண்களின் தொகை 3½ லக்ஷம்! இவர்களில் சற்றுக் குறைய 18000 பேர் ஐந்துவயதுக் குட்பட்டோர்!

இப்படிப்பட்ட கணக்குகள் சில கொடுத்துவிட்டு, அவற்றின் இறுதியில், மேற்படி கடிதம் எழுதியவர். "இக் கைம்பெண்களின் மொத்தத் தொகை மிகவும் அதிகமாக இருக்கிறது. இதைப் படிக்கும்போது எந்த மனிதனுடைய மனமும் இளகிவிடும். (இந்நாட்டில்) விதவைகள் என்ற பாகுபாட்டை நீக்க முயல்வோர் யாருளர்?" என்று சொல்லி வருத்தப்படுகிறார்.

இந்த வியாசத்தின்மீது மகாத்மா காந்தி பத்திராதிபர் என்ற முறையில் வியாக்கியானம் எழுதியிருக்கிறார். அந்த வியாக்கியானம் ஆரம்பத்தில், ஸ்ரீமான் காந்தி "மேலே காட்டிய தொகையைப் படிப்போர் அழுவார்கள் என்பது திண்ணம்" என்கிறார். அப்பால், இந்த நிலைமையை நீக்கும் பொருட்டு, தமக்குப் புலப்படும் உபாயங்களில் சிலவற்றை எடுத்துச் சொல்லுகிறார். அவற்றின் சுருக்கம் யாதெனில் (1) பால்ய விவாகத்தை நிறுத்திவிட வேண்டுமென்பதும் (2) 15 வயதுக்குட்பட்ட கைம்பெண்களும் மற்ற இளமையுடைய கைம்பெண்களும் புனர் விவாகம் செய்துகொள்ள இடம் கொடுக்க வேண்டுமென்பதுமே யாகும்,

ஆனால், இந்த உபாயங்களை விருப்பமுடையோர் அநுசரிக்கலாமென்றும், தமக்கு இவற்றை அநுசரிப்பதில் விருப்பமில்லையென்றும், தம்முடைய குடும்பத்திலேயே பல விதவைகள் இருக்கலாமென்றும், அவர்கள் புனர் விவாகத் தைப்பற்றி யோசிக்கவே மாட்டார்களென்றும், தாமும் அவர்கள் மறுமணம் செய்துகொள்ளும்படி கேட்க விரும்ப வில்லை என்றும், ஸ்ரீமான் காந்தி சொல்லுகிறார்.

ஸ்ரீமான் காந்தி சொல்லும் உபாயம்

"ஆண்மக்கள் புனர் விவாகம் செய்துகொள்ளுவ தில்லை என்ற விரதம் பூணுதலே விதவைகளின் தொகை யைக் குறைக்கும் அருமருந்தாகும்" என்று ஸ்ரீமான் காந்தி அபிப்பிராயப்படுகிறார். இந்த விநோதமான உபாயத்தை முதல்முறை வாசித்துப் பார்த்தபோது, எனக்கு ஸ்ரீமான் காந்தியின் உட்கருத்து இன்னதென்று விளங்கவில்லை. அப்பால், இரண்டு நிமிஷம் யோசனை செய்து பார்த்த பிறகுதான், அவர் கருத்து இன்னதென்பது தெளிவு படலாயிற்று. அதாவது, 'முதல் தாரத்தை சாகக்கொடுத் தவன் பெரும்பாலும் கிழவனாகவே யிருப்பான். அவன் மறுபடி ஒரு சிறு பெண்ணை மணம் புரியுமிடத்தே, அவன் விரைவில் இறந்துபோய் அப்பெண் விதவையாக மிஞ்சி நிற்க இடமுண்டாகிறது. ஆதலால் ஒருமுறை மனைவியை இழந்தோர் பிறகு மணம் செய்யாதிருப்பதே விதவைகளின் தொகையைக் குறைக்க வழியாகும்' என்பது ஸ்ரீமான் காந்தியின் தீர்மானம்.

சபாஷ்! இது மிகவும் நேர்த்தியான உபாயம்தான். ஆனால், இதில் ஒரு பெரிய சங்கடம் இருக்கிறது. அது யாதெனில், இந்த உபாயத்தின்படி ஆண்மக்கள் ஒரு போதும் நடக்க மாட்டார்கள். மேலும், பெரும்

பாலும் கிழவர்களே முதல் தாரத்தை இழப்பதாக ஸ்ரீமான் காந்தி நினைப்பதும் தவறு. 'இந்தியாவில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சராசரி 25-ம் பிராயத்தில் மரணம் நேருகிறது' என்பதை ஸ்ரீமான் காந்தி மறந்துவிட்டார். எனவே, இளம்பிராயமுடைய பலரும் மனைவியரை இழந்துவிடுகிறார்கள். அவர்கள் ஸ்ரீமான் காந்தி சொல்லும் சந்நியாச மார்க்கத்தை ஒருபோதும் அநுஷ்டிக்க மாட்டார்கள். அவர்கள் அங்ஙனம் அநுஷ்டிப்பதினின்றும் தேசத்துக்குப் பல துறைகளிலும் தீமைவிளையுமேயன்றி நன்மை விளையாது. ஆதலால் அவர்கள் அங்ஙனம் துறவு பூணும்படி கேட்பது நியாயமில்லை.

ஸ்திரீ—விதவைகளின் தொகையைக் குறைக்க வழி கேட்டால், ஸ்ரீமான் காந்தி "புருஷ—விதவை"களின் (அதாவது : புனர் விவாகமின்றி வருந்தும் ஆண்மக்களின் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்கிறார்! இதினின்றும், இப்போது ஸ்திரீ—விதவைகளின் பெருந்தொகையைக் கண்டு தமக்கு அழுகை வருவதாக ஸ்ரீமான் காந்தி சொல்லுவதுபோல், அப்பால் புருஷ விதவைகளின் பெருந்தொகையைக் கண்டு அழுவதற்கு ஹேது உண்டாகும்.

மேலும், ஆணுக்கேனும், பெண்ணுக்கேனும் இளமைப் பிராயம் கடந்த மாத்திரத்திலே போக விருப்பமும் போகசக்தியும் இல்லாமற் போகும்படி கடவுள் விதிக்கவில்லை. உலகத்தின் நலத்தைக் கருதி கடவுளால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் போக இச்சையை அக்கிரமமான வழிகளில் தீர்த்துக்கொள்ள முயல்வோரை மாத்திரமே நாம் கண்டிக்கலாம். கிரமமாக ஒரு ஸ்திரீயை மணம் புரிந்துகொண்டு அவளுடன் வாழ விரும்புவோர் வயது முதிர்ந்தோராயினும் அவர்களைக் குற்றம் சொல்வது நியாயமன்று. சிறிய பெண் குழந்தைகளை வயது முதிர்ந்த ஆண்மக்கள் மணம் புரியலாகாதென்பதை நாம் ஒருவேளை

பேச்சுக்காக ஒப்புக் கொண்டபோதிலும், வயதேறிய பெண்களை வயது முற்றிய ஆண்மக்கள் மணம் புரிந்து கொள்ளக் கூடாதென்று தடுக்க எவனுக்கும் அதிகாரம் கிடையாது. எனவே, எவ்வகையிலே நோக்குமிடத்தும் ஸ்ரீமான் காந்தி சொல்லும் உபாயம் நியாய விரோத மானது; சாத்தியப்படாதது; பயனற்றது.

விதவைகளின் தொகையைக் குறைப்பதற்கும் அவர்க ளுடைய துன்பங்களைத் தீர்ப்பதற்கும் ஒரே வழிதான் இருக் கிறது. நம்முடைய ஜனத்தலைவர்கள் ஜனங்களுக்கு தைர்யம் போதிக்கவேண்டும். அதை ஜனங்கள் எல்லோரும் தைர்யமாக அனுஷ்டிக்கவேண்டும். அதாவது யாதெனில் :—இந்தியாவில் சிற்சில ஜாதியாரைத் தவிர மற்றப்படியுள்ளோர், நாகரீக தேசத்தார் எல்லோரும் செய்கிறபடி, விதவைகள் எந்தப் பிராயத்திலும் தமது பிராயத்துக்கு தகுந்த புருஷரை புனர்விவாகம் செய்து கொள்ளலாம். அப்படியே புருஷர்கள் எந்தப் பிராயத்திலும் தம் வயதுக்குத்தக்க மாதரை மறுமணம் செய்துகொள்ள லாம். இந்த ஏற்பாட்டை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரவேண்டும். வீண் சந்தேகம், பொறாமை, குருட்டுக் காமம், பெண்களை ஆத்மாவில்லாத, ஹ்ருதயமில்லாத, ஸ்வாதீனமில்லாத அடிமைகளாக நடத்தவேண்டுமென்ற கொள்கை, இவற்றைக்கொண்டே நம்மவர்களில் சில புருஷர்கள் ஸ்திரீகளுக்கு புனர்விவாகம் கூடாது என்று சட்டம் போட்டார்கள். அதனாலேதான், மனைவியில்லாத கிழவர்கள் சிறு பெண்களை மணம் புரிய நேரிடுகிறது. அதனாலேதான், ஹிந்து தேசத்து விதவைகளின் வாழ்க்கை நரக வாழ்க்கையினும் கொடியதாய் எண்ணற்ற துன்பங் களுக்கு இடமாகிறது. பால்ய விதவைகள் புனர் விவாகம் செய்து கொள்ளலாமென்று ஸ்ரீமான் காந்தி சொல்லு கிறார். ஆனால் அதைக்கூட உறுதியாகச் சொல்ல அவருக்குத்

தைரியம் இல்லை; மழுப்புகிறார். எல்லா விதவைகளும் மறுமணம் செய்துகொள்ள இடம் கொடுப்பதே இந்தியாவில் மாதருக்குச் செய்யப்படும், அநியாயங்கள் எல்லாவற்றிலும் பெரிதான இந்த அநியாயத்திற்குத் தகுந்த மாற்று. மற்றப் பேச்செல்லாம் வீண் கதை.

அன்மொழித்தொகை ஹாஸ்யம்

பெரும்பாலும் இலக்கணத்திலே நகைச்சுவைக்கு இடம் இருக்காது. இலக்கணத்திலும் நகைச்சுவை காண்பவர் பாரதியார். இதை நீங்களே படித்து அறிந்து கொள்ளலாம்.

கல்வி சம்பந்தமாக இன்னுமொரு மேற்கோள்: கிச்சடியே "மேற்கோள் கிச்சடி" தானே? மிஸ்டர் ஆர்ச்செர் என்ற ஒரு ஆங்கிலேயர் சில தினங்களின் முன்பு லண்டன் பத்திரிக்கை யொன்றில் கல்வியைப் பற்றி எழுதிக் கொண்டு வரும்போது, "இங்கிலாந்திலே இப்பொழுது கல்விக்கு மூலாதாரமாக வசன காவியங்களையும், செய்யுட் காவியங்களையும் வைத்திருப்பது சரியில்லை. ஸயன்ஸ் [இயற்கை நூல்] படிப்புதான் மூலாதாரமாக நிற்க வேண்டும்" என்கிறார்.

இவருடைய கொள்கை பலவித ஆக்ஷேபங்களுக்கிடமானது. ஆனால், தனிப்பள்ளிக்கூடங்கள் எந்த முறையை அனுசரித்த போதிலும், ராஜாங்கப் பள்ளிக்கூடத்தார் இவருடைய கொள்கையைத் தழுவியே படிப்பு நடத்த வேண்டுமென்று நான் நினைக்கிறேன். கற்பனையும், அலங்காரமும் எனக்குக்கூட மிகவும் பிரியந்தான். ஆனால், "நெல் எப்படி விளைகிறது?" என்பதைக் கற்றுக் கொடுக்காமல், அன்மொழித் தொகையாவது யாது? என்று

படிப்புச் சொல்லிக் கொடுப்பதை நினைக்கும்போது, கொஞ்சம் சிரிப்புண்டாகிறது. அன்மொழித் தொகை சிலரைக் காப்பாற்றும்; ஊர் முழுதையும் காப்பாற்ருது. நெல்லுத்தான் ஊர் முழுதையும் காப்பாற்றும். அன்மொழித் தொகையைத் தள்ளிவிட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால் அன்மொழித் தொகையைப் பயிர் செய்து நெல்லை மறந்துவிடுவது சரியான படிப்பில்லை யென்று சொல்லுகிறேன். அவ்வளவுதான்.

(கிச்சடி என்ற கட்டுரையிலிருந்து)

பாரதியாரும் தமிழும் மாதரும்

எதிலும் நகைச்சுவையைக் காண்பவர் பாரதியார். இது பழித்து அறிவுறுத்தலாக இருக்கும்; எள்ளித் திருத்துதலாக இருக்கும். பொதுவாக இவர் மனம் புண் படும்படி நகைச்சுவையைக் கையாளமாட்டார். ஆனால் இந்தப் பொதுவிதிக்கு இரண்டு விதிவிலக்குகள் உண்டு. முன்னே குறிப்பிட்டபடி தாய்மொழியாகி தமிழைக் குறைவாகப் பேசிவிட்டால் அவருக்கு அடங்காத கோபம் வந்துவிடும். வலிமை வாய்ந்த சொற்களால் கேலியும் கிண்டலும் வஞ்சப் புகழ்ச்சியும் இடிமுழக்கமாகக் கொட்டித் தீர்த்து விடுவார். இதற்கு எடுத்துக் காட்டாகத் தமிழ் என்ற கட்டுரை அமைந்துள்ளது. பெண்களை இழிவுபடுத்தினாலும் அடங்காத கோபம் வந்து விடும். பாஞ்சாலி சபதத்திலே துச்சாதனன் பாஞ்சாலி யைக் கூந்தலைப் பற்றி யிழுத்துக்கொண்டு போகும்போது இப்படிப்பட்ட கோபம் பாரதியாருக்கு வந்து விடுகின்றது. முதலில் துச்சாதனனது மனப்பண்புகளை விவரிக்கத் தொடங்குகின்ருர், அவன் எப்பேர்ப்பட்டவனும்? பாரதியாரின் வாக்கிலேயே கேளுங்கள் :

புத்தி விவேகமில்லாதவன்; —புலி
போல உடல்வலி கொண்டவன்;—கரை
தத்தி வழியுஞ் செருக்கினால்; —கள்ளின்
சார்பின்றியே வெறிசான்றவன்;—அவ
சக்தி வழிபற்றி நின்றவன்; —சிவ
சக்தி நெறி உணராதவன்;—இன்பம்
நத்தி மறங்கள் இழைப்பவன்;—என்றும்
நல்லவர் கேண்மை விலக்கினோன்;
அண்ண னொருவனை யன்றியே;—புவி
அத்தனைக் குந்தலை யாயினோம்;—என்னும்
எண்ண நந்தனதிடைக் கொண்டவன்;—அண்ணன்
ஏது சொன்னாலும் மறுத்திடான்;—அருட்
கண்ணழி வெய்திய பாதகன்;—

இவ்வாறு குணம் படைத்தவனைப் பாஞ்சாலியைச் சென்று அழைத்து வரும்படியாக, அரவக்கொடியோனாகிய துரியோதனன் ஏவுகின்றான். துரௌபதிக்கும் துச்சாதன னுக்கும் வாக்குவாதம் நடைபெறுகின்றது, "மாதவிலக் கால் ஓர் ஆடைதனிலிருக்கின்றேன்" என்று சொல்லியும் பார்க்கிறாள் பாஞ்சாலி. என்ன சொல்லியும் துச்சாதனன் மனம் மாறவில்லை. பாஞ்சாலி கூந்தலினைக் கையினால் பற்றிக் கரகரவென இழுத்துச் செல்கின்றான். பாஞ்சாலி ஐயகோ என்று அலறுகின்றாள். "என்ன கொடுமையிது என்று" பார்த்திருந்தாரே தவிர, ஊர்மக்கள் அதைத் தடுக்க முயற்சி செய்யவேயில்லை.

பாரதியாருக்கு இந்த அவலத்தை நினைத்து, கோபம் மூண்டெழுகின்றது. அவர் உரைத்த அனல்கக்கும் கவிதை வரிகளை, அவர் வாக்கிலேயே கேட்போம்.

'என்ன கொடுமை யிதுவென்று பார்த்திருந்தார்.
ஊரவர் தங்கீழ்மை உரைக்குந் தரமாமோ?

வீரமிலா நாய்கள், விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்துத் தராதலத்திற் போக்கியே,
பொன்னையவள் அந்தப் புரத்தினிலே சேர்க்காமல்
நெட்டை மரங்களென நின்று புலம்பினார்.
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?

வீரமிலா நாய்கள் என்று ஊர்மக்களைப் பழிக்கின்றார். துச்சாதனன் இளவரசனா? அவன் ஒரு விலங்கு என்றும், பெரும் மூடன் என்றும் சீறுகின்றார்.

"ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே" என்றும், "அணுவளவு பெண்களை உயர்த்தியும் சொல்லலாம்" என்றும் கூறியவரல்லவா பாரதியார்!

ஆகவே, தாய்மொழி, தாய்க்குலம் என்று வரும் இடத்தைத் தவிரப் பாரதியார் அவ்வளவு பெருங்கோபம் கொண்டதாகக் கூறுவதற்கில்லை. (தமிழைப் பற்றித் தாழ்வாக உரைத்துவிட்ட ஸ்ரீ நீலகண்டய்யரின் மீது எவ்வளவு கடுங்கோபம் வந்தது என்பதைத் தமிழ் என்ற கட்டுரையிலே பார்த்தோம்.) கவிதைகளிலும் உரைநடைகளிலும், நகைச்சுவை கொப்பளிக்கப் பாரதியார் எழுதுவதிலே வல்லவர் என்று இதுவரை காட்டியுள்ள மேற்கோள்களால் விளங்கும். நகைச்சுவை என்றால் ஒருதடவை சிரித்துவிட்டுப் போகக்கூடியதல்ல. பாரதியாருடைய நகைச்சுவை எப்பொழுதும் இன்பம் அளிப்பதாகும். இந்த நகைச்சுவைதான் பாரதியாரைக் கொடிய வறுமையிலும் காத்திருக்கின்றது என்பதை அறியலாம்.

நமக்குத் தொழில் கவிதை
நாட்டிற்கு உழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தல்

என்பது பாரதியார் வாக்கு.

சோர்வடையாமலிருக்க, பாரதியாருடைய இயல்பான நகைச்சுவையும் நையாண்டியுமே காத்திருக்கின்றது என்று கூறலாகும்.

இவ்வாறு நகைச்சுவை குமிழியிட்டுக் கொண்டு வரும் பாரதியாரை, வறுமைக் கனலாலும் பலவித இன்னல்களாலும் அகால மரணமடையத் தமிழ் மக்கள் செய்து விட்டார்கள். புதுவையிலிருந்து வெளிவந்து, பாரதி பண்ணை என்று பல நூல்கள் வெளியிட உற்சாகத்தோடு திட்டமிட்டு வெளியிட்டதற்கும், ஆதரவோ பரிவோ காட்டவில்லை அக்காலத் தமிழர்கள். இதை நினைந்து அழுவதா சிரிப்பதா நையாண்டி செய்வதா வஞ்சப் புகழ்ச்சி பேசுவதா என்பதைத் தமிழர்களின் மனச் சான்றுக்கே விட்டுவிடுகின்றேன். வாராது போல வந்த மாமணியை, மேதையை, மஹாகவியைத் தோற்று விட்டோம் என்பதே என் நெஞ்சத்தின் ஒரு மூலையில் குற்ற உணர்வோடு பளிச்சிடும் எண்ணமாகும்.